தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com


MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan

PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:188 | 23-01-2026 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

23.01.2026 தை 9
வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் 6.35

திதி:
இன்று அதிகாலை 2.08 வரை சதுர்த்தி பின்பு பஞ்சமி.

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 2.08 வரை பூரட்டாதி பின்பு உத்திரட்டாதி.

யோகம் :
இன்று மாலை 3.46 வரை பரிகம் பின்பு சிவம்.

கரணம் :
இன்று அதிகாலை 2.08 வரை பத்திரை பின்பு பிற்பகல் 2.30 வரை பவம் பின்பு பாலவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று பிற்பகல் 2.08 வரை ஆயில்யம் பின்பு மகம்.

நல்ல நேரம்
காலை 9.30 – 10.30.
மாலை 4.30 – 5.30
இராகு காலம்
காலை 10.30 – 12.00.
எமகண்டம்
பிற்பகல் 1.30 – 3.00.

குளிகை
காலை 7.30 – 9.00.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# அ.தி.மு.க. பா.ஜ.க. வலுவான கூட்டணி

**சென்னை, ஜன.23:**

அ.தி.மு.க. பா.ஜ.க. வலுவான கூட்டணி; தமிழகத்தில் ஊழல் தி.மு.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவோம் என்று பியூஸ் கோயல், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் கூட்டாக தெரிவித்தனர்.

அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் சென்னை பசுமைவழி இல்லத்தில், இன்று தமிழக பா.ஜ.க. தேர்தல் பொறுப்பாளரும் மத்திய அமைச்சருமான பியூஷ் கோயலுக்கு காலை விருந்து அளிக்கப்பட்டது.



இதில் எல்.முருகன், நயினார் நாகேந்திரன், வானதி சீனிவாசன், எச்.ராஜா, பொன் ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பாஜக தலைவர்களும் பங்கேற்றனர். அப்போது, அண்ணா தி.மு.க., பா.ஜ.க இடையே தொகுதிப் பங்கீடு குறித்த பேச்சுவார்த்தையும் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த சந்திப்புக்குப் பிறகு எடப்பாடி பழனிசாமி, பியூஷ் கோயல் இருவரும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

பியூஷ் கோயல் கூறியதாவது:

அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி என்னுடைய நீண்டகால நண்பர். எடப்பாடி பழனிசாமி இல்லத்தில் காலை உணவு அருந்தினேன்.

தி.மு.க. ஆட்சியில் ஊழலை தவிர வேறு எதுவுமே நடக்கவில்லை என அனைத்து தரப்பு மக்களும் புரிந்து கொண்டனர். தமிழக மக்களின் நலனுக்காக தி.மு.க. அரசு எதுவுமே செய்யவில்லை. தி.மு.க. ஆட்சியில் பெண்கள், இளைஞர்கள் உள்ளிட்ட அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஊழல் நிறைந்த தி.மு.க. ஆட்சியை முழுமையாக வீழ்த்தி அண்ணா தி.மு.க. கூட்டணி ஆட்சிக்கு வரும்.

தேசிய ஜனநாயக கூட்டணி தமிழகத்திற்கான சிறந்த எதிர்கால வளர்ச்சியை கொண்டு வரும்.

நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு உள்ளான துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பதவி விலக வேண்டும். பிளவுவாத அரசியல் செய்கிறார் துணை முதல்வர். இந்திய சேத்திற்கு எதிரான கருத்தை அவர் கூறிவருகிறார்.

தேசிய ஜனநாயக கூட்டணிக்கு தேசிய அளவில் மோடியும் தமிழகத்தில் பழனிசாமியும் தலைவர்களாக இருப்பார்கள். நாளை நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்று உரையாற்ற உள்ளார் என்றார்.

எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:

"பிரதமர் மோடி தலைமையில் நாளை நடைபெறவுள்ள கூட்டம் தமிழகத்தில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கும். நாளை நடைபெறும் கூட்டத்தில் 5 லட்சம் பேர் பங்கேற்பார்கள். இந்த தொடக்கம் எங்கள் கூட்டணியின் வெற்றிக்கு அச்சாணியாக விளங்கும். தமிழகத்தில் பொதுமக்கள், பெண்களுக்கு பாதுகாப்பில்லாத ஆட்சி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பல துறைகளில் ஊழல் நடந்துள்ளது. இந்த அரசு எல்லா துறைகளிலும் தோல்வியடைந்துள்ளது. சட்டம், ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துள்ளது. மேக் இன் இந்தியா திட்டத்தை உருவாக்கி, இந்தியாவை வல்லரசு நாடாக மாற்றும் பணியில் பிரதமர் ஈடுபட்டு வருகிறார். எங்கள் கூட்டணி வலிமையான கூட்டணி. வலிமையான கூட்டணியாக விளங்கும் தேசிய ஜனநாயக கூட்டணி வரும் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை பெறும்.

மத்தியில் பா.ஜ.க. ஆட்சி, தமிழகத்தில் அ.தி.மு.க. தலைமையிலான ஆட்சி அமையும். நாங்கள் ஆட்சியமைத்தபின், தமிழ்நாடு இதுவரை இல்லாத வளர்ச்சியை அடையும்." இவ்வாறு அவர் கூறினார்.

# "பகுதிநேர ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்"

## பேரவையில் முதல்வர் ஸ்டாலின் உறுதி

**சென்னை, ஜன.23:**

தமிழக சட்டப்பேரவையின் 3-வது நாள் கூட்டம் இன்று நடைபெற்றது. இதில் பேரவை உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு துறையின் அமைச்சர்கள் பதில் அளித்தனர். அந்த வகையில் அதிமுக எம்எல்ஏ தங்கமணி 'அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராட்டம்' குறித்து கேள்வி எழுப்பினார். இதற்கு முதல்வர் ஸ்டாலின் பதில் அளித்தார்.



அப்போது அவர் பேசும்போது, "அரசு ஊழியர்கள் போராடிக் கொண்டிருப்பதை மிகுந்த கவலையோடு, வருத்தத்தோடு, அக்கறையோடு உறுப்பினர் தங்கமணி இங்கே குறிப்பிட்டிருக்கிறார். இந்த அக்கறை உங்கள் ஆட்சியில் ஏன் இல்லை? ஆனால், எங்களைப் பொறுத்தவரையில், திராவிட மாடல் ஆட்சியைப் பொறுத்தவரையில், அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை, அவர்கள் ஏதாவது கோரிக்கை வைத்து போராடுவது அவர்களின் உரிமை. ஆனால், உரிமையோடு போராடக்கூடிய அந்த போராட்டத்தைக்கூட முடிக்க வேண்டும், அது தொடரக்கூடாது என்ற நல்லெண்ணத்தோடுதொடர்ந்து அமைச்சர் பெருமக்கள், அவர்களை எத்தனையோ முறை அழைத்து பேசி, அதை எல்லாம் முழுக்க தீர்க்கவில்லை என்று சொன்னாலும் 95 முதல் 99 சதவிகிதம் தீர்த்து வைத்திருக்கிறோம்.

ஆனால், நாங்கள் TESMA கொண்டுவரவில்லை, ESMA கொண்டுவரவில்லை. இரவோடு இரவாக அவர்களைப்போய் கைது செய்யவில்லை. கொண்டுபோய் ஜெயிலில் அடைக்கவில்லை. இதெல்லாம் கடந்த கால அதிமுக ஆட்சியில் நடந்தது. எங்கள் ஆட்சியில் இல்லை.

இப்போதும் சொல்கிறேன். நாங்கள் அரசு ஊழியர்களுடைய போராட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். அதுமட்டுமல்ல, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக் கூடியவர், முதலமைச்சராக இருந்தபோது அரசு ஊழியர்கள் எந்தெந்த வகையில் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எல்லாம் கொச்சைப்படுத்தி பேசியதை எல்லாம் இந்த நாடு மறந்துவிடவில்லை என்பதையும் உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

23 ஆண்டு கால பிரச்சினையை நாங்கள் தீர்த்து வைத்திருக்கிறோம். தீர்த்து வைத்ததுடன் அரசு ஊழியர் சங்கங்கங்களைச் சார்ந்த பொறுப்பாளர்கள் எல்லாம் கோட்டையில் இருக்கக்கூடிய முதலமைச்சர் அறைக்கு வந்து இதுவரை வரலாற்றில் இல்லாத அளவிற்கு முதலமைச்சர் அறைக்குள்ளேயே வந்து எனக்கு இனிப்பு ஊட்டியது, நான் அவர்களுக்கு இனிப்பு ஊட்டிய காட்சி எல்லாம் நீங்கள் தொலைக்காட்சியிலே பார்த்திருப்பீர்கள். பத்திரிகைகளிலும் பார்த்திருப்பீர்கள். அவர்கள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள்.

அந்த மகிழ்ச்சி உங்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் எதையும் செய்யவில்லை, எதையும் செய்யவில்லை என்று திருப்பி திருப்பி சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் செய்யவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதுதான் நான் வைக்கக்கூடிய கோரிக்கை.

இன்னும் சில பிரச்சினைகள் இருக்கின்றன. நான் முழுவதையும், நூற்றுக்கு நூறையும் நிறைவேற்றிவிட்டேன் என்று சொல்லவில்லை. இன்னும் ஒன்றிரெண்டு சதவீதம் இருக்கிறது. சத்துணவு அமைப்பாளர்கள், அதேபோன்று அங்கன்வாடி அமைப்பாளர்கள் இவர்களையெல்லாம்கூட அழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். அவர்களும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

பகுதிநேர ஆசிரியர்களும் ஒரு பக்கத்திலே போராடிக் கொண்டிருக்கிறார்கள். போராட்டங்கள் பல இடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், அவற்றையெல்லாம் நாங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவில்லை.

அவர்களையெல்லாம் அவ்வப்போது அழைத்துப் பேசி, அவர்களுடைய கோரிக்கையை எந்த அளவிற்கு நிறைவேற்ற முடியும் என்பதை சிந்தித்து, நிச்சயம் சொல்கிறேன், உறுதியாகச் சொல்கிறேன், அந்தக் கோரிக்கைகளும் நிச்சயமாக நிறைவேற்றப்படும். அதில் எந்த கவலையும் பட வேண்டாம். அடுத்த ஆட்சி திராவிட மாடல் ஆட்சிதான் என்பதை உறுதியுடன் சொல்கிறேன்" என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# விஜய்யின் தவெகவுக்கு விசில் சின்னம் ஒதுக்கியது தேர்தல் ஆணையம்!

**சென்னை, ஜன.23**



வரும் சட்டப்பேரவைத் தேர்தலுக்காக தமிழக வெற்றிக் கழகத்துக்கு விசில் சின்னத்தை ஒதுக்கி இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வரும் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதை முன்னிட்டு, அரசியல் கட்சிகள் தேர்தல் பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றன.

சட்டப்பேரவைத் தேர்தலில் முதன்முறையாக போட்டியிட உள்ள தமிழக வெற்றிக் கழகம் சார்பில், சின்னம் ஒதுக்கீடு செய்யக் கோரி இந்திய தேர்தல் ஆணையத்தில் வேண்டுகோள் வைக்கப்பட்டிருந்தது.

விண்ணப்ப படிவத்தில் 10 சின்னங்களை பரிந்துரைத்திருந்தோம். முதல் சின்னமாக விசில் சின்னத்தை தலைவர் விஜய் கேட்டிருந்தார். எங்கள் தலைவருக்கு பிடித்த விசில் சின்னமே ஒதுக்கப்பட்டுள்ளது. இது எங்கள் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சியான தருணம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், கமல் ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு டார்ச்லைட் சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. டார்ச்லைட் சின்னமும் 234 தொகுதிகளுக்கும் பொது சின்னமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

# உரையை முழுமையாக வாசிக்காமல் ஆளுநர் வெளியேறியதால் சட்டப்பேரவையில் அமளி



**பெங்களூரு, ஜன.23:**

கர்நாடக சட்டப்பேரவையின் கூட்டுக் கூட்டத்தில் ஆளுநர் உரையை, ஆளுநர் தாவர்சந்த் கெலாட் முழுமையாக வாசிக்காமல் வெளியேறியதால் அமளி ஏற்பட்டது.

ஆண்டின் முதல் கூட்டத் தொடர் தொடங்குவதை முன்னிட்டு கர்நாடக சட்டப்பேரவையின் கூட்டுக் கூட்டத்தில் ஆளுநர் தாவர்சந்த் கெலாட் இன்று உரை நிகழ்த்துவதாக இருந்தது. சட்டப்பேரவை கூட்டுக்கூட்டம் கூடியதும், ஆளுநர் உரையின் முதல் மற்றும் இறுதி வரிகளை மட்டுமே வாசித்துவிட்டு ஆளுநர் தாவர்சந்த் கெலாட் சட்டப்பேரவையில் இருந்து வெளியேறினார்.

அமைச்சரவையால் தயாரிக்கப்பட்ட உரையைப் படிப்பதற்குப் பதிலாக ஆளுநர் தானே தயாரித்த உரையைப் படித்தார். இது இந்திய அரசியலமைப்பை மீறுவதாகும். இது இந்திய அரசியலமைப்பின் 176 மற்றும் 163 ஆகிய சரத்துக்களை மீறுவதாகும். அவர் தனது அரசியலமைப்புக் கடமைகளை நிறைவேற்றவில்லை.

எனவே, ஆளுநருக்கு எதிராக நாங்கள் போராட்டம் நடத்தப் போகிறோம். மேலும், உச்ச நீதிமன்றத்தை அணுகுவதா வேண்டாமா என்பது குறித்து நாங்கள் ஆராய்ந்து வருகிறோம்" என தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் ஆர்.என். ரவி, ஆளுநர் உரையை வாசிக்காமல் புறக்கணித்த நிலையில், கர்நாடக சட்டப்பேரவையிலும் ஆளுநர் தனது உரையை வாசிக்க மறுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# இன்று மதுராந்தகத்தில் பிரதமர் மோடி பொதுக்கூட்டம்

**சென்னை, ஜன.23:**

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தலை சந்திப்பதற்கு தீவிரமாகி உள்ள பா.ஜ.க. கூட்டணிபேச்சுவார்த்தைகளை தீவிரப்படுத்தி உள்ள நிலையில் தேர்தல் பிரசாரத்தையும் இப்போதே முடுக்கி விட்டுள்ளது.

இதன்படி பிரதமர் மோடி கலந்து கொள்ளும் பிரமாண்ட பொதுக் கூட்டத்துக்கு இன்று ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. சென்னையை அடுத்துள்ள மதுராந்தகத்தில் தேசிய நெடுஞ்சாலையையொட்டி உள்ள பகுதியில் பிரதமரின் கூட்டத்திற்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. பிரதமர் பங்கேற்கும் கூட்டத்துக்காக 15 ஆயிரம் போலீசார் பாது காப்பு பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.



பிரதமரின் வருகையையொட்டி நேற்று காலையில் இருந்தே டெல்லியில் இருந்து சென்னை வந்துள்ள மத்திய பாதுகாப்பு படை போலீசார் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தை தங்களது முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்தில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் நாளை காலையில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பிரதமர் மோடி அங்கிருந்து மதியம் 1.15 மணிக்கு தனி விமானத்தில் சென்னைக்கு வருகிறார்.

பிரதமர் வருகையையொட்டி சென்னை விமான நிலையத்தில் இருந்து மதுராந்தகத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் வரையில் பாதுகாப்பு படையினரும், போலீசாரும் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
- Public Notice
- Loss of Share
- Legal Notice
- Merger
- Tender Notice
- Acquisition
- Society Notice
- AFR, UFR, etc.

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

SEND AN EMAIL WITH Hi TO tamilnaduepaper@gmail.com
RECEIVE OUR DAILY NEWSPAPERS & MAGAZINES

## திருக்குறள் குறள்-508

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை தீரா
இடும்பை தரும்



மற்றவனை ஒன்றும் ஆராயாமல் தெளிந்தால் அஃது (அவனுக்கு மட்டும் அல்லாமல்) அவனுடைய வழிமுறையில் தோன்றினவருக்கும் துன்பத்தைக் கொடுக்கும்.

## சிந்திக்க ஒரு நொடி



பலம் என்பது நம்மிடம்
இருக்கும்
உடலில் இருந்து
பிறப்பதல்ல...
நம் ஆழ் மனதில்
இருந்து பிறப்பதே
என்பதை உணர்ந்தால்
வெற்றி நிச்சயம்

**உஷாமுத்துராமன்**

## அக்னி பிரவேச தினம் நம் வாசவி அம்மன்

**இராமநாதபுரம் ஜன.23:**

ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் வாசவி அம்மன் அக்னி பிரவேச தினத்தை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள் 184 லிட்டர் பால் அபிஷேகங்கள், வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள் தாமரை பூ மாலையுடன், வெட்டிவேர் மாலையுடன் , மருதாணி வைத்து, 102 கோத்திரர்களும் ஹோம குண்டத்தில் அகல் விளக்கு ஏற்றி வாசவி அம்மன் அக்னி பிரவேசம் - பருத்திக்கொட்டை பெரிய அகல் விளக்கு எரிய வைத்து, ஐந்து கன்னி பெண் குழந்தைகளுக்கு பூரண கும்ப வரவேற்பு, மற்றும் கலர் மாவினால் நம் வாசவி அம்மனை வரைந்து, ஆராதனைகள் வெட்டி வேர் மாலை அணிவித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனை நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை







## எருது விடும் விழா



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி, நிம்மியம்பட்டு பகுதியில் மயிலார் முன்னிட்டு நடைபெற்ற எருது விடும் விழாவில் வாணியம்பாடி நகர கழக செயலாளர், நகர மன்ற உறுப்பினர் .V.S.சாரதி குமார் BE.,MC சிறப்பு அழைப்பாளாராக கலந்து கொண்டு எருது விடும் போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய கழக நிர்வாகி பழனி நகர கழக துணை செயலாளர் K.தென்னரசு ex.MC மாவட்ட பிரதிநிதிகள் .ரவி, வெள்ளகுட்டை மனோ, கழக நிர்வாகிகள், ஊர் பெரியவர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பெண்களுக்கு ஆரி எம்பிராய்டிங் பயிற்சி சான்றிதழ்



**வாடிப்பட்டி, ஜன.23:**

மதுரை மாவட்டம் சமயநல்லூர் அருகே பரவை ஸ்ரீமீனாட்சி மில் ஜி எச் சி எல் அறக்கட்டளை மற்றும் பெட்கிராட் இணைந்து ராயன்பட்டி பகுதியில் சமத்துவ பொங்கல் விழா மற்றும் ஆரி எம்பிராய்டிங் பயிற்சி பெற்ற பெண்களுக்கு சான்றிதழ் வாங்கும் விழாவும் நடந்தது.

## விருத்தாசலத்தில், சாலை பாதுகாப்பு மாதத்தை ஒட்டி (ஹெல்மெட் ) தலைகவசம் விழிப்புணர்வு பேரணி

**கடலூர், ஜன.23:**

விருத்தாசலத்தில், சாலை பாதுகாப்பு மாதத்தை ஒட்டி (ஹெல்மெட் ) தலைகவசம் விழிப்புணர்வு பேரணி நடந்தது.

சாலை பாதுகாப்பு மாதத்தையொட்டி,இருசக்கர வாகன விபத்து உயிரிழப்பை தடுக்கும் வகையில், (ஹெல்மெட்) தலைகவசம் அணிவதின் அவசியம் குறித்து எடுத்துரைத்து கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் (ஹெல்மெட்) தலைக்கவசம் அவசியம் குறித்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

வட்டாரப் போக்குவரத்து அலுவலர் செல்வம் அவர்கள் தலைமையில் நடை பெற்ற இப்பேரணியை, டிஎஸ்பி பாலகிருஷ்ணன், கோட்டாட்சியர் விஷ்ணுப் பிரியா ஆகியோர் முன்னிலை வகித்து துவக்கி வைத்தனர்.

விருத்தாசலம் நெடுஞ் சாலைத் துறை அலுவலகத்தில் இருந்து புறப்பட்ட இப் பேரணியில், 500க்கும் மேற்பட்டவர்கள் ஹெல்மெட் அணிந்து இருசக்கர வாகனங்களில், கடலூர் சாலை, பாலக்கரை சந்திப்பு, கடைவீதி, ஜங்ஷன் ரோடு உள்ளிட்ட நகரத்தின் முக்கிய வீதிகள் வழியாக சென்று பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டிகளிடையே,தலைக்கவசம் உயிர்க்கவசம் தலைக்கவசம் அணிந்து இருசக்கர வாகனங்களை ஓட்டுவோம் என்கிற விழிப்புணர்வு ஏற்படுத்திய படி,ஆலடி செல்லும் சாலையை சென்றடைந்து, விழிப்புணர்வு பேரணி நிறைவுற்றது.

இப்பேரணியில், விருத்தாசலம் வட்டார போக்குவரத்து அலுவலர் பெரியசாமி,ரவிக்குமார் ஆகியோர் பங்கேற்று சிறப்பாக பேரணியை வழி நடத்தினர்.

இவ்விழிப்புணர்வு பேரணியில்,வாகன விற்பனை முகவர்கள்,ஓட்டுநர் பயிற்சி உரிமையாளர்கள்,பயிற்றுநர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.




## மயிலார் திருவிழாவை யொட்டி எருது விடும் விழா



ராணிப்பேட்டை மாவட்டம், கலவை அடுத்த குட்டியம் கிராமத்தில் மயிலார் திருவிழாவை யொட்டி எருது விடும் விழா நேற்று நடந்தது.

## சேத்தியாதோப்பு ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள்



**திருவண்ணாமலை, ஜன.23:**

நம் வாசவி அம்மன் அக்னி பிரவேஷ தினத்தை முன்னிட்டு கடலூர் மாவட்டம் சேத்தியாதோப்பு ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் அக்னி பிரவேச தினத்தை முன்னிட்டு நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, தீபங்கள் ஏற்றி, வேத மந்திரங்கள் ஒலிக்க, ஹோமங்கள் வளர்த்து, ஆர்ய வைஸ்ய பெண்கள் அனைவரும் பாட்டுக்கள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், வண்ண பூக்களால் அர்ச்சனைகள் செய்து, மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு ஜெய் வாசவி ஜெய் ஜெய் வாசவி என்று அனைவரும் நம் வாசவி அம்மனை கோஷமிட்டு வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள்



**கடலூர், ஜன.23:**

அக்னி பிரவேச தினத்தை முன்னிட்டு கடலூர் மாவட்டம் புவனகிரி ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் அக்னி பிரவேச தினத்தை முன்னிட்டு நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, தீபங்கள் ஏற்றி, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், வண்ண பூக்களால் அர்ச்சனைகள் செய்து மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி ஜெய் வாசவி ஜெய் ஜெய் வாசவி என்று அனைவரும் கோஷமிட்டு வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் அக்னி பிரவேஷம்



நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் ஒன்றியத்தைச் சேர்ந்த எருமப்பட்டி ஊராட்சியில் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் அக்னி பிரவேஷம் தினத்தை முன்னிட்டு அலங்காரத்துடன் நம் வாசவி அம்மன் அருள் பாலிக்கும் காட்சி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## மகா மாரியம்மன் திருவிழா நிகழ்ச்சி பூச்சாட்டுதலுடன் விழா துவங்கியது

**ஈரோடு, ஜன.23:**

ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஒன்றியம், பாசூர் கிராமம், வேங்கியாம்பாளையம் அருள்மிகு மகா மாரியம்மன் திருவிழா நிகழ்ச்சி 13.01.2026 செவ்வாய் பூச்சாட்டுதலுடன் விழா துவங்கியது.

அதனை தொடர்ந்து 15.01.2026 வியாழன் கம்பம் நடுதல் நிகழ்ச்சியும் 20.01.2.26 செவ்வாய் இரவு அம்மன் திருவீதி உலா நடைபெற்றது.

21.01.2026 புதன் அதிகாலை முப்பாட்டு மாவிளக்கு பூஜை நடைபெற்றது. 22.01.2026 வியாழன் மதியம் காவேரி ஆற்றிற்கு சென்று தீர்த்தம், பால்குடம், காவடி மற்றும் அக்கினி கும்பம் எடுத்து வந்து அம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்காரம் நடைபெறும் அன்று இரவு பொங்கல் பூஜை கம்பம் விடுதல் நிகழ்ச்சியும், 23.1.26 வெள்ளி மாலை மஞ்சள் நீராடுதல் மற்றும் அம்பாள் ஊஞ்சல் ஆடுதல் நிகழ்ச்சி பெறுகிறது.



## செங்கரைப்பாளையத்தில் இலவசமாக வழங்கும் மனவளக்கலை பயிற்சி

**ஈரோடு,ஜன.23:**

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம் துய்யம் பூந்துறை கிராமம் செங்கரைப்பாளையம் மனவளக்கலை மன்ற அறிவித்திருக்கோவிலில் ஆண் பெண் என இருபால் அன்பர்களுக்கும், தனித்தனியே எளிய முறையிலான மனவளக்கலையில் உடல்நலம் காக்கும் உடற்பயிற்சி, மனவளம் அடையும் தியான பயிற்சி, உயிர் கட்டுக்குள் வைக்கும் காயகல்ப பயிற்சி ஆகியன கற்றுத் தரப்படுகிறது.

ஒவ்வொரு நபரும் ரூ1500- கட்டணம் கட்டி பயிலும் பயிற்சிகளை, செங்கரப்பாளையம் அறிவுத்திருக்கோவில் சார்பில் எவ்விதக் கட்டணமும் வசூலிக்காமல், இருபால் பேராசிரியர்களை வைத்து இலவசமாக பயிற்றுவித்து வருகிறார்கள்.

படத்தில் 21.01.2026 அன்றைய பயிற்சியில் மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் பங்கு கொண்ட மனவளக்கலை பயிலும் ஆண் அன்பர்கள். செங்கரைப்பாளையம் பக்கம் உள்ள சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஊர்களின் பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி மனவளக்கலை பயின்று, அருட்பேராற்றல் கருணையினால் உடல் நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர் புகழ், மெய்ஞானம் ஓங்கி வாழ்வோம் வாரீர் வாரீர்" என்று அன்போடு அழைக்கிறோம். நன்றி! வணக்கம்!



## தமிழ்நாடு அறிவியல் இயக்கம் பென்னாகரம் கிளை கூட்டம்

**பென்னாகரம், ஜன.23:**

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் பென்னாகரம் கிளை கூட்டம் மாவட்டத் தலைவர் கூத்தப்பாடி மா. பழனி தலைமையில் நடைபெற்றது.

பென்னாகரம் கிளையின் புதிய பொறுப்பாளர்களாக தலைவராக சு. பழனி ஓய்வு பெற்ற வட்டார வளர்ச்சி அலுவலர், செயலாளராக வைகுந்தம், பொருளாளராக மதிவாணன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

கூட்டத்தில் அறிவியல் கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வது, அறிவியல் சிந்தனையும் அறிவியல் பார்வையும் அனைவரிடமும் ஏற்படுத்துவது, அறிவியல் இயக்க கிளைகள் அனைத்து பகுதிகளிலும் உருவாக்க முயற்சி மேற் கொள்வது என முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள், இளைஞர்கள் வானவில் மன்ற கருத்தாளர்கள் கலந்து கொண்டார்கள்.





## குடியரசு தினவிழாவுக்காக போலீசார் அணிவகுப்பு ஒத்திகை

சேலத்தில் குடியரசு தினவிழாவுக்காக நேற்று போலீசார் அணிவகுப்பு ஒத்திகை நடந்தது.

## ஜன.27 நெல்லை, தென்காசி, தூத்துக்குடியில் பி.எப். குறைதீர் கூட்டம்

**திருநெல்வேலி, ஜன.23:**

நெல்லை, தென்காசி, தூத்துக்குடியில் வருங்கால வைப்பு நிதி குறைதீர்க்கும் கூட்டம் வரும் 27ஆம் தேதி காலை நடைபெறவுள்ளது. இது குறித்து வருங்கால வைப்புநிதி ஆணையாளர் சிவசண்முகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியி ருப்பதாவது: வருங்கால வைப்பு நிதி நிறுவனம் (பி.எப்) மற்றும் தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம் (இ.எஸ்.ஐ) சார்பில் 'வருங்கால வைப்பு நிதியின் உங்கள் அருகில் 2.0 நிகழ்ச்சி' நெல்லை, தென்காசி மற்றும் தூத்துக்குடியில் வரும் 27ஆம் தேதி காலை 9 மணிக்கு நடைபெறுகிறது. நெல்லை மாவட்டம், ஏர்வாடி தெற்கு மெயின் ரோடு, மாஸ்டர் ஹாலிலும், தென்காசி மாவட்டம், அடைக்கலப்பட்ட ணம் ராஜாநகர், சர்தார் ராஜா இன்ஜினியரிங் கல்லூரியிலும் நடக்கிறது. தூத்துக்குடி மாவட்டம், சாகுபுரம் தாரங்கதாரா கெமிக்கல் ஒர்க்ஸ் நிறுவ னத்தில் கூட்டம் நடக்கிறது. இதில் பி.எப்., மற்றும் இ.எஸ்.ஐ., உறுப்பினர்கள், ஓய்வூதியர்கள், தொழிலதிபர்கள், அங்கீ கரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள், தொழில் நிறுவன அமைப்புகள் பங்கேற்று குறை களை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## ஜன.23 சங்கரன்கோவில் கோட்ட விவசாயிகள் குறைதீர் முகாம்

**தென்காசி, ஜன.23:**

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வருவாய் கோட்டத்தில் 2026 ஜனவரி மாதத்திற்கான கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஜனவரி 23 வெள்ளியன்று காலை 11 மணியளவில் நடைபெறவுள்ளது. சங்கரன்கோவில் வருவாய் கோட்டா ட்சியர் தலைமையில் சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் வைத்து நடைபெற வுள்ளது. இக்கூட்டத்திற்கு சங்கரன்கோவில் வருவாய் கோட்டத்திற்குட்பட்ட விவசாயி கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் ஆ.அனிதா தெரிவித்துள்ளார்.

## குழந்தைகள் பாதுகாப்புக்குழு கூராய்வுக்கூட்டம்

**தென்காசி, ஜன.23:**

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஜனவரி 21 அன்று தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் புதுக்கோட்டை விஜயா தலைமையில் மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக்குழு உறுப்பினர்களுக்கான கூராய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.எஸ்.மாதவன், உறுப்பினர்கள் முனைவர்.வீ.உஷா நந்தினி, வழக்கறிஞர் ஜெயசுதா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குழந்தைகள் நலனுக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர் புதுக்கோட்டை விஜயா ஆலோசனை மேற்கொண்டார் . தொடர்ந்து, போதைபொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு பாடல் குறித்த குறுந்தகட்டினை (CD) தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத் தலைவர், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் வெளியிட்டனர்.

## ரூ.1.57 லட்சம் மதிப்பில் புகையிலை பறிமுதல்

**தூத்துக்குடி, ஜன.23:**

தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலம் திரேஸ் புரம் பகுதியில் மாநகர நல அலுவலர் சரோஜா மற்றும் சுகாதார அலுவலர் ராஜ சேகரன் தலைமையில் சுகா தார ஆய்வாளர்கள் சோதனை நடத்தினர். இதில் புகையிலைப் பொருட்களை வீட்டில் பதுக்கி கடையில் விற்பனை செய்து வந்தது கண்டறியப்பட்டது. வடபா கம் காவல் துறை அதிகாரி கள் உதவியுடன் 45 கிலோ 1.57 லட்சம் மதிப்பிலான தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு கடைக்கு சீல் வைக்கப்பட்டது.

## குழந்தைகளுக்கு திறன் பயிற்சி

**திருநெல்வேலி, ஜன.23:**

தமிழ்நாடு கட்டுமான தொழில்களில் ஈடுபட் டுள்ள தொழிலாளர்களின் நலனை பாதுகாக்கும் வகையில் கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியம் அரசால் ஏற்படுத்தப்பட்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது பதிவு பெற்ற கட்டுமான தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இணைய வழியில் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கும் திட்டம் செயல் படுத்தப்பட உள்ளது.

# தூத்துக்குடியில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டப் பணிக்கு அடிக்கல்





**சென்னை, ஜன.23:**

சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து பல்வேறு துறைகள் சார்ந்த திட்டப்பணிகளை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார். இதன்படி தூத்துக்குடி முள்ளக்காட்டில் ரூ.2,292 கோடி மதிப்பில், 60 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் திட்டப் பணிக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

மேலும் சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனம் சார்பில் அமைக்கப்படும் மந்தைவெளி பஸ் பணிமனை மற்றும் ஒருங்கிணைந்த பன்முக போக்குவரத்து மற்றும் வணிக வளாகத்திற்கும் முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை சார்பில் ராஜீவ் காந்தி சாலை ஒக்கியம் மடுவில் புதிதாக கட்டப்பட்டுள்ள நான்கு வழி சாலைப் பாலத்தை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

# திருப்போரூர் கந்தசாமி கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பு: அறநிலையத் துறைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, ஜன.23:**

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் கந்தசாமி கோயில் மற்றும் ஆளவந்தார் அறக்கட்டளைக்குச் சொந்தமான நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி 3 வாரங்களில் அறிக்கை தாக்கல் செய்ய இந்து சமய அறநிலையத்துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞர் பி.ஜெகந்நாத் என்பவர் தாக்கல் செய்த மனுவில், செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூரில் உள்ள கந்தசாமி கோயில் மற்றும் ஆளவந்தார் அறக்கட்டளைக்குச் சொந்தமாக பல ஆயிரம் கோடியில் சொத்துகள் உள்ளன. இவற்றில் 2 ஆயிரம் ஏக்கர் சொத்துகளில் 550 ஏக்கருக்கு மேற்பட்ட சொத்துகளை தனிநபர்கள் ஆக்கிரமித்துள்ளனர். இந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட வேண்டும் எனக் கோரிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என கடந்த 2022-ஆம் ஆண்டு உத்தரவிட்டிருந்தது. ஆனால், இந்த உத்தரவு அமல்படுத்தவில்லை எனக்கூறி வழக்குரைஞர் ஜெகந்நாத் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவாஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது அறநிலையத் துறை தரப்பில், கோயிலுக்குச் சொந்தமான 125 ஏக்கர் நிலத்தை 233 பேர் ஆக்கிரமித்துள்ளனர். இவர்களுக்கு எதிராக அறநிலையத் துறை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் சிலர் வாடகை செலுத்த முன்வந்துள்ளனர். எனவே ஆக்கிரமிப்புகளை அகற்றி அறிக்கை தாக்கல் செய்ய கால அவகாசம் வேண்டும் எனக் கூறப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது, ஆக்கிரமிப்புகளை எப்படி அறநிலையத் துறை வரன்முறை செய்ய முடியும் என அதிருப்தி தெரிவித்தனர். பின்னர், இந்த வழக்கில் ஆக்கிரமிப்புகளை அகற்றி 3 வாரங்களில் அறிக்கை தாக்கல் செய்ய அறநிலையத் துறைக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.

# பிராட்வே பேருந்து நிலையத்தில் மறுசீரமைப்புப் பணி

**சென்னை,ஜன.23:**

பிராட்வே பேருந்து நிலையத்தில் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்வதால், அங்கிருந்து இயக்கப்பட்ட பேருந்துகள் சனிக்கிழமை (ஜன.24) முதல் ராயபுரம், தீவுத்திடல் தற்காலிகப் பேருந்து முனையங்களில் இருந்து இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் சார்பில் வெளியிட ப்பட்ட செய்திக் குறிப்பு:

பெருநகர சென்னை மாநகராட்சியில் இயங்கி வரும் பிராட்வே பேருந்து நிலையத்தில் மறுசீரமைப்பு மற்றும் உள்கட்டமைப்புப் பணிகள் நடைபெற உள்ளன. எனவே, சனிக்கிழமை (ஜன.24) முதல் பிராட்வே பேருந்து நிலையத்தில் இருந்து இயக்கப்பட்ட பேருந்துகள் ராயபுரம், தீவுத்திடல் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிகப் பேருந்து முனையங்களில் இருந்து இயக்கப்படும்.

ராயபுரம் தாற்காலிகப் பேருந்து முனையத்தில் இருந்து இயக்கப்படும் தடங்களின் விவரம்:

அண்ணாசாலை வழியாக இயக்கப்படும் வழித்தடங்கள்: 11, 21, 26, 52, 54, 60, 10இ, 11ஜி, 11எம், 155ஏ, 17இ, 17கே, 188சி, 188இடி, 18ஏ, 18பி, 18டி, 18இ, 18கே, 18பி, 18ஆர், 18ஆர். எக்ஸ்., 18எக்ஸ், 21சி, 26பி, 26ஜி, 26கே, 26எம், 26ஆர், 51டி, 51ஜெ, 52பி, 52ஜி, 52கே, 54ஜி, 54எல், 5சி, 60ஏ, 60டி, 60ஜி, 60ஹெச், 88சி, 88கே, 9எம், ஏ51, இ18, இ51, எம்51ஆர்.

ஈ.வெ.ரா. சாலை வழியாக இயக்கப்படும் வழித்தடங்கள்: 50, 101சி.டி., 101எக்ஸ், 53இ, 53பி, 71டி, 71இ, 71ஹெச், 71வி, 120, 120எஃப், 120ஜி, 120கே, 150.

தீவுத்திடல் பேருந்து முனையத்தில் இருந்து இயக்கப்படும் தடங்களின் விவரம்:

காமராஜர் சாலை வழியாக இயக்கப்படும் வழித்தடங்கள்: 6, 13, 60இ, 102, 109, 102சி, 102கே, 102பி, 102எஸ், 102எக்ஸ், 109ஏ, 109எக்ஸ், 21ஜி, 21எல்.

கடற்கரை ரயில் நிலையம் வழியாக இயக்கப்படும் வழித்தடங்கள்: 1, 4, 44, 33சி, 33எல், 38ஏ, 38ஜி, 38ஹெச், 44சி, 44சி.டி., 4எம், 56டி, 56ஜெ, 56கே, 56பி, 57டி, 57எஃப், 57ஹெச், 57ஜெ, 57எம், 8பி, சி56சி.

மண்ணடி வழியாக இயக்கப்படும் வழித்தடங்கள்: 33பி, 56சி, 56எஃப்.

ஈ.வெ.ரா. சாலை வழியாக இயக்கப்படும் வழித்தடங்கள்: 15, 20, 15எஃப், 15ஜி, 17டி, 20ஏ, 20டி, 50எம்.


வேப்பேரி வழியாக இயக்கப்படும் வழித்தடங்கள்: 35, 42, 242, 142பி, 142பீ, 35சி, 42பி, 42சி, 42டி, 42எம், 64சி, 64கே, 7இ, 7ஹெச், 7கே, 7எம்.

# பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்தில் ரூ.5 கோடியில் மாநில வள மையம்: அமைச்சர் அன்பில் மகேஸ் திறந்து வைத்தார்

**சென்னை, ஜன.23:**

நவீன உலகில் வேகமாக வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களின் அடிப்படையிலான கற்றல்-கற்பித்தல் உத்திகளை ஆய்வு செய்து வகுப்பறைக் கற்றலுக்குத் தேவையான பரிந்துரைகளை அளிப்பது, குழந்தைகள் மைய வகுப்பறைக் கற்றல் உத்திகளைக் காட்சிப்படுத்துவது, மாணவர்கள் செய்து பார்த்து கற்பதற்கான ஆய்வக மாதிரிகளை உருவாக்குவது போன்றவை இந்த வள மையத்தின் நோக்கமாகும்.

அந்த வகையில், சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகத்தில் ரூ.5 கோடியில் நவீன வசதிகளுடன் ஒருங்கிணைந்த





பள்ளிக் கல்வி நிதியுதவியுடன் இந்த மாநில வள மையம் புதிதாக அமைக்கப்பட்டது. இதை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் புதன்கிழமை திறந்து வைத்தார்.

புதிதாக திறக்கப்பட்ட இந்த வள மையத்தில், வளர்ந்துவரும் கல்வி தொழில்நுட்பவியலின் நவீன உத்திகளைப் பயன்படுத்தி கற்றல்-கற்பித்தலை மேம்படுத்தும் வகையில், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கவும், பணியிடைப் பயிற்சிகளின்போது ஆசிரியர்கள் செய்து கற்பதற்கு வாய்ப்பளிக்கவும், கற்பித்தலில் புதிய அணுகுமுறை சார்ந்த ஆய்வுகள் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

என்னென்ன வசதிகள்...: ஆசிரியர் மற்றும் மாணவர்கள் பாடப்பொருள் சார்ந்த அறிவைப் பெறும் வகையில், மொழிகள் ஆய்வகம் மற்றும் அறிவியல், கணிதம் ஆகிய பாடங்களுக்குத் தனித்தனி அரங்குகள், மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான அறை, கணக்கீடு சார் சிந்தனையைச் செழுமைப்படுத்தும் அரங்கம், மாணவர்கள் தாங்களே சோதனைகளைச் செய்து பாடப்பொருள் சார் கருத்துகளைக் கற்றுணர 'கற்க கசடற' என்ற பெயரில் தனியே அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், அறிவியல், கலாசார, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள், தேசிய, சாவதேச அளவில் கொண்டாடப்படும் முக்கிய நாள்கள், வானியல் நிகழ்வுகள் உள்ளிட்டவற்றின் முக்கியத்துவத்தினை ஆசிரியர்களும், மாணவர்களும் அறிந்து உணரும் வகையில் இணையவழி கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், கலந்துரையாடல் நிகழ்வுகள், துறைசார் வல்லுநர்களின் சொற்பொழிவுகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளும் நடத்தப்படவுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித்துறை கூடுதல் தலைமை செயலர் பி.சந்தரமோகன், இயக்குநர் எஸ்.கண்ணப்பன்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389




## நலம் தரும் மருத்துவம்

### பல மடங்கு நன்மை கொண்ட கருப்புப் பூண்டின் ரகசியம் தெரியுமா?



பொதுவாக, வெள்ளைப் பூண்டைத்தான் சமையலுக்கு பெரும்பாலானோர் உபயோகப்படுத்துவர். ஆனால், கருப்பு பூண்டும் பல ஆரோக்கிய நன்மைகளைக் கொண்டுள்ளது என ஊட்டச்சத்து நிபுணர்கள் கூறுகின்றனர். கருப்புப் பூண்டின் நன்மைகளைப் பற்றி இந்தப் பதிவில் பார்ப்போம்.

கருப்புப் பூண்டு என்பது என்ன?

வெள்ளைப் பூண்டு பல வாரங்களுக்கு 140 முதல் 194 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பத்தில் வேக வைக்கப்பட்டு மற்றும் 70 முதல் 90 டிகிரியில் குளிர்விக்கப்பட்டு, நொதித்தல் செயல்முறைக்கு உட்படுத்தப்படுகிறது. இந்த செயல்முறை வெள்ளைப் பூண்டை கருப்பு நிறமாக மாற்றுகிறது. மேலும், அதற்கு மென்மை தன்மையை அளிக்கிறது. அதோடு, இனிப்பு கலந்த கசப்பான சுவையையும் அளிக்கிறது. இந்தப் பூண்டை உட்கொள்வது உடலுக்கு பல நன்மைகளை அளிக்கிறது.

கருப்புப் பூண்டின் ஆரோக்கிய நன்மைகள்:

1. இதய ஆரோக்கியம்: கருப்புப் பூண்டு கொலஸ்ட்ரால் அளவை குறைக்கிறது. இரத்த அழுத்தத்தையும் குறைக்கிறது. இந்த இரண்டும் ஆரோக்கியமான இதயத்தை பராமரிக்க உதவும் முக்கியமான அம்சங்கள் ஆகும்.

2. ஆன்டி ஆக்சிடென்ட்கள் நிறைந்தவை: பச்சையான வெள்ளைப் பூண்டுடன் ஒப்பிடும்போது கருப்பு பூண்டில் அதிக அளவு ஆன்டி ஆக்சிடென்ட்கள் உள்ளன. இவை ஃப்ரீரேடிக்கல்களால் ஏற்படும் சேதத்திலிருந்து நமது உடலின் செல்களைப் பாதுகாக்க உதவுகின்றன. இது இதய நோய் மற்றும் புற்றுநோய் போன்ற நாள்பட்ட நோய்களின் அபாயத்தை குறைக்கும் ஆற்றல் பெற்றவை.

3. நோய் எதிர்ப்பு சக்தி: கருப்புப் பூண்டு உடலின் நோய் எதிர்ப்பு மண்டலத்தை மேம்படுத்துகிறது. இதனால் உடல் தொற்று நோய்களை மிகவும் திறம்பட எதிர்த்துப் போராட உதவுகிறது. நோய்களின் தாக்கம் மிகவும் குறைகிறது.

4. செரிமான மேம்பாடு: கருப்புப் பூண்டில் உள்ள நொதித்தல் செயல்முறை, நன்மை பயக்கும் குடல் பாக்டீரியாக்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் கலவைகளை உருவாக்குகின்றன. இதனால் செரிமானம் நன்றாக நடைபெறுகிறது. ஒட்டுமொத்த குடலும் ஆரோக்கியமாக விளங்குகிறது.

5. நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்றது: கருப்புப் பூண்டு இரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்த உதவுகிறது என்று ஆய்வுகள் கூறுகின்றன. இதனால் நீரிழிவு நோயாளிகளுக்கு இந்த பூண்டு மிகவும் நன்மை பயக்கிறது.

6. அறிவாற்றல் ஆரோக்கியம்: இதில் உள்ள அதிக ஆக்ஸிஜனேற்ற உள்ளடக்கம் மூளை ஆரோக்கியத்தை ஆதரிக்கிறது. இதனால் அறிவாற்றல் வீழ்ச்சியின் அபாயத்தை குறைக்கிறது. அறிவாற்றலை அதிகரிக்கிறது. புத்திசாலியாக திகழ விரும்புவோர் தாராளமாக கருப்புப் பூண்டை உண்ணலாம்.

கருப்புப் பூண்டை பயன்படுத்துவதற்கான வழிமுறைகள்: கருப்புப் பூண்டை சூப்புகளில் சேர்க்கலாம். பாஸ்தா, பீட்சா போன்ற உணவுகளில் பயன்படுத்தலாம். சாண்ட்விச்களில் உபயோகப்படுத்தலாம். சாஸ்கள், ட்ரெஸ்ஸிங் மற்றும் இறைச்சிகளில் கலக்கலாம்.

வெள்ளைப் பூண்டுக்கும் கருப்புப் பூண்டுக்கும் உள்ள வித்தியாசங்கள்: 1. சுவை: வெள்ளைப் பூண்டு காரமான சுவை கொண்டது. கருப்புப் பூண்டு இனிப்பு மற்றும் கசப்பான சுவை கொண்டது. பெரும்பாலும் இது புளியின் சுவையை ஒத்திருக்கும்.

2.ஊட்டச்சத்து:வெள்ளைப்பூண்டு ஆன்டிமைக்ரோபியல் மற்றும் நோய் எதிர்ப்பு திறன் கொண்டது ஆக்ஸிஜனேற்ற உள்ளடக்கம் குறைவாக உள்ளது. ஆனால், கருப்புப் பூண்டில் ஆக்ஸிஜனேற்ற உள்ளடக்கம் அதிகம்.

## தங்கம் விலை சற்று குறைவு

சென்னை, ஜன.23:

நேற்று தங்கம் விலை சற்று குறைந்துள்ளது. அதன்படி சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,720 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,13,600-க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.215 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,200-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தங்கத்தை போலவே வெள்ளி விலையும் குறைந்துள்ளது. வெள்ளி விலையை பொறுத்தவரையில், ஒரு கிலோ வெள்ளி இன்று ரூ. 5,000 குறைந்து, ரூ.3,40,000-க்கும், கிராமுக்கு ரூ.5 குறைந்து, ஒரு கிராம் ரூ.340-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

திடீர் குறைவுக்கு என்ன காரணம்?

தங்கம் விலையின் இந்த போக்குக்கு, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே கிரீன்லாந்து விவகாரத்தில் ஏற்பட்டுள்ள மோதல் மற்றும் வர்த்தகப் போர், அமெரிக்காவின் பெடரல் ரிசர்வ் வங்கி தொடர்பான அரசியல் தலையீடுகள் மற்றும் உலகளாவிய பணவீக்க பயம், பங்கு சந்தையில் நிலவும் நிச்சயமற்ற தன்மையால், முதலீட்டாளர்கள் தங்கத்தின் மீதான முதலீட்டில் சற்று தயக்கம் காட்டுவதன் காரணமாக இருக்கலாம் என்று நிபுணர்களும், வியாபாரிகளும் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய வேகமான ஏற்றத்துக்கு பிறகு, தங்கம் விலை ஏற்ற, இறக்கங்கள் அதிகமாக இருக்கலாம் என்றும், அது எப்போது வேண்டுமானாலும் நிகழலாம் என்றும் வியாபாரிகள் கணிக்கின்றனர்.

## தமிழ்நாட்டை கஞ்சா போதையில் தள்ளாட வைத்திருப்பதுதான் திராவிட மாடல் ஆட்சியின் சாதனை - சீமான்

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்நாட்டில் இன்றுவரை போதைப்பொருள் பயன்பாட்டினை முழுமையாக ஒழிக்க முடியவில்லை.

மேலும், போதைப்பொருள் குற்றங்களைத் தடுக்கும் 'போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவு காவலர்கள் பிரிவில் நிலவும் ஆட்கள் பற்றாக்குறையும் தமிழ்நாட்டில் கஞ்சா விற்பனையை முழுவதுமாகத் தடுக்க முடியாததற்கு மற்றுமொரு முக்கியக் காரணமாகும். ஒவ்வொரு ஊரிலும் அரசே மதுக்கடைகளை திறந்து வைத்து மக்களை குடிக்க வைத்துவிட்டு, போதைப்பொருளை ஒழிப்போம் என்று திராவிட மாடல் அரசு பேசுவது வெட்கக்கேடானது. ஆகவே, போதையின் பாதையில் இளைஞர்கள் செல்ல வேண்டாம் என்று காணொளி வெளியிடுவதாலோ, ஆண்டுக்கு ஒரு முறை போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழி ஏற்பதாலோ மட்டும் போதைப்பொருள் ஒழிந்துவிடாது என்பதை இனியேனும் உணர்ந்து, காவல்துறையைத் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், சீரழிந்து வரும் தமிழ் இளந்தலைமுறையினரின் எதிர்காலத்தைப்பாதுகாக்கதமிழ்நாட்டில் கஞ்சாஉள்ளிட்டபோதைப்பொருட்களை முழுவதுமாக ஒழிக்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

# காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் தங்கத்தேர் திருவிழா நடத்துவதில் குழப்பம்

காஞ்சிபுரம், ஜன.23:



காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் தங்கத்தேர் திருவிழா வரும் ஜன.25-ஆம் தேதி சூரிய ஜெயந்தி நாளன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அறநிலையத்துறை அதிகாரிகள் திடீரென நிர்வாக காரணங்களால் நடைபெறாது என புதன்கிழமை தெரிவித்திருப்பது பக்தர்களிடையே ஏமாற்றத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

பஞ்சபூத ஸ்தலங்களில் நிலத்துக்கு உரியதாக போற்றப்படும் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலுக்கு தங்கத்தேர் செய்ய வேண்டும் என்பது பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்தது. இதற்காக ஏகாம்பரநாதர் இறைப்பணி அறக்கட்டளை உருவாக்கப்பட்டு, ரூ. 30 கோடி மதிப்பில் தங்கத்தேர் செய்யப்பட்டு கடந்த ஆண்டு டிசம்பர் 4-ஆம் தேதி காஞ்சிபுரத்தில் வெள்ளோட்டம் நடைபெற்றது. டிசம்பர் 7-ஆம் தேதி தங்கத் தேர் அறக்கட்டளையினரால் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. மறுநாள் கோயிலில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்த நிலையில், வரும் ஜன. 25-ஆம் தேதி சூரிய ஜெயந்தி நாளன்று தங்கத்தேர் திருவிழா நடைபெற்ற அனுமதியளிக்க வேண்டும் என அறக்கட்டளையினர் ஆலய நிர்வாகத்திடம் அனுமதி கேட்டனர். ஆலய நிர்வாகமும் ஒப்புக் கொண்டதையடுத்து, தேரோட்டம் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டது. நாளிதழ்கள், தொலைக்காட்சிகள் அனைத்திலும் இந்தச் செய்தியும் ஒலிபரப்பாகி இருக்கிறது. இந்த நிலையில், திடீரென அறநிலையத்துறை அதிகாரிகள் தங்கத் தேர் நடத்த அனுமதி இல்லை எனத்தெரிவித்திருப்பது பக்தர்களுக்கு ஏமாற்றத்தை தந்துள்ளது. இது குறித்து ஏகாம்பர நாதர் இறைப்பணி அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பாளரான மகாலட்சுமி சுப்பிரமணியன் கூறுகையில், செவ்வாய்க்கிழமை வரை தங்கத்தேரை நடத்தலாம் என அனுமதியளித்திருந்தனர். நாங்களும் அனைத்து ஏற்பாடுகளும் செய்திருந்தோம். திடீரென நிறுத்தப்பட்டிருப்பது கவலையளிக்கிறது என்றார்.

இது குறித்து கோயில் அறங்காவலர் குழு உறுப்பினர் வ.ஜெகன்னாதன் கூறுகையில், குழு உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று கூடி தங்கத்தேர் திருவிழாவை சிறப்பாக நடத்த வேண்டும் என்று தீர்மானம் இயற்றி கோயில் நிர்வாகத்திடம் வழங்கியிருக்கிறோம் என்றார்.

காஞ்சிபுரம் மண்டல அறநிலையத் துறை இணை ஆணையர் சி.குமாரதுரையிடம் கேட்டபோது, அறநிலையத் துறை ஆணையரிடமிருந்து இதுவரை அனுமதி வரவில்லை. இது குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றார். இதனால் குறிப்பிட்ட நாளில் முதல் முதலாக நடைபெற வேண்டிய தங்கத் தேர்த் திருவிழா நடைபெறுமா, நடைபெறாதா என்பது கேள்வியாக உள்ளது.

# ஸ்ரீவீரராகவர் கோயில் தை பிரம்மோற்சவ தேரோட்டம்

திருமலை, ஜன.23:




ஸ்ரீவீரராகவர் பெருமாள் கோயில் தை பிரம்மோற்சவத்தையொட்டி புதன்கிழமை நடைபெற்ற தேரோட்டத்தில் திரளான பக்தர்கள் பங்கேற்றனர்.

108 திவ்ய தேசங்களில் ஒன்றாக விளங்கும் இக்கோயிலில் தை மாத பிரம்மோற்சவம் கடந்த 15-ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. வரும் 24-ஆம் தேதி வரை நடைபெற உள்ள இதையொட்டி நாள்தோறும் இருவேளைகளில் வெவ்வேறு வாகனத்தில் சிறப்பு அலங்காரத்தில் மாட வீதிகளில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பது வழக்கமாகும்.

7-ஆம் நாளான தேரோட்ட புதன்கிழமை கோலகாலமாக நடைபெற்றது. இதையொட்டி தேரடியில் அதிகாலையில் 5 மணிக்கு சிறப்பு அலங்காரத்தில் ஸ்ரீதேவி, ஸ்ரீபூதேவி சமேதராய் உற்சவர் ஸ்ரீவீரராகவர் பெருமாள் திருத்தேருக்கு எழுந்தருளினார். அதைத் தொடர்ந்து பக்தர்கள் கோவிந்தா முழக்கத்துடன் திருத்தேர் புறப்பாடு நடைபெற்றது. இத்தேர் குளக்கரை வீதி, வடக்கு ராஜவீதி, பஜார் வீதி, மோதிலால் தெரு என நான்கு மாட வீதிகள் வழியாக வலம் வந்து மீண்டும் தேரடியில் நிலை நிறுத்தப்பட்டது. இதில் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகைதந்த பக்தர்கள் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர்.

பின்னர் வீரராகவர் நோயை தீர்க்க வல்லவர் என்பதால் பக்தர்கள் உப்பு, மிளகு ஆகியவற்றை தேர் சக்கரத்தின் மீது கொட்டி தங்களது நேர்த்திக் கடனை செலுத்தினர். அதைத் தொடர்ந்து இரவு 7 மணிக்கு தேரிலிருந்து எழுந்தருளி திருமஞ்சனம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து கோயிலுக்குள் எழுந்தருளல் நிகழ்வும் நடைபெற்றது.

இந்த தேரோட்டத்தை முன்னிட்டு திருவள்ளூர் துணைக் கண்காணிப்பாளர் தமிழரசி மேற்பார்வையில் காவல் ஆய்வாளர்கள் உள்ளிட்ட போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். கோட்டாட்சியர் ரவிச்சந்திரன் தலைமையில் வருவாய் துறை அலுவலர்கள், மின்வாரிய அதிகாரிகள், தீயணைப்புத்துறையினர், பொதுப்பணித் துறை அலுவலர்களும் தயாராக இருந்தனர். ஏற்பாடுகளை கோயில் கௌரவ ஏஜென்ட் சி.சி.சம்பத், மக்கள் தொடர்பு அலுவலர் எஸ்.சம்பத் மற்றும் கோயில் அலுவலர்கள் ஆகியோர் செய்திருந்தனர்.

# ஒகேனக்கல் காவிரியில் திடீரென அதிகரித்த நீர்வரத்து!

பென்னாகரம், ஜன.23:

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் திடீரென நீர்வரத்து வினாடிக்கு 3,000 கன அடியாக அதிகரித்துள்ளது.

இரு மாநில காவிரி கரையோரப் பகுதிகளில் மழை குறைவு, கர்நாடக அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் வெளியேற்றப்படும் உபரி நீர் அளவு குறைக்கப்பட்டதால் கடந்த சில நாட்களாக ஒகேனக்கல்லில் நீர்வரத்து வினாடிக்கு 500 கன அடி வரை சரிந்தது.

தொடர்ந்து காவிரி ஆற்றில் நீர்வரத்து சரியத் தொடங்கியதால் ஒகேனக்கல்லில் உள்ள ஐவர் பாணி, ஐந்தருவி உள்ளிட்ட அருவிகள் நீரின்றி வறண்டும், பிரதான அருவி சினி அருவிகளில் நீர்வரத்து குறைந்தது.

இந்த நிலையில், வியாழக்கிழமை காலை நிலவரப்படி காவிரி ஆற்றின் நீர்வரத்து திடீரென வினாடிக்கு 3,000 கன அடியாக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் கர்நாடக அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் உபரிநீர் திறக்கப்பட்டுள்ளதால், திடீர் நீர்வரத்து அதிகரிப்பினால், வறண்ட ஒகேனக்கல் அருவிகளில் சற்று நீர் வரத்து அதிகரித்துள்ளது.

மேலும் காவிரி ஆற்றில் நீர்வரத்து குறைவதும், அதிகரிப்பதுமாக உள்ளதால் தமிழக, கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வள துறை அதிகாரிகள் நீர்வரத்தின் அளவுகளை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## மதுரை மீனாட்சியம்மன் கோயில் தெப்பத்திருவிழா தொடக்கம்!



சென்னை, ஜன.23:

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் தெப்பத்திருவிழா கொடியேற்றத்துடன் இன்று கோலாகலமாக தொடங்கியது. பக்தர்கள் ஏராளமானோர் விழாவில் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நடைபெறும் சிறப்பு பெற்ற விழாக்களில் ஒன்றான தெப்பத்திருவிழா கொடியேற்றத்துடன் கோலாகலமாக தொடங்கியது. முன்னதாக கோயிலில் சுவாமி சன்னதி முன்பு கம்பத்தடி மண்டபத்தில் உள்ள தங்கக் கொடிமரம் முன்பு அருள்மிகு மீனாட்சி அம்மன், சொக்கநாதர் பிரியாவிடையுடன் சிம்மாசனத்தில் எழுந்தருளினர். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற சிறப்பு பூஜைகளையடுத்து வேதமந்திரங்கள் மங்கள வாத்தியங்கள்- முழங்கிட கொடியேற்றம் சிறப்பாக நடைபெற்றது. தெப்பத்திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியதையடுத்து தினமும் மீனாட்சி அம்மன் மற்றும் சுவாமி பிரியாவிடையுடன் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி தினமும் இருவேளைகளிலும் நான்கு சித்திரை வீதிகளில் வலம் வரும் நிகழ்வு நடைபெறுகிறது.

விழாவில் 10ம் நாள் திருவிழாவாக வரும் 30-ம் தேதியன்று தெப்பம் முட்டு தள்ளுதல் நிகழ்ச்சியும், வரும் 31-ம் தேதியன்று சிந்தாமணி கிராமத்தில் கதிர் அறுப்புத் திருவிழாவும் நடைபெறுகிறது.

தொடர்ந்து விழாவின் சிகர நிகழ்ச்சியாக வரும் பிப்ரவரி 1-ம் தேதியன்று 12-ம் நாள் திருவிழாவாக கோயிலில் இருந்து அதிகாலை சுவாமியும் அம்மனும் வெள்ளி சிம்மாசனத்தில் எழுந்தருளி முக்கிய வீதிகள் வழியாக வலம் வந்து அருள்மிகு முக்தீஸ்வரர் திருக்கோயிலில் எழுந்தருள்கின்றனர். தொடர்ந்து அன்றைய தினம் தெப்பத்தில் எழுந்தருளும் சுவாமியும் அம்மனும் காலையில் இரண்டு முறையும், இரவு ஒரு முறையும் என மூன்று முறை தெப்பத்தில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாளிக்கின்றனர்.

தெப்பத்திருவிழாவை காண மதுரை மட்டுமல்லாது அருகில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் பல்லாயிரகணக்கான பக்தர்கள் வருவார்கள் என்பதால் பல்வேறு சிறப்பான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் சார்பில் செய்யப்பட்டு வருகிறது.

# AI வீடியோவா? நிஜ வீடியோவா? - எப்படி கண்டுபிடிப்பது? இதோ சில உண்மைகள்!

இன்று யூடியூப் shorts முதல் இன்ஸ்டாகிராம் reels வரை அனைத்திலும் நாம் AI-யால் உருவாக்கப்பட்ட வீடியோக்களைப் பார்க்கின்றோம். இது ஒரு படி மேல் சென்று 'எது நிஜமான வீடியோ?, எது AI?' (AI videos) என்ற குழப்பத்தையும் நமக்குள் எழ வைக்கிறது. இந்தக் குழப்பத்திலிருந்து நாம் எப்படி விடுபடலாம்?

கவனிக்கும் திறன்: இன்றையடிஜிட்டல்தளத்தில் மேம்பட்ட AIகளால் (AI models) உருவாக்கப்பட்ட செயற்கை வீடியோக்கள், பெரும்பாலும் மனித முகபாவனைகள், விலங்குகளின் அசைவுகள் அல்லது சுற்றுச்சூழலில் நடக்கும் விஷயங்கள் என்று; ஒரு அசாதாரண துல்லியத்துடன் நம் கண்முன் காட்டுகின்றன. இருப்பினும் கூர்மையாகக் கவனித்தால் அதன் நிஜ முரண்பாடுகளை உணரலாம்.

இயல்பாக மனிதர்களோ அல்லது விலங்குகளோ ஒழுங்கற்ற முறையில் கண் சிமுட்டுவார்கள் (blinks eyes irregularly). ஆனால், AI வீடியோ, பெரும்பாலும் மிகவும் சரியாக சிமிட்டும்படியோ (too perfect) அல்லது வினோதமாக மீண்டும் மீண்டும் சிமிட்டும் வடிவங்களை (repetitive) உருவாக்குகிறது. இதேபோல் கைசைகைகள், விரல் அமைப்புகளைச் சற்று இயற்கைக்கு மாறானதாக AI இல் பார்க்கலாம்.

மற்றொரு விஷயம் ஒரு வீடியோ காட்டப்படும்




வெளிச்சத்தின் பின்னணி. AI வீடியோக்கள் சில நேரங்களில் நகரும் பொருள்களில் நிலையான வெளிச்சத்தைப்பராமரிக்கத் தவறிவிடுகின்றன (fail to maintain consistent illumination); இதனால் ஒரு பொருள் அல்லது உருவத்தின் பின்னணியில் உள்ள இடையில் ஒரு நுட்பமான வித்தியாசத்தைக் (Mismatch) காட்டுகின்றன.

வீடியோவில் எழும் சத்தங்களும் (Audio clues) சற்று கணிக்க உதவும். காரணம் AIயால் உருவாக்கப்பட்ட குரல்கள் மிக மென்மையாக (Smooth) ஒலிக்கக்கூடும். மனிதனின் சுவாசம் அல்லது சுற்றுப்புறச் சத்தத்தில் (ambient noise) நாம் இயற்கையாக உணரும் வேறுபாடுகள் (natural imperfections) இதில் இல்லாமல் இருக்கலாம். இவையெல்லாம் ஒரு வீடியோவாக பார்க்கும்போது, மிகவும் நிஜமாகவும் கச்சிதமாகவும் இருக்கும்; ஆனால் அதேநேரம் உயிரற்றதாகவும் அல்லது இயல்புக்கு மாறானதாகவும் நம்மை உணரவைக்கும்.

டிஜிட்டல் யுக்திகள்:

கம்ப்யூட்டர்: சிலர் உள்ளுணர்வைவிட தொழில்நுட்பத்தை விரும்புவார்கள். அவர்களுக்கு என பல கம்ப்யூட்டர் பயன்பாடுகள் (Tools) இப்போது உள்ளன. Google Gemini's detector, Hive AI's browser extension, and Tencent's deepfake checker போன்ற விஷயங்கள் AI யா அல்லது உண்மையான வீடியோவா என்று பகுப்பாய்வு செய்கின்றன. இதோடு 'AiVidect' போன்ற பிரத்யேகத் தளங்களும் இதற்குத் தீர்வுகளை வழங்குகின்றன. இது ஒரு விடியோவின் எல்லா மூலைமுடுக்கிலும் AIயால் செய்யப்பட்ட தந்திரங்களை எடுத்துக்காட்டுகின்றன.

மொபைல் செயலிகள்:

Deepware Scanner, Sensity AI Mobile, DuckDuckGoose Deepfake Detector, True Media Detector, WeVerify Deepfake Detector, Sentinel AI Detector போன்ற மொபைல் செயலிகள் AIயால் உருவாக்கப்பட்ட வீடியோக்களைக் கண்டுபிடிக்க உதவுகின்றன.

கவனத்தில் கொள்ள வேண்டியவை: எந்தச் செயலியும் 100% கட்சிதமாகக் கண்டுபிடிப்பதில்லை. அறிவியல் வளர வளர அதிலும் சில பிழைகள் ஏற்படலாம். இதோடு சில செயலிகள் உங்கள் வீடியோவை பகுப்பாய்விற்காக 'cloud' எடுத்துக்கொள்கின்றன. அதனால் பயன்படுத்துவதற்கு முன்பு எப்போதும் செயலியின் தனியுரிமைக் கொள்கையை (privacy policy) கண்டிப்பாகச் சரிபார்க்கவும். இதையும் சேர்த்து தொடக்கத்தில் குறிப்பிட்ட விஷயங்களையும் மனதில் வைத்து ஒரு விடியோவை பற்றிய புரிதலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## நாகரிகம்



"கீதா! இன்னிக்கு சமையல் பிரமாதமா இருக்கணும்.புதுசா கல்யாணம் ஆன என்னோட. நண்பன் ரகுவும் அவனோட மனைவி ரமாவும் விருந்துக்கு வராங்க .உன்னோட சமையலை சாப்பிட்டுட்டு அவங்க ஓஹோன்னு உன்னைப் பாராட்டணும் " என்றான் தன் மனைவியிடம் பாலா.

"விடுங்க அசத்திடுவோம். உங்க நண்பர் சாப்பிட்டுட்டு எப்படி பாராட்டப் போறார் பாருங்க " என்றாள் கீதா.

"உன் கைப்பக்குவத்தைப் பற்றி ஏற்கனவே நான் அவன்கிட்ட சொல்லி இருக்கேன். இன்னைக்கு அவனே தெரிஞ்சுக்கட்டும்" என்றான் பாலா.

வெளியில் கார் ஹாரன் சத்தம் கேட்டது. ரகுவும் ரமாவும் காரிலிருந்து இறங்கினார்கள்.

அவர்களை வரவேற்று நலம் விசாரித்த பின் விருந்து பரிமாறினாள் கீதா. அனைத்து ஐட்டங்களும் பிரமாதமாக இருந்தாலும் இருவருமே ஒரு வார்த்தை கூட பாராட்டாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். பாலாவின் முகத்தில் ஏமாற்றம் அப்பட்டமாகத் தெரிந்தது. 'என்ன இவன்! கீதாவின் சமையல் பிடித்திருக்கிறதா இல்லையா என்று ஒரு வார்த்தை கூட சொல்லாமல் ஜடம் மாதிரி சாப்பிடுகிறானே விருந்து முடிந்து போகும்போதாவது பாராட்டுவானா' குழம்பினான் பாலா.

. 'விருந்து பிரமாதமா இருக்குன்னு கீதாவை பாராட்டலாம்னா அதை ரமா எப்படி எடுத்துக்குவான்னு தெரியல. ஒரு பெண்ணின் எதிர்ல இன்னொரு பெண்ணைப் பாராட்டிப் பேசுறதுங்கிறது நடக்கிற காரியமா..பேசாம வீட்டுக்கு போயிட்டு ரமாவுக்குத் தெரியாம போன் பண்ணிப் பாராட்டுவோம் ' என்று நினைத்தவாறு காரில் ஏறப் போன ரகுவிடம் "ஏங்க நீங்க கார்ல இருங்க ஒரு நிமிஷம் வந்துடுறேன்" என்று சொல்லிவிட்டு வீட்டினுள் சென்றாள் ரமா.

"கீதா அக்கா! உங்க கைப் பக்குவம் சூப்பர் . இந்த மாதிரி ஒரு விருந்தை நான் எங்கேயுமே சாப்பிட்டதில்லை அவர் இதைப் பற்றி சொல்லி உங்களைப் பாராட்டுவார்னு நினைச்சேன். ஆனா ஒண்ணுமே சொல்லல. இந்த மாதிரி விஷயங்களை உடனுக்குடன் பாராட்டணுங்கற அடிப்படை நாகரிகம் கூட அவருக்கு தெரியலையே!" என்று சொல்லிவிட்டு கிளம்பிய ரமாவை வியப்புடன் பார்த்தாள் கீதா.



-மு.மதிவாணன்
குபேந்திரன் நகர்
அரூர்-636903

## ருக்குமணி

மாலை. பள்ளி முடிந்து எல்லா மாணவர்களும் சென்றுவிட்டனர். ருக்குமணி மட்டும் செல்லவில்லை. வகுப்பாசிரியர் ராமதுரை பள்ளி முடிந்ததும் தன்னை வந்து பார்க்கச் சொல்லியிருந்தார்.ருக்குமணி தன் பையை எடுத்துக் கொண்டு ஆசிரியர்கள் ஓய்வெடுக்கும் அறையை நோக்கிச் சென்றாள். அறைக்குள் நுழையும்போதே ஆசிரியர் தனக்காக காத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

" சார் ! பள்ளி முடிந்ததும் உங்களை வந்து பார்க்கச் சொல்லியிருந்தீ ர்களே..!" என்றாள்.

" நேரா விஷயத்துக்கு வரேன் " என்றவர் தொடர்ந்தார். " நீ மூணு நாளா வீட்டுப்பாடம் எழுதல்ல. கேட் டால் நோட்புக் வாங்கப் பணம் இல்லேங்கறே. உனக்கு நோட்டுப் புத்தகம் பள்ளியில் இலவசமா கொடு க்கணும்னு எதிர்பார்க்கிறயா ! மதிய உணவுதான் இலவசம். மற்ற தெல் லாம்கூட இலவசமா வேணும்னு கேட்டால் எப்படி ?"

" சார் ! நான் அப்படிச் சொல்லலை. என்கிட்ட தற்சமயம் பணம் இல்லே ன்னுதான் சொல்றேன் ! "

" ஆல்ரைட் ! நீ என்னிக்கு வீட்டுப்பாடம் எழுதமுடியுமோ அன்னிக்கு பள்ளி வந் தால் போதும்.அதுவரை வரவேண் டாம்.இதை நான் மற்ற மாணவர்கள் எதிரில் சொல்ல விரும்பல்ல. அதனா ல்தான் உன்னை தனியா வரச்சொன் னேன். நீ போகலாம் ! "

ஆசிரியர் முகத்திலடித்தது போல் பேசிட மளுக்கென்று கண்களில் நீர் தெளும்பிடதலைகவிழ்ந்தபடி திரும்பி நடந்தாள் ருக்கு. நாளையிலேர்ந்து மதிய உணவு கட் ! ஒருவேளையாவது திருப்திகரமாக உண்கிறோம். இப் போது அதற்கு வந்தது ஆப்பு ! மனம் விசனப்பட்டது.

" ஏய் ! ஏண்டி லேட்டு ? " குடிசைக்குள் நுழைந்த ருக்குவை அவள் அம்மா முனியம்மா கேட்டாள். பையை தூக்கி மூலையில் கடாசினாள் ருக்கு. " நாளையிலேர்ந்து பள்ளிக்கு வர வேணாம்னு வகுப்பாசிரியர் சொல் லிட்டார் ஆத்தா ! " குரல் தழு தழுக்க கூறினாள்.

முனியம்மா திடுக்கிட்டாள். " ஏண்டி வரவேணாம்னு சென்னார் ? "

" ம்..நோட் புக் வாங்கித்தான்னு உன் கிட்ட எத்தனை தடவை கேட்டிருப் பேன். நீ வாங்கித் தரல்லே. அதனால நான் மூணுநாளா வீட்டுப்பாடம் எழுதல்ல. அதுக்குதான் இந்த தண்டனை ! "

' சே ! கேவலம் ஒரு நோட்டு வாங்கமுடியல்ல. அதனால் வீட்டுப்பாடம் எழுத முடியல்ல. அதுக்கு பள்ளிக்கே வரக் கூடாதுன்னு சொன்னா எப்படி ! மதிய உணவு தடைப்படுமே ! பாவம் சின்ன ஞ்சிறிசு ! ஒருவளையாவது வயிறார சாப்பிட்டுக்கிட்டிருந்தது. அதுக்கும் வேட்டா...' மனத்தில் குமுறினாள் முனியம்மா.

அன்று இரவு தாயும் மகளும் சரியாக உறங்கவில்லை. மறுநாள் எழுந்த முனியம்மா , " ருக்கு ! சீக்கிரம் ரெடி யாகு. ஸ்கூலுக்குப் போவோம் !" என்றாள். " ஆத்தா ! என்ன விளையாடறியா ? ஆசிரியர் வரக்கூடாதுன்னு சொல் லிவிட்டார். எந்த மூஞ்சியை வச்சிக் கிட்டு என்னப் பள்ளிக்கூடம் போகச்சொல்றே ? " சற்றுகோப மாக கேட்டாள் ருக்கு. " அடியே ! சிறுக்கி மகளே ! நாம கேடு கெட்ட ஜென்மங்க. நமக்கு கோபம், ரோஷமெல்லாம் வரக்கூடாது. ஒரு தட்டு சோற்றுக்காக நாம அவமான த்தையெல்லாம் தாங்கிகிட்டுதான் ஆகணும். கிளம்பு. நானும் உன்கூட வரேன்.



தலைமையாசிரியர பார்த்து பேசுவோம். அவருநிச்சயம் நமக்காக மனசு இரங்குவாரு ! "

தாய் சொல்வதிலும் நியாயம் இரு ப்பதாகப்பட்டது ருக்மணிக்கு.உடனே இருவரும் பள்ளிக்குக் கிளம்பினார் கள். ஆசிரியர்களும் மாணவர்களும் பள்ளிக்கு வந்தவண்ணம் இருந்தனர். ஆசிரியர் ராமதுரை இருவரையும் பார்த்துவிட்டார். பார்த்தவர் கண்க ளில் அக்னி ! கொஞ்சநேரத்தில் தலைமையா சிரியர் அறைக்குள் இருவரும் புகுந்தனர்.

" குட் மார்னிங் சார் ! " ருக்கு விஷ் பண்ண தலைமையாசிரியர் தலை நிமிர்ந்து பதிலுக்கு " குட் மார்னிங் ! " என்றார். ருக்குவைப் பார்த்து புன்முறு வல் புரிந்தார் " என்ன ருக்குமணி ! நேரா என்னப் பார்க்க வந்திட்டே ?"

" சார் ! இவங்க என் அம்மா ! உங்க க்கிட்ட ஏதோ பேசணுமாம் !"

" அப்படியா ! என்னம்மா விஷயம் சொல்லுங்க ! "

தலைமையாசிரியரின் கனிவான பேச்சுமுனிம்மாவுக்கு நம்பிக்கையைக் கொடுத்தது.

" ஐயா ! என் பொண்ணு வீட்டுப்பாடம் எழுதல்லேங்குறதுக்காக பள்ளிக் கூடம் வரவேணாமுன்னு வகுப்பா சிரியர் சொல்லிட்டாராம் ! இந்த ஒரு தபா பொறுத்துக்குங்க ஐயா ! கூடிய சீக்கிரமே நோட்டுப்புத்தகம் வாங்கிக் கொடுத்துடறேன்.இனிமேல் எம்பொ ண்ணு சரியா நடந்துப்பாங்க. தயவு செஞ்சு இவள பள்ளியிலசேர்த்துக் கோங்க அய்யா...." கெஞ்சிய முனியம்மாவைப்பார்க்க தலை மையாசிரியருக்குப் பாவமாய் இருந்தது. ருக்கு பள்ளி வராவிட்டால் அவள் மதியஉணவை இழக்க நேரி டும். ஒருவேளைஉணவாவது சற்று திருப்தியாகச் சாப்பிடட்டும் என்ற எண்ணம் தோன்றியது அவர் மனத்தில்."

இதோபாருங்கம்மா ! ருக்குமணி குத்தேவையானதை எப்படியாவது கஷ்டப்பட்டு வாங்கிக் கொடுங்க. ஏன்னா நல்லாபடிக்கிறவ உங்கப் பொண்ணு ! உங்களோட இயலா மையினால இவளோட படிப்பு பாழாய்ப் போயிடும். இந்த ஒரு தடவை நான் நோட்புக் என் செலவில வாங்கித் தரேன். நீங்க கிளம்புங்க." இருகரங்களைக் குவித்து வணங்கி விட்டு அகன்றாள் முனியம்மா. ருக்குவைவகுப்பிற்கு அனுப்பியபின் ஆசிரியர் ராமதுரையை அழைத்து வரும்படி பியூனிடம் சொல்ல அவனும் அகன்றான்.அடுத்த சிலநிமிடங்களில் அங்கு வந்தார் ராமதுரை. " சார் ! தாங்கள் அழைத்ததாக பியூன் வந்து சொன்னான் " " யெஸ் மிஸ்டர் ராமதுரை ! ஏழாம் வகுப்பு சி செக்ஷன்ல படிக்கிற உங்க ஸ்டூடண்ட் ருக்குமணிக்கிட்ட என்ன பிரச்னை ? "

" சார் ! அந்தப் பொண்ணு மூணுநாளா வீட்டுப்பாடமே எழுதல்ல. கேட்டா நோட்டு வாங்க காசு இல்லைங்கறா சார்...எப்ப நோட்டு வாங்கி வீட்டுப் பாடம் எழுதமுடியுமோ அப்போ ஸ்கூ லுக்கு வான்னு சொல்லிட்டேன்."

" ராமதுரை சார் ! ருக்குமணி நல்ல ஸ்டூடண்ட். எல்லாப் பாடங்களிலும் நிறைய மதிப்பெண்கள் எடுத்து வகுப்பிலேயே முதல் ராங்க் எடுக்கி றாள். பாவம் ஏழ்மையில் அவதிப் படறா. வீட்டுப்பாடம் எழுதாதது தவறுதான். அதற்காக பள்ளிக்கே வராதேன்னு சொன்னால் அது மிகப் பெரியதண்டனையல்லவா.... அதனால் அவள் மதிய உணவை இழக்க நே ரிடுமே ! ஒரு வேளை அந்தப் பெண் வயிறார உண்ணும் சோற்றில் நாம் மண்ணள்ளிப் போடலாமா..நல்லா நினைச்சுப் பாருங்க. " " சாரி சார் ! இந்தப் பாயிண்டை நான் சுத்தமா மறந்திட்டேன் சார் ! எனக் கேற்பட்ட கோவத்தில நான் கொஞ்சம் ஓவராநடந்துக்கிட்டேன். ஃபர்கிவ் மி சார் !".

" பரவாயில்ல சார் ! இனிமேல் மாணவர்கள் கிட்டே கடுமையா நடந்துக்காதீங்க ! "

" எஸ் சார் ! " என புன்சிரிப்போடு கூறி விட்டு அகன்றார் ஆசிரியர் ராமதுரை.



- வி.கே.லக்ஷ்மிநாராயணன்
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116

## ஆன்மிக களஞ்சியம்

# இடங்கழியார் நாயனார் வரலாறு

தொடர்-45



-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி

மடல் சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் அடியேன்" – திருத்தொண்டத் தொகை.

இடங்கழி நாயனார் என்பவர் தில்லையம்பலத்துக்குப் பொன்வேய்ந்த ஆதித்தனுக்கு முன்னோராகச் யாதவர் குல ஆய்வேளிர் குடியில் தோன்றினார்; கோனாட்டின் தலைநகராகிய கொடும்பாளூரில் தங்கியிருந்து வேளிர் குலத்து அரசினை ஏற்று ஆட்சிபுரிந்தார். இவர் சிவபெருமானுக்கு திருவடி தொண்டு புரிவதே கடமையாக கொண்டிருந்தார். இவரது ஆட்சிக் காலத்தில் சைவ நெறியும் வைதீக நெறியும் வளர்ந்தது. சிவன் கோவில்களில் சிவாகம விதிப்படி வழிபாடுகள் நடைபெற்றன.

இவ்வாறு சிறப்புற்ற ஆட்சியில் தவசீலர் ஒருவர் சிவனடியார்களுக்கு திருவமுது செய்வித்து வந்தார். இவரிடம் திருவமுது படிக்க பொருள் ஏதும் ஒரு நாள் கிடைக்கவில்லை. மனம் தளர்ந்த அந்த தவசீலர் எப்படியாவது நெல் பெற எண்ணி இடங்கழியாரின் அரண்மனைக்குள் நள்ளிரவில் திருடனைப்போல் புகுந்தார். நெல் களஞ்சியத்தை திறந்து நெல்லை எடுத்தார்.

இரவுக் காவலர்கள் இதை கண்டு அந்த தவ சிலரை பிடித்து மன்னரிடம் கொண்டு சென்றனர், மன்னர் இடங்கழியார் கோபம் கொள்ளாது, "ஏனய்யா நெல்லை திருடினீர்" என்று கேட்டார்,





இதற்கு இந்த தவசீலர் சிவனடியார்களுக்கு திருவமுது செய்வது எனது வழக்கம், என்று பொருள் இல்லாமையால் செய்ய முடியாமல் தடைப்பட்டது என்றும், அதனால்தான் இவ்வாறு செய்தேன் என்று சொன்னார்.

இதனைக்கேட்ட இடங்கழியார் மனமிரங்கி "இவரன்றோ எனக்கு பண்டாரமாவார்" என்று கூறி அவரை விடுதலை செய்தார். பிறகு அவரது நிலை அறிந்த உள்ளதோடு சிவனடியார்கள் எல்லோரும் நற் பண்டாரம் மட்டுமேயன்றி, குறைவில்லாத மற்றைய நிதிகளின் பண்டாரங்களாகிய எல்லாவற்றையும் கொள்கையாக முகர்ந்து கவர்ந்து கொள்க! என்று பறைசாற்றினார். அத்தனை பொருட்களையும் சிவனடியார்களுக்கு வழங்கினார். நாட்டு மக்களின் நலன் கருதி நல்லாட்சி புரிந்தார்.

## புகழ்துணையார் நாயனார் வரலாறு

புடைசூழ்ந்த புலியதண் மேல் அரவாட வாடி பொன்னடிக்கே மனம் வைத்த புகழ்த்துணைக்கு மடியேன்" திருத்தொண்டத்தொகை.

புகழ்த்துணையார் என்பவர் சோழ நாட்டிலுள்ள செருவிலிபுத்தூரிலே சிவவேதியர் குலத்தில் தோன்றினார். சிவனது அகத்தடிமைத் தொண்டிற் சிறந்த அவர் சிவபெருமானைத் தத்துவ நெறியியில் சிவாகம விதிப்படி வழிபட்டு வந்தார். அக்காலத்தில் பஞ்சம் வந்தது. அவர் பசியில் வாடினார். அப்போதும் இறைவரை விடுவேனல்லேன் என்று இரவும் பகலும் விடாது பூவும் நீரும் கொண்டு பூசித்து வந்தார். ஒருநாள் பசியால் வாடி இறைவரைத் திருமஞ்சனமாட்டும் பொழுது திருமஞ்சனக்குடத்தைத் தாங்கமாட்டாமையினால் கைதவறிக் குடத்தினை இறைவர் திருமுடிமேல் விழுத்திவிட்டு நடுங்கி வீழ்ந்தார். அப்போது இறைவரது திருவருளால் துயில் வந்தது. இறைவர் அவரது கனவில் தோன்றி 'உணவுப்பொருள் மங்கிய காலம் முழுவதும், ஒரு காசு நாம் தருவோம்' என்று அருளினார். புகழ்த்துணையார் துயிலுணர்ந்து எழுந்து பீடத்தின் கீழ்ப் பொற்காசு கண்டு கைக்கொண்டு களித்தனர். அவ்வாறு பஞ்சம் நீங்கும்வரை இறைவர் நாடோறும் அளித்த காசு கொண்டு துன்பம் நீங்கி, இறைவரது வழிபாடு செய்து வாழ்ந்திருந்து பின் சிவனடி சேர்ந்தனர்.

தொடரும்...

# திருவரங்கம் கோயில் மர்மங்கள்..!

108 திவ்ய தேசங்களில் ஒன்றாகவும் பூலோக வைகுண்டம் என்றும், உலகிலேயே இரண்டாவது மிகப்பெரிய கோயிலாகக் கருதப்படும் ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதர் கோயில் பல மர்மங்களை உள்ளடக்கி உள்ளது. அதில் ஆறு அதிசய மர்மங்கள் நினைவில் கொள்வோம்.6

**ஜொலிக்கும் கண்கள் :**
ஸ்ரீரங்கம் பெருமாளின் கண்கள் கோஹினூர் வைரங்களை விட விலைமதிப்பற்ற வைரங்களால் உருவானதாகவும், அது ஆங்கிலேயர் காலத்தில் திருடுபோய் விட்டதாகவும் சொல்கிறார்கள. விபீஷணர் ஸ்ரீரங்கம் பெருமாளுக்கு இதை வழங்கியதாகக் கூறப்படுகிறது.


**ஐந்து குழி, மூன்று வாசல் :**
ஸ்ரீரங்கம் கோயிலில் தாயார் சன்னிதிக்கு அருகில் உள்ள ஐந்து குழி. மூன்று வாசல் அதிசயம் நிறைந்தது. இங்கிருக்கும் ஐந்து குழிகளிலும், ஐந்து விரல்களை விட்டுப் பார்க்கும்போது பரமபத வாசல் தெரியும். இப்படித்தான் தாயார் பெருமாளை வணங்குகிறார் என்பது ஐதீகம். அர்த்தபஞ்சக ஞானத்தை குறிப்பது ஐந்து புள்ளியாகும். மூன்று வாசல் என்பது பிரம்மத்தின் ஞானம் என்றும் கூறப்படுகிறது.

**தேயும் செருப்புகள்:**
பள்ளிகொண்ட பெருமாள் ஸ்ரீரங்கத்தில் அணிந்திருக்கும் காலணிகள் தேய்மானத்திற்குப் பிறகு ஸ்ரீரங்கம் திருக்கொட்டாரம் என்னும் இடத்தில் தூணில் மாட்டி வைத்திருப்பதை காணலாம். இந்த செருப்பை செய்வதற்கென்றே தொண்டர்கள் இருக்கிறார்கள். தனித்தனியாக வெவ்வேறு இடங்களில் இரண்டு செருப்பையும் செய்வார்கள். ஆனால், அதிசயமாக இரண்டுமே ஒன்று போல இருக்கும்.

**ஸ்ரீராமானுஜர் திருமேனி :**
120வது வயதில் ஸ்ரீ ராமானுஜர் பரமபதம் எய்தினார். வைணவ சம்பிரதாயப்படி வைணவ பதவி அடைந்த துறவிகளை எரியூட்டாமல் சமாதியில் அமர வைத்து மூடப்படும். அதேபோல்தான் ராமானுஜரின் உடல் ஸ்ரீரங்கத்தின் வசந்த மண்டபத்தில் சமாதிப்படுத்தப்பட்டுள்ள உடல் இன்றும் உயிரோட்டத்துடன் காட்சியளிக்கிறது. ராமானுஜரின் உடல் பச்சைக் கற்பூரம் மற்றும் குங்குமத்தால் செய்யப்பட்ட கலவையால் மூடப்பட்டிருப்பதால் 900 ஆண்டுகள் கடந்தும் அப்படியே காட்சி தருவது அதிசயமாகும்.

**அசையும் கொடிமரம் :**
எல்லா கோயில்களிலும் உள்ள கொடிமரங்கள் மரம் மற்றும் கல்லால் செய்யப்பட்டு இருப்பதால் அசையாது. ஆனால், ஸ்ரீரங்கத்தில் உள்ள ரங்க விலாஸ் மண்டபத்திற்கு அருகில் கொடிமரத்தை வணங்கிவிட்டு மேலே அண்ணாந்து பார்த்தால் அசையும் தோற்றம் தெரியும் என்கின்றனர். அப்படி அசைவது போல் நமக்குத் தோன்றினால் நாம் வேண்டியது நிச்சயம் நிறைவேறும் என்றும் சொல்லப்படுகிறது.

**வளரும் நெற்குதிர்கள் :**
ஸ்ரீரங்கம் கோயிலில் சக்கரத்தாழ்வார் சன்னிதிக்கு அருகில் 20 அடி விட்டமும் 30 அடி உயரமும் கொண்ட நெற்கதிர்கள் இருக்கின்றன. 1000 ஆண்டுகள் பழைமையான வட்ட வடிவ இந்த நெல் சேமிப்பு கிடங்கால் மொத்தமாக 1500 டன் எடை கொண்ட நெல்லை சேமிக்க முடியும். இதில் ஆச்சரியம் என்னவென்றால், இதில் எந்தக் காலத்திலும் நெல் குறைந்து பற்றாக்குறையே ஏற்பட்டது இல்லை. அதேபோல, எவ்வளவு நெல் கொட்டினாலும் அதை ஏற்றுக்கொள்ளும் தன்மையை உடையது இந்த நெற்குதிர்கள். வைணவ ஆலயங்களிலேயே வருடத்தில் 322 நாட்கள் திருவிழா நடைபெறும் ஒரே கோயிலாக இருக்கும் ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதர் கோயிலுக்கு 2017ம் ஆண்டு யுனெஸ்கோ விருது வழங்கி சிறப்பித்துள்ளது.





**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி.

# தினம் ஒரு தலைவர்கள் — கமலா சட்டோபாத்தியாயா வரலாறு

கமலா சட்டோபாத்தியாயா 3 ஏப்ரல் 190329 அக்டோபர் 1988) என்பவர் ஓர் இந்திய சமூக சீர்திருத்தவாதி, பெண்ணியவாதி மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர் ஆவார். இவர் இந்திய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டதற்காக நினைவு கூரப்படுகிறார். மேலும் இந்திய கைவினைப் பொருள்கள், கைத்தறி வளர்ச்சி, சுதந்திர இந்தியாவில் நாடக மறுமலர்ச்சி ஆகியவற்றிற்கு உந்து சக்தியாக இருந்தார். மேலும் கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியாகவும், இந்திய பெண்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக உழைத்தவர்.

சங்கீத நாடக அகாதெமியின் துணைத்தலைவர், பாரதீய நாட்டிய சங்கத்தின் தலைவர், அகில இந்திய கைவினைஞர்கள் வாரியத் தலைவர், யுனெஸ்கோவின் உறுப்பினர் எனப் பல பதவிகளை வகித்து சிறப்பாகப் பணியாற்றியவர்.[1]

**வாழ்க்கை**
இவர் 3 ஏப்ரல் 1903 அன்று மங்களூரில் இவரது பெற்றோருக்கு நான்காவது மகளாகப் பிறந்தார். இவரின் தந்தை ஆனந்தையா தரேஸ்வர் மாவட்ட ஆட்சியராக மங்களூரில் இருந்தார், இவரின் தாயார் பெயர் கிரிஜாபாய் ஆகும்.
கமலாதேவி படிப்பில் கெட்டிக்காராக இருந்தார் இவரது பெற்றோர்களைப் பார்க்க வீட்டிற்கு வரும் மகாதேவ கோவிந்த ராணடே, கோபாலகிருஷ்ண கோகலே, ராமாபாய் ராணடே, அன்னிபெசண்ட் அம்மையார் போன்ற தலைவர்களின் உரையாடல்களைக் கேட்டு, இளம் வயதிலேயே சுதேச இயக்கத்தில் ஆர்வம் கொண்டார்.
இவர் சமசுகிருத பாரம்பரிய நாடக்கலையான கேரள-கூடியாட்டத்தை, அதில் சிறந்த ஆசிரியரும் அபிநயத்தில் சிறந்த நடன ஆசிரியரான பத்மசிறீ மணி மாதவ சாக்கியார் என்பவரின் ஊரான கிள்ளிக்குரிசிமங்களத்தில் உள்ள அவரது வீட்டில் தங்கியிருந்து கற்றார்.
இவரது இளமைக் காலம் சோகம் நிறைந்ததாக இருந்தது. இவரது முன்மாதிரியாக இருந்த இவரது அக்காள், சகுணா, அவரது இளம் வயதில் திருமணம் முடிந்த உடனேயே, இறந்து போனார். கமலாவின் தந்தை அவருக்கு ஏழு வயதிருக்கும் போதே இறந்தார்.

**முதல் திருமணம்**
இவருக்கு 1917இல், 14 வயதானபோது திருமணம் நடந்தது ஆனால் இரண்டாண்டுகளில் கணவர் இறந்தார்.
1920களில்
அரிந்திரநாத்துடனான திருமணம்
இதற்கிடையில், சென்னை ராணி மேரி கல்லூரியில் தன் படிப்பைத் தொடர்ந்தார். அப்போது அவருடன் படித்த சக மாணவரான சுஹாசினி சட்டோபாத்யாவின் தங்கை சரோஜினி நாயுடு, அறிமுகமானார். பின்னர் தங்கள் திறமையான சகோதரனான அரியை கமலாதேவிக்கு அறிமுகப்படுத்தினர். அவர் நன்கு அறியப்பட்ட ஒரு கவிஞர்-எழுத்தாளர், நடிகர் போன்ற பன்முகத்தன்மை உடையவராக இருந்தார். கலைகளில் ஈடுபாடு உடைய இருவருக்கும் நல்ல புரிதல் உண்டாயிற்று.

கமலாதேவிக்கு இருபது வயது இருக்கும்போது அரிந்திரநாத் சட்டோபாத்யாய் என்பவருடன் திருமணம் நடந்த்து. இந்த விதவை திருமணத்திற்கு சமூகத்தில் எதிர்ப்பு கடுமையாக இருந்தது.
இந்த தம்பதியினரின் ஒரே மகன் ராமா அடுத்த ஆண்டு பிறந்தார். பிற்காலத்தில் இவர் சில திரைப்படங்களில் நடித்தார். அக்காலத்தில் நல்ல குடும்பப் பெண்கள் திரைப்படங்களில் நடிப்பது ஆதரிக்கப்படாத காலம் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் முதலில் ஊமைத் திரைபங்களில் நடித்தார். இதில் ஒன்று கன்னடத் திரையுலகின் முதல் படமான, மிரிச்சகட்டிகா (வசந்தசேனா) (1931). இரண்டாவது படமாக தான்சேன் என்ற இந்தி படத்தில் 1943இல் நடித்தார். கே. எல். சைகல் மற்றும் குர்ஷீத் உடன் நடித்தனர்.[4] தொடர்ந்து சங்கர் பார்வதி (1943), மற்றும் தான்னா பஹத் (1945) ஆகிய படங்களில் நடித்தார்.
திருமணமான பல ஆண்டுகளுக்கு பிறகு, கமலாதேவி விவாகரத்து பெற்றார். அந்நாளில் இது பெண்கள் பின்பற்ற அஞ்சும், தயங்கும் மிகப் புதிதான ஒரு நடைமுறை. எனவே இதைக் குறித்தும் கமலா தேவி மீது மிகுந்த விமர்சனங்கள் எழுந்தன.

**இலண்டன் செல்லல்**
அவர்களது திருமணத்திற்கு கொஞ்ச காலத்திற்கு பிறகு அரிந்திரநாத் தனது முதல் வெளிநாட்டு பயணத்தை மேற்கோண்டு, லண்டன் சென்றார். ஒரு சில மாதங்கள் கழித்து கமலாதேவி, அங்கு சென்று அவருடன் சேர்ந்தார், அவருடன் சேர்ந்து இலண்டன் பல்கலைக்கழகத்தின் பெட்ஃபோர்ட் கல்லூரியில் சமூகவியல் பாடத்தில் டிப்ளோமா பட்டம் பெற்றார்.

**விடுதலை இயக்கத்திற்கான அழைப்பு**
கமலாதேவி இலண்டனில் இருந்தபோது, இந்தியாவில் காந்தி ஒத்துழையாமை இயக்கத்துக்கு 1923இல் அழைப்புவிடுத்ததை அறிந்து இந்தியா திரும்பி, சேவாதளத்தளம் என்னும் காந்திய அமைப்பில் இணைந்தார். விரைவில் கமலாதேவி தளத்தின் மகளிர் பிரிவின் பொறுப்பாளராக ஆனார். சேவாதளத்தின் சார்பில் அனைத்திந்திய அளவில் ஆளெடுப்பது பெண்களுக்கு பயிற்சி அளிப்பது ஆகிய பணிகளில் ஈடுபட்டார்.

1926, இல் இவர் அனைத்திந்திய மகளிர் மாநாடு (AIWC) அமைப்பின் நிறுவனரான மார்கரெட் கசின்சு என்பவரை சந்தித்தார். அவரின் தாக்கத்தால் சென்னை மாகாண சட்டசபைக்கு போட்டியிட்டார். இவர் இந்திய சட்டமன்றத்துக்கு போட்டியிட்ட முதல் பெண் ஆவார் இவர் தேர்தல் வேலைகளை சில நாட்கள்தான் பார்க்கதான் இயன்றது. ஆனாலும் இவர் 55 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியுற்றார்.

அனைத்திந்திய மகளிர் மாநாடு அடுத்த ஆண்டில், அனைத்து-இந்திய மகளிர் மாநாடு (AIWC) நிறுவப்பட அதன் முதல் அமைப்புச் செயலாளராக ஆனார். தொடர்ந்து வந்த ஆண்டுகளில், அ.இ.ம.மா. கிளைகள் நாடு முழுவதும் இயங்கத் துவங்கின, தன்னார்வ திட்டங்கள் கொண்டு மதிப்புள்ள தேசிய அமைப்பானது.
கமலாதேவி, இந்தியா மட்டுமின்றி அய்ரோப்பிய நாடுகளிலும் விரிவாகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பெண்களுக்கான கல்வி, சமுதாய வளர்ச்சிக்கான திட்டங்கள் முதலியவை குறித்து ஆராய்ந்தார். அதன் பயனாக டெல்லியில் பெண்களுக்கான ஹோம் சயின்ஸ் (LADY IRVIN COLLEGE FOR HOME SCIENCE) கல்லூரியை ஆரம்பித்தார்.
1930களில்
காந்தியடிகளால் 1930-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட உப்பு சத்தியாகிரகக் குழு உறுப்பினர்களான ஏழு பேர்களில் இவரும் ஒருவராக இருந்து மும்பை கடற்கரையில் பெண்கள் பிரிவில் உப்பு சத்தியாக்கிரகம் செய்தார்.
உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தின்போது சுதேசி உப்பை மும்பையை பங்கு சந்தையில் விற்க முயன்றபோது கைது செய்யப்பட்டார். இதற்கு ஓராண்டு கழித்து 1936இல் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, ஜெயபிரகாஷ் நாராயணன், ராம்மனோகர் லோகியா, மினுமசானி முதலிய தலைவர்களுடன் இணைந்து பாடுபட்டார்.

1940களில்
இரண்டாம் உலகப்போர் துவங்கிய காலத்தில் கமலாதேவி இங்கிலாந்தில் இருந்தார், அவர் உடனடியாக மற்ற நாடுகளுக்கு இந்தியாவின் நிலைமையை இந்தியாவின் பிரதிநிதியாக சென்று இந்தியாவின் விடுதலைக்கு ஆதரவைத் திரட்டினார்.
விடுதலைக்கு பிந்தைய பணிகள்
இந்தியா சுதந்திரமடையும்போது இந்தியா பாகிஸ்தான் என இரண்டு நாடுகளான பிரிந்தன. இதனையொட்டி நாட்டில் இந்து முஸ்லீம் கலவரம் ஏற்பட்டது. இக்கலவரத்தில் பல்லாயிரம்பேர் படுகொலை செய்யப்பட்டனர். ஏராளமானவர்கள் படுகாயமடைந்தனர். பல லட்சம் இந்துக்களும், முஸ்லீம்களும் அகதிகளாக்கப்பட்டனர். இந்த வேளையில் மக்களுக்கு பரிதாபாத் நகரத்தில் சேவை மையம் அமைத்து 50,000 மக்களுக்கு மருத்துவ உதவியும், உணவு வசதியும், தங்குமிடமும் செய்து கொடுத்தார்.

இவ்வாறு மக்கள் மறுவாழ்வுக்கும் அதே சமயம் அவர்கள் இழந்த கைவினைத் தொழிலுக்கு உதவும் பணியினை இரண்டாம் கட்டமாக தொடங்கினார்.
இந்திய கைவினைப் பொருள்கள் மற்றும் கைத்தறி ஆகியவற்றிற்கு சுதந்திரத்திற்கு பிந்தைய காலத்தில் பெரும் புத்துயிர் அளிக்க வேண்டும் என பொறுப்பெடுத்து நவீன இந்தியாவில் அதன் மிகப்பெரிய மரபை காக்க பாடுபட்டார்.

**விருதுகள்**
இவரது பணிகளை அங்கீகரிக்கும் விதமாக இந்திய அரசு பத்ம பூசன் விருதை 1955இல் அளித்தது. பின்னர் இரண்டாவது மிக உயரிய விருதான, பத்ம விபூசன் விருதை 1987லிலும், ராமன் மகசேசே விருதை 1966இல் பெற்றார். மேலும் சங்கீத் நாடக அகாடமி விருது , இசை, நடனம், நாடகம் ஆகியவற்றுக்காக இந்தியாவின் தேசிய அகாடமி, 1974 இல் வாழ்நாள் சாதனைக்கான விருது வழங்கியது.
யுனெஸ்கோ அமைப்பு கைவினைப். ஊக்குவிக்கும் இவரது பணிகளுக்காக 1977 இல் விருது வழங்கியது. சாந்தி நிகேதனும், அதன் மிக உயர்ந்த விருதை அளித்து இவரைப் பாராட்டியது.



# ‘திரெளபதி 2’ படத்துக்கு தடை விதிக்க ஐகோர்ட் மறுப்பு



திரெளபதி-2 படத்தை வெளியிட தடை விதிக்க உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது. மதுரை மாவட்டம் மேலூரை சேர்ந்த மகாமுனி அம்பலகாரர், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது: திருவண்ணாமலையை தலைமையிடமாக கொண்டு 14-ம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த மன்னன் வீர வல்லாள தேவன். இவரின் வாழ்க்கை வரலாறு அடிப்படையில் திரெளபதி-2 படம் தயாரிக்கப்பட்டுள்ளதாக படக்குழு தெரிவித்துள்ளது.

வீர வல்லாள தேவன் என்பவர் கள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதற்கு பல கல்வெட்டுகள், செப்பு பட்டயங்கள் உள்ளிட்ட வரலாற்று ஆவணங்கள் உள்ளன. ஆனால், திரெளபதி-2 படத்தில் வீர வல்லாள தேவனை வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவராக இயக்குநர் மோகன் சித்தரித்துள்ளார்.திரைப்படத்தின் சுவரொட்டிகளில் வீர வல்லாள தேவன் என்பதை வீர வல்லாளன் என்று மட்டும் குறிப்பிட்டுள்ளனர். இது உள்நோக்கம் கொண்டது. மேலும், கள்ளர் சமூகத்தினரிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தும். இதை கண்டித்து மேலூரில் பல போராட்டங்கள் நடத்தப்பட்டன. இந்நிலையில், படத்துக்கு அவசர அவசரமாக ‘யு/ஏ’ சான்றிதழை தணிக்கை வாரியம் வழங்கியுள்ளது. யு/ஏ சான்றிதழை திரும்பப் பெறுமாறு தணிக்கை வாரியத்திடம் மனு அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, திரெளபதி-2 படத்தை தணிக்கை வாரியம் மறு ஆய்வு செய்யவும், படத்தில் இடம்பெற்றுள்ள வரலாற்றுப் பிழைகளை திருத்தம் செய்யும் வரை படத்தை வெளியிட இடைக்கால தடை விதித்தும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி ஆர்.விஜயகுமார் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. மத்திய அரசு சார்பில், “படத்துக்கு டிச. 31-ல் தணிக்கை குழு யு/ஏ சான்று வழங்கியுள்ளது” என்று தெரிவிக்கப்பட்டது.

பின்னர் நீதிபதி, “தணிக்கை வாரியம் சான்றிதழ் வழங்கியுள்ளதால் நீதிமன்றம் தலையிட முடியாது. பொதுநல வழக்கு தொடர உரிமை வழங்கப்படுகிறது” என்று கூறி, மனுவை முடித்து வைத்து உத்தரவிட்டார்.



தெலுங்கு, தமிழ், ஹிந்தி என பல மொழிகளில் முக்கிய நடிகையாக இருப்பவர் ராசி கண்ணா. தாராள கிளாமர் காட்டி நடித்து வரும் அவருக்கு அதிக அளவில் ரசிகர்களும் இருக்கிறார்கள்.

தற்போது தமிழில் ஒரு படம், தெலுங்கில் ஒரு படம், ஹிந்தியில் பல படங்களை கைவசம் வைத்திருக்கிறார் அவர்.

இந்நிலையில் அவர் தாராள கிளாமர் உடையில் போஸ் கொடுத்து போட்டோஷூட் எடுத்து இருக்கிறார். அந்த புகைப்படங்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது.

# சிரஞ்சீவி மகளானார் கீர்த்தி ஷெட்டி



நடிகர் சிரஞ்சீவி நடித்துள்ள ‘மன சங்கர வரபிரசாத் காரு’ படம் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. இதில் நயன்தாரா நாயகியாக நடித்துள்ளார். அனில் ரவிபுடி இயக்கிய இப்படம் வெற்றிபெற்றதை அடுத்து ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்து, சிரஞ்சீவி அறிக்கை வெளியிட்டுஉள்ளார்.

இந்நிலையில் அவர் இயக்குநர் பாபியுடன் மீண்டும் இணைகிறார். இந்தப் படம் அப்பா, மகள் உறவை பற்றிய படம் என்று கூறப்படுகிறது. இருவரும் இதற்கு முன் ‘வால்டர் வீரய்யா’ படத்தில் பணியாற்றி இருந்தனர்.

இதில் சிரஞ்சீவியின் மகளாக கீர்த்தி ஷெட்டி நடிக்க இருக்கிறார். இதன் படப்பிடிப்பு விரைவில் தொடங்க இருக்கிறது. படத்தை கேவிஎன் புரொடக்ஷன்ஸ் தயாரிக்கிறது. நடிகை கீர்த்தி ஷெட்டி தமிழில் கார்த்தி ஜோடியாக நடித்துள்ள வா வாத்தியார் பொங்கலுக்கு வெளியாகியுள்ளது. அடுத்து பிரதீப் ரங்கநாதன் ஜோடியாக லவ் இன்சூரன்ஸ் கம்பெனி, ரவி மோகன் ஜோடியாக ‘ஜீனி’படங்களில் நடித்துள்ளார்.



# நடிகர் சல்மான் கானுக்கு டெல்லி உயர் நீதிமன்றம் நோட்டீஸ்



ஆளுமை உரிமை வழக்கில் பிரபல பாலிவுட் நடிகர் சல்மான் கானுக்கு டெல்லி உயர் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. பிரபல பாலிவுட் நடிகர் சல்மான் கான், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம், ஆளுமை உரிமைக்கோரி டெல்லி உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தார்.

விசாரித்த நீதிமன்றம், சல்மான் கானின் அடையாளம், குரல் போன்றவற்றை எந்த நபரோ, வலைதளமோ, செயலியோ அல்லது மின் வணிக தளமோ பயன்படுத்த இடைக்காலத் தடை விதித்தது.

இந்நிலையில், சீனாவைச் சேர்ந்த செயற்கை நுண்ணறிவு நிறுவனம் ஒன்று குரல் மாதிரிகளை உருவாக்குவதை முதன்மை வணிகமாகச் செய்து வருகிறது. இந்நிறுவனம் சல்மான் கானின் ஆளுமை உரிமை வழக்கில் உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்கால தடையை நீக்கக் கோரி டெல்லி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது. இதையடுத்து இந்த மனுவுக்கு 4 வாரங்களில் பதில் அளிக்கும்படி, சல்மான் கானுக்கு நோட்டீஸ் அனுப்பிய டெல்லி உயர் நீதிமன்றம்,வழக்கை பிப்.27-ம் தேதிக்குத் தள்ளிவைத்தது.

# ‘தடயம்’.. ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியீடு!




சமுத்திரகனி நடிக்கும் ‘தடயம்’ படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்தப் படம் நேரடியாக ஜீ5 ஓடிடியில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சமுத்திரகனி நடிப்பில் கடைசியாக திரையரங்குகளில் வெளியான படங்கள் ‘இட்லி கடை’, ‘காந்தா’. இந்தப் படங்களை தொடர்ந்து சமுத்திரகனி நடிப்பில் உருவாகி வரும் படம் ‘தடயம்’. இந்தப் படத்தை நவீன்குமார் பழனிவேல் இயக்குகிறார். அஜய் கிருஷ்ணா தயாரிக்கிறார்.

இப்படம் ஜீ5 ஓடிடியில் நேரடியாக வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக சமுத்திரகனி நடிப்பில் உருவான ‘வினோதய சித்தம்’ திரைப்படமும் ஜீ5 ஓடிடியில் நேரடியாக வெளியிடப்பட்டது. ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. தெலுங்கில் இந்தப் படத்தை பவன்கல்யாணை வைத்து சமுத்திரகனி ப்ரோ என்ற பெயரில் இயக்கியிருந்தார்.

# ஊர்வசியின் சகோதரர் நடிகர் கமல் ராய் காலமானார்



நடிகைகள் ஊர்வசி, கல்பனா, கலாரஞ்சனி ஆகியோரின் சகோதரரும் நடிகருமான கமல் ராய் (64) உடல் நலக்குறைவால் சென்னையில் காலமானார். ‘புதுசா படிக்கிறேன் பாட்டு’ என்ற படம் மூலம் தமிழில் ஹீரோவாக அறிமுகமானவர் கமல் ராய்.

தொடர்ந்து, மலையாளத்தில் வெளியான சயுஜ்யம், அந்தப்புரம், மஞ்சு, கிங்கினி, கல்யாண சவுகந்திகம், வச்சலம், ஷோபனம், தி கிங் மேக்கர், லீடர் உள்பட பல படங்களில் அவர் சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார்.மலையாள சின்னத்திரை தொடர்களிலும் நடித்து வந்தார். சென்னையில் வசித்து வந்த அவர், உடல் நலக்குறைவால் செவ்வாய்க்கிழமை காலமானார். அவருடைய இறுதிச் சடங்கு சென்னையில் நடைபெறுகிறது. அவர் மறைவுக்கு திரைத்துறையினர் இரங்கல் தெரிவித்துஉள்ளனர்.



நடிகை ப்ரீத்தி முகுந்தன் சேலையில் அழகிய போட்டோஷூட் எடுத்திருக்கும் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார். அது ரசிகர்களை கவர்ந்து வருகிறது.

ஸ்டார் படத்தின் மூலமாக தமிழில் அறிமுகம் ஆன அவர் அடுத்து இதயம் முரளி படத்தில் நடித்து வருகிறார். அந்த படத்தின் ரிலீசுக்காக அவர் காத்திருக்கிறார்.

தற்போது சேலையில் அழகிய போஸ் கொடுத்து அவர் போட்டோஷூட் எடுத்து இருக்கிறார். "செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ" என குறிப்பிட்டு அந்த ஸ்டில்களை அவர் வெளியிட, லைக்குகள் குவிந்து வருகிறது.



நடிகை மீனாட்சி சவுத்ரி தமிழில் சிங்கப்பூர் சலூன், GOAT போன்ற படங்களில் நடித்தவர். தெலுங்கில் அவர் நடித்த லக்கி பாஸ்கர் படம் பெரிய ஹிட் ஆகி அவரை பாப்புலர் ஆக்கியது.

சமீபத்தில் பொங்கலுக்கு ரிலீஸ் ஆன Anaganaga Oka Raju என்ற தெலுங்கு படத்தில் நடித்து இருந்தார்.

மீனாட்சி சவுத்ரி தற்போது அழகிய உடையில் எடுத்த போட்டோஷூட் ஸ்டில்கள் வைரல் ஆகி வருகின்றன.

# 41 வயதில் சதா எடுத்த புதிய முடிவு



ஜெயம்' படத்தின் மூலமாக தமிழ் சினிமாவில் சதா காலடி எடுத்து வைத்தார்.


ஒருகட்டத்தில் திடீரென படங்கள் நடிப்பதை குறைத்து கொண்டார்.

ஜெயம்' படத்தின் மூலமாக தமிழ் சினிமாவில் காலடி எடுத்து வைத்த சதா, அடுத்தடுத்து முன்னணி கதாநாயகர்களுடன் ஜோடி சேர்ந்து அசத்தினார்.

ஒருகட்டத்தில் திடீரென படங்கள் நடிப்பதை குறைத்து கொண்டார். அதன்பிறகு சில ஆண்டு இடைவெளிக்கு பின்னர் டார்ச்லைட்' படத்தில் விலைமாதுவாக நடித்து ஆச்சரியப்படுத்தினார். தற்போது முழுவதுமாகவே சினிமாவில் ஒதுங்கிவிட்ட சதா, புகைப்பட கலைஞராக மாறி, வனவிலங்குகளை புகைப்படம் எடுத்து வருகிறார்.

நீண்ட இடைவெளிக்கு பிறகு அவர் சின்னத்திரை நடன நிகழ்ச்சி ஒன்றில் நடுவராக கலந்துகொள்ளப்போவதாக தகவல் வெளியாகி இருக்கிறது. மேலும் புதிய கதைகளும் கேட்டு வருவதாக தகவல். இது 41 வயதான சதாவின் ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை கொடுத்திருக்கிறது.

## காந்தி டாக்ஸ்: ஏ.ஆர். ரகுமான் இசையில் 'ஏதோ ஏதோ' மெலடி பாடல்




மௌன படமாக உருவாகி உள்ள இப்படம் இம்மாத இறுதியில் வெளியாக உள்ளது

பா.விஜய்யின் வரிகளில் பாடல் வெளியாகி உள்ளது.

விஜய் சேதுபதி, அரவிந்த் சாமி, அதிதி ராவ் ஹைத்ரி மற்றும் சித்தார்த் ஜாதவ் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ள மௌன படம் காந்தி டாக்ஸ். கிஷோர் பாண்டுரங் பெலேகர் இயக்கியுள்ள இந்தப் படத்திற்கு ஏ.ஆர். ரகுமான் இசையமைத்துள்ளார். இப்படம் இம்மாதம் இறுதியில் 30ஆம் தேதியன்று வெளியாக உள்ளது.

இந்நிலையில் இப்படத்தின் மூன்றாவது பாடலான 'ஏதோ ஏதோ' வெளியாகி உள்ளது. நீண்ட நாட்களுக்கு பின்னர் பா.விஜய் எழுத்துகளில் உருவாகி உள்ள இப்பாடல் நல்ல மெலடியாக அமைந்துள்ளது. மௌனப் படம் என்பதால் இதன் பின்னணி இசை படத்திற்கு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அதற்கேற்றவாறே இசைப்புயலின் இசையும் அமைந்துள்ளது.

## தயாரிப்பாளர்களுக்கு துணிச்சல் இல்லை- மாளவிகா மோகனன்



லோகா' என்ற மலையாள படம் இந்திய அளவில் கவனம் ஈர்த்தது.

கல்யாணி மீது தயாரிப்பாளர்கள் துணிந்து வைத்த நம்பிக்கையே இதற்கு காரணம்.

தென்னிந்திய சினிமாவின் முன்னணி நட்சத்திரமாக ஜொலித்து வரும் மாளவிகா மோகனன், கவர்ச்சியால் ரசிகர்களை தன் வசம் கட்டிப்போட்டும் வைத்திருக்கிறார்.

இதற்கிடையில் நிகழ்ச்சி ஒன்றில் அவர் பேசிய கருத்துகள் திரையுலகில் கவனம் ஈர்த்துள்ளன.

அதில், "கல்யாணி பிரியதர்ஷன் முதன்மை கதாபாத்திரத்தில் நடித்த 'லோகா' என்ற மலையாள படம் இந்திய அளவில் கவனம் ஈர்த்தது. வசூலிலும் பட்டையை கிளப்பியது. கல்யாணி மீது தயாரிப்பாளர்கள் துணிந்து வைத்த நம்பிக்கையே இதற்கு காரணம். ஆனால், பெரும்பாலான தயாரிப்பாளர்கள் இதுபோன்ற பெரிய 'பட்ஜெட்' படங்களில் ஒரு பெண்ணை முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க வைக்கத் துணிவதில்லை. இந்த நிலை மாறினால் சினிமாவுக்கு இன்னும் நல்லது" என்று மாளவிகா மோகனன் குறிப்பிட்டிருந்தார்.

## பாரத், சான்வி மேக்னா கூட்டணியில் உருவாகும் புதிய படம் இனிதே ஆரம்பம்...



கடந்த ஆண்டு நம்பவர் மாதத்தில் பாரத் மற்றும் சான்வி மேக்னா நடிக்கும் பெயரிடப்படாத படம் அறிவிக்கப்பட்டது. அறிமுக இயக்குனர் ஹரிஹரசுதன் அழகிரி இயக்குநராக இப்படத்தில் இணைந்துள்ளார்.

சாந்தி டாக்கீஸ் நிறுவனம், தயாரிப்பு எண் 4 என்ற தலைப்பில் இந்தப் படத்தைத் தயாரிக்கிறது. நடிகர் பால சரவணனும் இப்படத்தில் நடிக்க உள்ளார். படத்தின் பூஜையுடன் படப்பிடிப்பு தொடங்கியதாக படக்குழு புகைப்படங்களை வெளியிட்டு அறிவித்துள்ளது.

வரவிருக்கும் இந்த படம் நடிகர் பாரத்தின் இரண்டாவது படமாகும். லோகேஷ் கனகராஜ் இயக்கிய 'மிஸ்டர் பாரத்' திரைப்படத்தின் மூலம் பாரத் நடிகராக அறிமுகமாகிறார். அதே நேரத்தில் சான்வி மேக்னா 'குடும்பஸ்தான்' திரைப்படம் மூலம் தமிழில் அறிமுகமானவர்.



தெய்வத்திருமகள் படத்தில் குழந்தை நட்சத்திரமாக நடித்து பிரபலமானவர் நடிகை சாரா அர்ஜுன். இதன்பின் சைவம் படத்திலும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து பாராட்டுகளை பெற்றார்.

தொடர்ந்து குழந்தை நட்சத்திரமாக நடித்து வந்த சாரா அர்ஜுன், சமீபத்தில் வெளிவந்த துரந்தர் படத்தில் கதாநாயகியாக நடித்து அனைவரையும் ஆச்சரியப்படுத்தினார். இப்படம் மாபெரும் வெற்றிபெற்றுள்ளது. இதை தொடர்ந்து Euphoria மற்றும் துரந்தர் 2 ஆகிய படங்களை கைவசம் வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், நடிகை சாரா அர்ஜுன் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தன்னுடைய லேட்டஸ்ட் அழகிய போட்டோஷூட்டை பதிவு செய்துள்ளார்.

## அமிதாப்பச்சன் வீட்டில் தங்கத்தில் கழிப்பறை

இந்திய சினிமாவின் முன்னணி நடிகரான அமிதாப்பச்சான், 80 வயதிலும் படங்கள், டி.வி. நிகழ்ச்சிகள் மற்றும் விளம்பரங்களிலும் பிசியாக நடித்து வருகிறார்.

இந்தியாவின் பணக்கார நடிகராக திகழும் அமிதாப் பச்சனின் மகன் அபிஷேக்பச்சனும், மருமகள் ஐஸ்வர்யா ராயும் சினிமாவில் கலக்கிக்கொண்டிருக்கிறார்கள். அமிதாப் பச்சனின் மனைவி ஜெயா பச்சன் தற்போது எம்.பி.யாகவும் இருக்கிறார்.

இதற்கிடையில் அமிதாப்பச்சன் வீட்டில் தங்கத்தில் கழிப்பறை இருப்பதாக பரபரப்பு தகவல்கள் வெளியாகி இருக்கிறது. அதாவது பாலிவுட் முன்னணி நடிகரான விஜய் வர்மா 2016-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட சில படங்களை தனது 'இன்ஸ்டாகிராம்' பக்கத்தில் வெளியிட்டிருக்கிறார். அதில் அமிதாப்பச்சன் வீட்டின் தங்க கழிப்பறை என்று குறிப்பிடும் ஒரு செல்பி புகைப்படமும் அடங்கும்.

இந்த புகைப்படம் நேற்று சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது.



## பாடகி ஜானகியின் ஒரே மகன் உயிரிழப்பு... திரையுலகினர் இரங்கல்!



"தென்னிந்தியாவின் நைட்டிங்கேல்" என ரசிகர்களால் அன்புடன் அழைக்கப்படுபவர் பாடகி எஸ்.ஜானகி. இவரின் ஒரே மகன் முரளி கிருஷ்ணா இன்று காலமானார். நீண்ட நாட்களாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இன்று இந்த துயர சம்பவம் நிகழ்ந்துள்ளது. முரளி கிருஷ்ணாவுக்கு ஒரு மனைவி, இரண்டு மகள்கள் உள்ளனர். பாடகி ஜானகியின் மகன் என்பதைத் தாண்டி, பிரபலமான பரதநாட்டிய கலைஞர் என்ற பட்டத்தையும் பெற்றவர். சில படங்களிலும் நடித்துள்ளார்.

இந்த செய்தியை பாடகி கே.எஸ். சித்ரா சமூக ஊடகங்களில் அறிவித்துள்ளார். முரளியின் திடீர் மரணச் செய்தியை கேட்டு தான் அதிர்ச்சியடைந்ததாகவும், அன்பாக சகோதரரை இழந்துவிட்டதாகவும் தனது குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

"இன்று காலை எங்கள் அன்புக்குரிய ஜானகி அம்மாவின் ஒரே மகன் முரளி அண்ணாவின் திடீர் மறைவுச் செய்தியைக் கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். நாங்கள் ஒரு அன்பான சகோதரனை இழந்துவிட்டோம். இந்த தாங்க முடியாத வலியையும் துக்கத்தையும் கடக்கும் வலிமையை அம்மாவுக்கு கடவுள் வழங்கட்டும். மறைந்த ஆன்மா நித்திய சாந்தியில் இளைப்பாறட்டும். ஓம் சாந்தி" என்று கே.எஸ். சித்ரா அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.






## குயிலே.. பாடு குயிலே!

உதிக்கின்ற செங்கதிரை
உள்ளத்தில் உதித்துவர
ஒரு கீதம் பாடு குயிலே!
உணர்வோடு பாடு குயிலே!

காட்டுக்குள் அமைதியாக
காலையிளம் போதினிலே..
கானக் கருங்குயிலே!
கவிதையொன்று பாடு
குயிலே!

கற்பனையாம் செந்தேனில்..
கவர்ந்திழுக்கும் சுரம்
சேர்த்து.. கிளையமர்ந்து
பாடு குயிலே! கொஞ்சம்
கிளர்தெழவே பாடு குயிலே!
மானாடும் வாவியிலே
மயிலாடும் பாறையிலே
கானாடும் மந்திகளின்..
காதல்மொழி கேட்டனையே..
கவலையின்றி பாடு குயிலே!
கவிதையொன்று பாடு
குயிலே!

மானுட சமுத்திரத்தில்
மதியமர்ந்து விழிப்புவர
ஊனிருந்து உணர்வோடு..
ஒன்றுகூடி அதிகாலைப்
பாடு குயிலே! உயிர் உருக
ஒருப்பாட்டு பாடு குயிலே!

**வே.கல்யாணகுமார்**

## மேடை.

கவிஞர்களும் கலைஞர்களும்
அறிஞர்களும்
ஆளுமைகளும்.. நானும்
நீயும்..

கண்டுவந்த மேடைகளுக்கு
கணக்கில்லை வழக்கில்லை..
ஆனாலும் கூட..

ஒருமேடை.. இருமேடை..
ஓராயிரம் மேடை கண்டவரும்
காணாத மேடை அது!

உலகம் ஒரு ..நாடகமேடை
நாம் நல்ல.. நல்ல நல்ல..
நடிகர்தான் பொய்யல்ல

போடாத வேடமில்லை
ஏறாத மேடையில்லை
எத்தனையோ
மேடை கண்டோம்..
இதை காண முடியாதே!

சிறுவயதில் ஆடியதோ
பள்ளிமேடை! சிற்றின்ப
ஆசைவரக்காதல் மேடை..!
திருமணம் செய்துவைத்தார்..
திருமணமேடை..!

ஊரெல்லாம்
இருக்கிறது பொதுமேடை..!
ஊர்வலங்கள் சேருமிடம்
மாநாட்டு மேடை..!

அரசியல் வாதிகளின்
உயிர் ஆடும் கட்சிமேடை!
உயர் தொண்டர் மெய்மறப்பர்
கழகமேடை..!

தொட்டிலும் ஓர் மேடை!
கட்டிலும் ஓர் மேடை..!
கண்ணில் பட்டவர்கள்
அனைவருக்கும் ஒவ்வொரு
மேடை..

இந்த மேடை ஏறுதற்கு
எவருக்கும் விருப்பமில்லை..
அந்த மேடை செல்லும்
பாதை.. அனைவருக்கும்
பிடிப்பதில்லை..

எந்த மேடை? அந்த மேடை.?
எரியூட்டும் தகன மேடை!
இடுகாட்டில் புதையும்
மேடை.!

போனால் வராத மேடை
பாராமல் படுக்கும் மேடை..
ஆனால் இது ஒன்றே..
நிம்மதியாய் தூங்கும் மேடை!

**வே.கல்யாண்குமார்.**

1 வாழ்க்கையில் யாரையும்
ஏமாற்றி ஜெயிக்க கூடாது
ஆனால் ஏமாற்றியவர்களை
ஜெயிக்காமல் விடக்கூடாது

2. ஒருவருக்கு நீ
கொடுக்கும் மரியாதை
உன் தாயின் வளர்ப்புக்கு நீ
கொடுக்கும் சான்று

3.சிலர் நூறு ரூபாய்
கொடுத்து கடவுளை
பார்க்கிறார்கள் சிலர் நூறு
ரூபாயை கடவுளாக
பார்க்கிறார்கள்

4.கவலையும் கண்ணீரும்
ஒருபோதும் நம்மை வாழ
வைக்காது தைரியமும்
நம்பிக்கையும் மட்டுமே
நம்மை வாழவைக்கும்

5.வரியாக செலுத்திய பணம்
வரிசையில் நின்று
வாங்கினோம்
பொங்கல் பரிசாக

6. எளிமையும் பணிவும்
உயர்வுக்கு வழிகாட்டும்
தற்பெருமையும்
தலைக்கனமும்
வீழ்ச்சிக்கு
வழிகாட்டும்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக் குறிச்சி

## தோராயமாய்

அறுதியிட்டுச்
சொல்வதற்கில்லை
எதையும் தோராயமாய்ப் பல
துல்லியமாய்ச் சில!

கடிகாரங்களின் நேரங்களில்
நொடிப்பொழுதேனும்
வித்தியாசங்கள்!

நிறுக்கும் தராசுகளிலும்
கடுகளவேனும்
நிறைகுறைகள்!
இங்கே மதிப்பெண்கள்
மறுமதிப்பீட்டிற்கு
வருவதும் வழக்குகள்
மேல்முறையீட்டிற்கு
வருவதும்
கண்கூடாகிவிட்டது!


விண்ணை அளப்போம்
மண்ணை அளப்போம்
கடல் அளப்போம் என
வாய் அளந்து
கொண்டிருப்பவர்களே!

மக்கள் கடலில் தூண்டிலிட
நேரமில்லை வலைவீசித்தான்
கணக்கீடுகள்
சொல்லப்படுகின்றன!

மாற்றங்களும்
இயற்கைச் சீற்றங்களும்
நிறைந்த
உலகில்
எதிர்காலத்தைத்
தோராயமாகத்
தான்
கணிக்க
முடிகிறது!



**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்



## சின்னஞ்சிறு அழகு

மலர்கள் தோறும் நடந்து
பார்க்கிறாய்,

மகரந்த சேர்க்கையை
அதில் பதிக்கிறாய்

தேனுள்ள மலர்களைத்
தேடி அலைந்து,

தேவை தீர்ந்தபின் ஒடி
மறைகிறாய்!

மண்ணில் பூக்கும்
கோடிப் பூக்களின்,

வண்ணம் குழைத்து மேனியில்
பூசுவாய்!

வண்டுகள் ரீங்காரம்
வயோலினாய் இசைக்க,
செண்டுகளாய் சிரிக்கும்
மலர்களில் ஆடுகிறாய்!

காதலில் கனவில் மிதக்கும்
உள்ளத்திற்கு

கவி மிகு உவமையாய்
சிறகடிக்கிறாய்! மூன்று
வாரங்கள் வாழும்வாழ்க்கையில்,

முற்றிலும் மகிழ்வாய்
வாழ்ந்து மறையும்...

ரோஜா தோட்டங்களில்
நித்தம் துஞ்சும்

ராஜாக்கள் உங்களை
ரசிக்காதோ நெஞ்சம்!



**மீனா சேகர்**

## ஈரமனசு

இதயத்தின் இயல்பு காட்டும்
அதிசயக் கண்ணாடி

கருணையின் வழி வந்து
கரங்களில் வெளிப்படும்

விழிகளில் ஈரமாய்
இதழ்களில் மொழியாய்
பார்வையில் கருணையாய்
பட்டுத் தெறித்து
வெளியாகும்

தன்மையில் குணம் காட்டாது
மென்மையாய் செயல்
காட்டும்

தொட்டுப் பார்த்தால்
தெரியாது பட்ட பயனில்
தெரிந்துவிடும்

பழகும் குணத்தில்
அறிந்து விடும்
மனிதன் குணத்தை
உணர்த்தி விடும்

கொடுக்கும் அளவு
பெரிதில்லை கொண்ட
மனமே சிறப்பாகும்

ஈர மண்ணில்
விளைச்சல் மிகும்
ஈரமனதில் உவகை மிகும்

விளைச்சல் நமக்கு
உணவாகும் உவகை என்றும்
மருந்தாகும்

மிருக மனதில்
கருணையுண்டு
மனித மனதில்
கடுமையுண்டு

ஈரமனசு குணம் காட்டும்
ஈகை நல்கி அரசாளும்

அகிலத்தில் யாவர்க்கும்
ஆறடி சொந்தம்
அதற்கே இங்கு போராட்டம்

வாழும் வாழ்க்கை வசமாகும்
ஈர மனசு உடனாகும்

ஈரமனசை குணத்தில் ஏற்று
கொடுக்கும் மனதை
கொள்கையாக் கொண்டால்
வையம்
நம்மைப்
போற்ற
வாழும்
வாழ்க்கை
அழகாகும்.



**தமிழ்நிலா**



## புத்தகம்

நம் வாழ்க்கைக்கு
உறுதுணையாக நிற்பது!

நம்முடன் நாளும்
பேசிக்கொண்டிருப்பது!

நம் வீட்டில் வரிசையாக
அமர்ந்திருப்பது!

நமக்கு வலிமைகளைத்
தருவது!

நமக்கு இனிமையை குவித்து
மகிழ்வது!

நமக்கு உலகை அளந்து
காட்டுவது!

நமக்கு ஒவ்வொரு நாளும்
உத்வேகத்தை கொடுப்பது!

தனிமைக்கு
தன்னம்பிக்கையைகொடுப்பது!

புத்தகங்களை படிக்கப்
பழகுவோம்!

புத்துணர்ச்சி
பெற்று
மகிழ்வோம்!



**ம.இந்திராணி**
திருச்சி



## அவள்

சீக்கிரமே வாங்கிவிடு
உன் சிரிப்பின் விதத்துக்கு
ஒரு காப்புரிமை.

கார்மேகப் பின்னணியில்
கணமேனும் நிற்காதே.
அள்ளி முடித்த கூந்தல்
கண்ணுக்குத் தெரியவில்லை.

**கே. பி. ஜனார்த்தனன்**

## கடமை

கடமையை நிறைவேற்ற
மனிதனின் உறுதியான
மற்றும் கடுமையான
செயல்பாடு தேவை.
மனசாட்சியின்
மென்மையான அழைப்பை
ஏற்கவேண்டும்.
உரிமைக்கு முன் நிற்கும்
பொறுப்பு கடமை.
உழைப்பில் மலரும் நேர்மை
விதை. சொந்த நலத்தைத்
தாண்டிய பார்வை.
சமூகத்தின் சுமையைத்
தாங்கும் திறன் வேண்டும்.
சிரமத்தில் தளராத துணிவு
தேவை. சிறுமை வந்தாலும்
நிமிர்ந்து நிற்கும் நெஞ்சுரம்
வேண்டும். கடமை என்பது
நாளைய நம்பிக்கையை
விதைக்கும் செயல்.
கடமையால் உயர்கிறது
மனிதர்களின் வாழ்க்கைத்
தரம். ஒருபோதும்
கடமையைத் தட்டிக்
கழிக்கக் கூடாது.
நாட்டில் உள்ள அனைவரும்
நல்ல குடிமக்களாகத் திகழ
வேண்டியது
இன்றி
யமையாதது.



**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.




ஆடிப்பட்டம்
தேடி விதைத்து!
கூடி ஒன்றாய்
ஓடி உழைத்து!
உழுது வயலில்
நெல்லை விதைத்து!
பழுது இன்றி
பார்த்து வளர்த்து!
விளைந்த பின்னே
கதிரை அறுத்து!
நெல்மணியை
தனியே பிரித்து
எடுத்து! உணவுக்காக
வீட்டில் சேர்த்தது!
உழைத்து கலைத்த
மாட்டிற்காக வைக்கோல்
பாரம் வண்டியில் பூட்டி!
மாடும் அவனும்
உற்சாகமாய்
சாலையை
கடக்கும்
விவசாயி!!!




**பொன். பனகல் பொன்னையா**

# நூல் விமர்சனம்:

நூலின் பெயர்: அரங்கனோடு பொழுதுகள்
ஆசிரியர் : ரம்யா வாசுதேவன்
வெளியீடு: எழுத்து பிரசுரம்
விலை : ₹500
தொடர்புக்கு: 89250 61999




*Underthe Tree கதை சொல்லி "ரம்யா வாசுதேவனை" எழத்தாளர் சொற்கொல்லர் எனும் "லா.ச.ரா"வின் புதல்வர் சப்தரிஷி லா.ச.ரா எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.*

*அரங்கனோடு பொழுதுகள் அரங்கன், ஆண்டாள், அவர்தம் அடியார்கள் பற்றி தாம் அனுபவித்த ஸ்ரீரங்கத்துப் பெருமைகளை 50 அத்தியாயங்களில் அழகுற விவரித்துள்ளார்.*

*இப்புத்தகம் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி வைகுண்ட ஏகாதசி பெருவிழாவில் "நம்மாழ்வார் மோட்சம்" நடைபெற்ற (09.01.26) அன்று கிடைத்ததும் அவன் அருளன்றி வேறென்ன? ஸ்ரீரங்கம் கோயில் யானை ஆண்டாளுக்கு கேக் செய்து பிறந்த நாள் கொண்டாடிய பாட்டி பற்றிப் படித்ததும் பல வருடங்களுக்கு முன் கல்கி இதழில் வெளியான "ஆண்டாள்" பற்றிய கட்டுரையும் யானைக்கு கடலைமிட்டாய் பிடிக்கும் என்ற செய்தியும் என் நினைவிற்கு வந்தது. இங்கே ஆண்டாள் யானை நவராத்திரி உற்சவத்தில் மௌத்ஆர்கன் வாசிப்பது மற்றும் யானை மீது தங்க குடத்தில் பெருமாளுக்கு திருமஞ்சனம் செய்ய நீர் எடுத்து வருவதையும் குறிப்பிட்டுள்ளார்.*

*உலுக்கான் படையெடுப்பால் ஊர்ஊராகச் சென்று 48 ஆண்டுகள் கழித்து வந்த உற்சவப் பெருமாள் போல இன்னொரு உற்சவரும் இருக்க இதில் யார் அழகிய மணவாளன் என ஈர ஆடை பிரசாதம் மூலம் 90 வயது வண்ணான் கண்டறிந்தது.*

*கோயிலில் தன் பாட்டியோடு வந்த குழந்தை தன் மழலை மொழியில் அங்கே பட்டராக உள்ள தன் அப்பாவை பதாங்கி (ஸ்ரீ பாதம் தாங்கி) என எழுத்தாளர் ரம்யாவிடம் சொன்னது*

*திருமங்கை மன்னன் திருநாடு அலங்கரிக்கும் முன் பாடியதே "திருநெடுந்தாண்டகம்" என இதன் மூலம் அறிந்தேன். பெருமாளிடம் தனக்கென எதுவும் வேண்டாது அடியவர்கள் ஆழ்வாரை இன்னும் அனுபவிக்க வைகுண்ட ஏகாதசி உற்சவத்தை திருமங்கை மன்னன் ஏற்படுத்தியது.*

*சுரதானி எனும் துலுக்க நாச்சியார் பக்தியை உலகறியச் செய்த" பின் சென்ற வல்லி" முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் ஸ்ரீகாந்த் தம்பதியருக்கு கோயிலை சுற்றிக் காட்டி விளக்கங்கள் அளித்து ரம்யா அவர்களோடு புகைப்படம் எடுத்துக் கொண்டது.திருவரங்கம் கோயிலில் உபயோகிக்கும் கலை சொற்கள்:*

*அங்கில் - பெருமாள், தாயாருக்கு சாற்றப்படும் கவசம் அளவுக்காரன் - கொட்டாரத்தில் நெல் அளிப்பவன் சேமம் - சர்க்கரைப் பொங்கல் என ஏராளமான அறிய வேண்டிய அரிய தகவல்களுடன் ஒரு கையேடாக இந்நூல்.*

**ஸ்ரீகாந்த் திருச்சி**



## பொய்த்துப் போன பருவமழை...

அப்பசி கார்த்திகையில்
அடைமழை அறவேஇல்லை...

ஒட்டிய வயிறு ஒருபிடி
சோறு... உடுத்திய
கோவணத்தோடு
உழன்று சுழன்று
உழைத்தவனுக்கு
ஏது மிச்சம்? ஆனாலும்
கணக்குப்பார்த்தான்...

மூத்த மகளை கரையேற்ற
ஒழுகும் வீடு கூரை வேய...
குல சாமிக்கு பொங்கலிட,
கந்துவட்டி மீட்டர்
வட்டி போதாகுறைக்கு
சுயஉதவிகுழு வட்டி கடன்...
இப்படி ரத்தம் உறிஞ்சும்
அத்தனை வட்டியும்
வாங்கி வாங்கியே எல்லாம்
நடந்துவிடும்... ஆனால்,
அங்காடியில் கொடுத்த
மூவாயிரத்தோடு இலவச
வேட்டி சேலைகள் கட்டி
இல்லாளுடன்
மகிழ்ந்திட்டான் பொங்கலோ
பொங்கல்
என்று...
மனதில்
வலியோடு..!



**ஏ.எம். ஷெரீஃப்,**
புதுக்கோட்டை.

## பாதையெல்லாம் சோலையாகும்

விழிகள் மூடிப் படுத்திருந்தால்
விடியல் விழிக்குத் தெரியாது
விழித்த விழிக்கே இருள்விரட்டி
விடிந்த ஒளியின் எழில்தெரியும்
வழியா வியர்வை உடலிருந்தால்
வாழ்க்கை இருளில் போய்முடியும்
பொழியும் வியர்வை உடலுக்கே
பொலியும் அழகு வாழ்வமையும் !

விரல்கள் பத்தும் அருங்கருவி
வீணாய் வைத்தால் வெறுங்கருவி
விரல்கள் இயங்கும் திறன்பெற்றால்
வியக்கும் மாற்றம்
உனில்விளையும்
வரங்கள் எல்லாம் கனவுகளில்
வாய்க்கும் அற்புத மந்திரங்கள்
விரல்கள் ஒன்றே இந்நிலத்தில்
விளைக்கும் அற்புத சரித்திரங்கள் !

காலை மடக்கி அமர்ந்திருந்தால்
கடந்து போமோ பாதையினை
காலை மாலை மாறிமாறி
கடந்து செல்லும் உனைவிட்டே
நாளை என்று கடத்தாமல்
நடக்கக் காலை எடுத்துவைத்தால்
பாலை மணலும் பூக்களாகும்
பாதை யெல்லாம் சோலையாகும் !

வெல்லும் முயற்சி இல்லாமல்
வெற்றி உன்னில் விளையாது
புல்லும் உனக்கு வில்லாகும்
புதிய முயற்சி உனக்கிருந்தால்
அல்லும் பகலும் சோராமல் ஆற்றும்
உறுதி தளராமல்
சொல்லும் வியர்வை
முத்துகளால்
சொர்ணம்போல
வாழ்வொளிரும் !



**பாவலர் கருமலைத்தமிழாழன்**

## நீதானே...நீதானே

உன் முகத்திலே
ஆயிரம் முத்தம்
கொடுக்க...
துடிக்கிதே என் மனம்
தினம் கொடுக்க....

நான் தேடிய
தேவதையாய்
நீ இருக்க..
தேர்ந்தெடுத்த
சந்தோசத்தில் நான்
இருக்கேன்...

நிலையில்லா
வாழ்க்கையில் நீதானே
நிம்மதியை கொடுத்த
சிலைதானே...
சில்லென்ற காற்றாய்
சினுங்கியது நீ
தானே...

துளி துளியாய்
வந்தவள்
புயலாய் மாறியதும்
நீதானே...
குடையின்றி
நின்றவனை
முத்தமிட்டு
நனைத்தவள்
நீதானே... நீதானே....



**பொன்.கருணா**
நவி மும்பை




எத்தனையோ நான்
பெற்றேன் அத்தனையும்
இழந்தேன் : எத்தனையோ
நான் இழந்தேன்
அத்தனையும் பின்



பெற்றேன்:
நான்
தோற்பது
ஏனோ
உன்னிடமே
மட்டுமே
நேரமே
எனக்காக சில துளிகள்
நிற்கமாட்டாயா ?

**ஓம்குமார் P N,** மதுரை

## பழகிச் செல்வோம்...

பிரதிபலனில்லா உதவி
ஆயுளை வளர்க்கும்
அரு மருந்து.

அதிகாரம் ஆடம்பரம்
எல்லாமே ஒரு நாள் திடீர்
மாயம்.

மானுடத்தை
ஆற்றுப்படுத்தும்
விருந்தோம்பல்
நேசிக்கப்படுகிறது.

வெளிப்படைத் தன்மை
இல்லாதார் இல்வாழ்க்கையில்
புகழ்ச்சியே மிஞ்சும்.

புரிதலோடு உதவுதலை
பழகிச் செல்வோம்...



தலைமுறைகள்
பேசட்டும்
நம்மை.

**எறும்பூர் கை. செல்வகுமார்,** செய்யாறு.

## நிரந்தரம்

பொய் தப்பிக்க வைக்கும்
குற்ற உணர்வு நீடித்திடும்
ஆழ்மனதில் சிம்மாசனமிடும்
மாட்ட வைக்க எதிர்நோக்கும்

சிக்குவோம் என்று
உணர்ந்தும் உண்மையை
உரைத்து சரணடை
நிம்மதிப் பெருமூச்சு



வெளிப்படும்
சிறந்தவன்
என்று ஊரே
பாராட்டும்

**பி. பழனி,** சென்னை.



## ஆணின்காதல்:

ஆழ்மனதில் ஆடிச்சென்று
அசைந்தாடினாலும்,
இசைந்தாலும்–
மாறாமனக்கண்

மனமொத்து இசைந்து
மகிழுடன் வாழ இணைய–
அனைத்துக் கொள்வேன்!!
அவளின்

அத்தனை ஆசைகட்கும்
ஆணிவேராய்– நான்!!

தூங்கும் நொடி இமை
மூடாது காத்து– சிறு
சிணுங்கலில்

மார்போடணைத்து– உச்சி
முத்தமிட்டால் போறுமே!!



மங்கையவள்
– மனதோடு
மணமாக
நிறைவாளே!!!!

**பானுஸ்ரீ**
பாண்டிச்சேரி


## காலக்கொடுமை

பசிப்பிணி போக்கும்
பயிர்களோ பம்மிப்பம்மி
வளர்கின்றன... உயிர்
காக்கும் மூலிகை
வகைகளும் கூட
உயிர்பயத்துடனே
தழைக்கின்றன...
காலச்சத்ருவான
களைச்செடிகளோ
காற்றில் கத்திச்சண்டை
போடுகின்றன... களைய



வேண்டிய
கரங்களோ
சாதுவாக
சாமரம்
வீசுகின்றன.

**க.குமாரகுரு**
மயிலாடுதுறை



## பூவேலி...



வேலியிடத்தான்
முடியவில்லை...

அத்துமீறி
நுழையும்...
உன்

நினைவுகளுக்கு....

**தே.சௌந்தரராஜனன்**
கல்யாணம் பூண்டி

## இந்தியத் தமிழனின் தமிழ்

நான் அமெரிக்காவில்
பிறந்திருந்தால் ஒரு
நிறுவன "தொழிலதிபராக"
வந்திருப்பேனோ !

நான் சீனாவில்
பிறந்திருந்தால் ஒரு புதிய
மின்சாதனப் பொருளைக்
கண்டுபிடித்து "விஞ்ஞானி"
ஆகியிருப்பேனோ !

நான் ரஷ்யாவில்
பிறந்திருந்தால் ஒரு
தொழில்நுட்ப "வல்லுநராய்"
இருப்பேனோ !

நான் இலங்கையில்
பிறந்திருந்தால் நம்
தமிழினம் காத்த கேப்டன்
வேலுப்பிள்ளைபிரபாகரனின்
புலிப்படையில்
புரட்சித்தீயாக "புலியாக"
இருந்திருப்பேனோ!

ஆனால் நான் இந்தியாவில்
"தமிழ்நாட்டில்" பிறந்ததினால்
பெருமைப்படுகிறேன்!
தமிழின் சுவையை
"சுவைக்க" தொடங்கியதால்
இப்படி "சிந்திக்கத்"
தோன்றுகிறது ! அவ்வாறு
தோன்றுகிறதை இவ்வாறு
"எழுதத்" தூண்டுகிறது !

"தமிழ்"

இப்படி எழுதுவதால்!
என் "சிந்தனையை"
தூண்டுவதால்! நான் ஒரு
"எழுத்தாளனாக"
ஆகிவிடுவேனோ ! என்று
நம்புகிறேன் ! நம் "இந்தியத்



திருநாட்டின்"
"தாய்த்
தமிழ்நாட்டில்"

வாழ்க தமிழ்!
வளர்க தமிழ்!
வெல்க தமிழ்!

**G.A.கோவிந்தராஜ் (எ)சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்



## என் ப்ரிய சகியே!

என் மகாராணி
உன் குரல் கேட்ட பின்(பு)
பதுங்கு குழியிலிருந்து
வெளியே ஓடி வரும்
ஓர் அரசனைப் போல்
துள்ளிக் குதித்து
ஓடி வருகிறது என்
கா த ல் மனசு!
*என் ப்ரிய சகியே என்று
நான் உன்னை
அழைக்கும் போதெல்லாம்
பார்க்கும் போதெல்லாம்
நினைக்கும் போதெல்லாம்
ஏழு பிறப்பிலும் உன்னை
இணைந்திருக்க வேண்டும்
என்று ஆசை வருகிறது!
என் எல்லாக் கவிதைகளிலும்
நீ மட்டும் இடம் பெற
எப்பொழுதடி என்னிடம்
அனுமதி பெற்றாய் நீ!

------------------------

கடலிருக்கும் இடத்தில் தான்
முத்தெடுக்க இயலும் என்ற
இயல்பைத் தாண்டி
கா த லி ல் மூழ்கி
என்னை(யே) எடுத்த
*என் ப்ரிய சகியே!
உன் கா த லை ப் பெ ற
எனக்கே தெரியாமல் நான்
தவம் செய்திருக்க வேண்டும்!
உன்னிடம் நானும் என்னிடம்
நீயும் சிறைப்பட்டிருக்கையிலும்
கூட இந்தக்கா த ல்
அழகாகவும் சுகமாகவும்
தானிருக்கிறது!
என் அகத்திலும் புறத்திலும்
எப்பொழுதும் இணைந்தே
செயல்படும் என்
நவீன கண்ணகி நீ!

------------------------

கோயிலில் மணியடித்து
நீ என் பார்வையைத் திசை
திருப்பி உன் கண்கள்
என்னிடம் பேச
நினைப்பதெல்லாம்
கா த ல் (மட்டும்) தானே
*என் ப்ரிய சகியே!
உன் கிளிப் பேச்சும் குயில்
குரலும் மயில் நடையும்
மான் துள்ளலும் நீ
என் மனதையும் நான் உன்
இடையையும் சுற்றி வளைத்து
நம் கா த லை
அரங்கேற்றத்தானே!
எடுத்ததற்கெல்லாம் நீ
சிணுங்கி என் உள்ளத்தைக்
கிரகிப்பது கா த லை எடுப்பார்
கைப்பிள்ளையாக்கத்தானே!
கவலையுறாதே....
இனி நான் எப்பொழுதும்
உன் மீது(மட்டுமே)
கா த ல் கொண்டிருப்பேன்!

------------------------

நவக்கிரகம் சுற்ற அடிக்கடி
ஆலயப் பிரவேசம் செய்கிறாய்
நீ! உன்னைச்சுற்ற அடிக்கடி
உன்னைப்பின் தொடர்கிறேன்
நான்! முற்பகல் நான்
உன்னைத்தொடர்ந்தால்
பிற்பகல் நீ என்னைத்
தொடர்வாய் என்று எனக்கு
நம்பிக்கையை வழங்கியது
மிக சத்தியமாய் ஆசான்
வள்ளுவன் தான்
*என் ப்ரிய சகியே!
எனக்காக நீ எழுதிய
ஒவ்வொரு கவிதையையும்
மிகக் கவனமாக
சேமித்து வைத்திருக்கிறேன்!
அத்தனையையும்
உனக்குக் க னி வா ன
மு த் த ங் க ளா க வழங்க!
வா....அன்பே நாம் இருவர்
நாம் ஒருவர் நாம் மூவர்!

------------------------

நீ என்னை முத்தமிடும் வரை
எனக்கான அன்பை நீதான்
குத்தகைக்கு எடுத்திருப்பாய்
என்று நான் நினைத்துக் கூடப்
பார்க்கவில்லை
*என் ப்ரிய சகியே!
ஒரு வாழைக்காய் பஜ்ஜியில்
தொடங்கி வாழப் போகும்
நாட்கள் வரை எனக்காக நீ
சிந்திக்கையில் தான்
ஒவ்வொரு துளியிலும்
உன் கா த ல் தெரிகிறது!
தெறிக்கிறது!
தவில் வாசிப்பது போல் நீ
அடிக்கடி சண்டையிட்டாலும்
சமாதானம் செய்ய
புல்லாங்குழல் வாசிப்பது போல்
அத்தனை அழகாகப்
பரிமாறப்படுகிறது உன்
ஆ சை மு த் த ங் க ள்!
நேற்று இன்றல்ல



என்றுமே
*என் ப்ரிய
சகியுடன் மட்டுமே
என் கா த ல்
ஒ ப் ப ந் த ங்கள்!

**முத்து ஆனந்த்**
வேலூர்



## முதுமை

பழுநரை ஒன்று
பறந்த நிலையில்
அசைந்து இசைந்தபடி
வகிடை வருட...

இளமை அழகை
முதுமை கொஞ்சிட
ஏனோ மனதில்
தாக்கம் நிகழ்ந்திட..

மேனியின் சுருக்கம்
மின்னொலி பூக்க
பிம்மங்கள் எழுந்திட
பார்வை நொருங்கிட.

வீருகொண்டு எழும்
பாதங்கள் மெல்ல
தயக்கம் கொண்டிட
நடைகள் தளர்ந்திட..

நடுங்கிய விரல்கள்
நாணம் கொண்டிட
முதுமையின் வருகை
முகத்தில் தென்பட..

மனதின் ஏக்கம்
மகரந்த தாக்கம் வானம்
வசப்பட வாழ்நாள்
குறைந்திட..

இயற்கையின் கணக்கு
எதுவென அறியா பேதலில்
மனம் சித்தம் கலங்கிட..



வினோத
வாழ்வின்
விடியல்
பயணம்
எதுவென
அறியா
நகைத்திடுதென்
மனமே...

**பா.வெண்ணிலா பாலாஜி**
நெய்வேலி.

## புது மாப்பிள்ளை !

டிப் டாப்பா டிரெஸ்
பண்ணிட்டு...புதுசா வாங்கின
நிக் ஷூவை போட்டுகிட்டு...
செல்போனை காதுல வச்சு
பிஸியா இருக்கிற மாதிரி
பேசிகிட்டு... சொந்தம் பந்தம்
நண்பர்களோட டெம்போ
ட்ராவலர் வாகனத்தில் பெண்
பார்க்க போறவனை பார்த்த
சிரிப்பு சிரிப்பா வருது....
"ஏலே.. நாங்களும் ஒரு
காலத்திலஇப்படித்தான்டா...!"
என் மனதுக்குள்
நினைத்தவாறு !

**எம்.பி.தினேஷ்,** கோவை

## வண்ணம் பெருக்கி வளம் பெறுவோம்!

இங்கு வண்ணம் என்பது
பசுமையை குறிக்கிறது!

மரம் செடி கொடிகள்
செழித்தால் வண்ணமயமே!

பூமியின் வெப்பத்தை
குறைக்கும் இயற்கை
அழகோ வனம்!

காடு வளர்த்தால்
மழைப்பொழிவு சீராக
இருக்கும்!

இது விவசாயத்தை
மேம்படுத்தும்!

உயிரினங்கள், பறவைகள்,
மலர்கள் வண்ணமாக
காணப்படும்!

மனித குலம் நீடிக்க
வாழ்வளிக்கும்!

மனநலம், மகிழ்ச்சி
இயற்கையானது
மனிதர்களின்
மனஅழுத்தத்தை குறைக்கும்!

மழையைத் தந்து
மண்ணைக் காக்கும் உயிரின்
மூச்சாய் காடு!

நிழல் தரும் மரங்கள்
நீரோடை சத்தம்!

ஆயிரம் உயிர்கள் வாழும்
தளம் அன்னை இயற்கையின்
அதிசயக்களம்!

வன விலங்குகளும்
பறவைகளும் பாதுகாப்பு
புகலிடம்!

மரங்கள் கார்பன்டை
ஆக்சைடை உறிஞ்சி நாம்
சுவாசிக்க தேவையான
ஆக்சிஜனை வழங்குகிறது!

வேர்கள் மண்ணை பிடித்து
கொள்வதால் மண் அரிப்பை
தடுக்கும்!

மரம் வளர்ப்போம் மழை
பெறுவோம்! காடு அழித்தால்
நாடு அழியும்! வருங்கால
தலைமுறைக்கு நாம் தரும்
சொத்து பசுமை மட்டுமே!

வண்ணம் பெருக்கி
வளம் பெறுவோம்! மரம்
வளர்க்கவேண்டும்
நீர்நிலைகளை பாதுகாப்போம்!

சுற்றுச்சூழலைத் தூய்மையாக
வைத்திருப்போம்!

இந்த செயல்பாடு மூலம் பூமி
வண்ணமயமாக மாறும்!



தானாகவே
ஆரோக்கியம்
அமைதி
செல்வம்
ஆகிய
வளங்கள்
நம்மை வந்து
சேரும்!

**பெ.திருமுகம்,** மணமேல்குடி



நீ நிறைய புத்தகங்களை
படிக்க ஆசைப்படுகிறாய்
நானோ ஏனோ
உன்னை நிறைய படிக்க
பேராசைப் படுகிறேன்!

AI காதலி விலை மலையளவு
ரொம்பவும் அதிகம் தான்
வருமானத்திற்கு மீறி
வாங்கினேன் தனித்து
விடப் பட்ட அனாதையான
வாழ்வில் அன்பிற்காக
ஏங்கினேன் ஐ போன் மகளே
கண்ணெடுத்து காணடி
காது கொடுத்து கேளடி
ஹாய் ஸ்ரீ என்னை கொஞ்சம்
காதலி இந்த 5G உலகில்
இன்னும் கொஞ்சம்
வாழ்ந்து கொள்கிறேன்!

இவ்வளவு நேரம் என் கூட
தான் இருந்தே திரும்ப ஏனடா
பார்க்க வந்தாய் என்கிறாய்
எப்படி சொல்வது? உறக்கம்
வர இன்னொரு முறை
இன்னும்,இன்னுமென
உன்னை பார்த்து காதலிக்க
வேண்டுமென்பதை!

சிரித்துத் தானடி போனாய்
எப்படி பறிப்போனது?
அந்த பாழாய் போன மனசு!

பிறந்ததிலிருந்து செல்பி
எடுக்க ஆசைப்பட்டது
உன் கூட மட்டும் தான்!

இப்படிக்கு
உன் செல்போன்
ஒவ்வொரு கனவும்
உன்னைப் போலவே
புரியாமலே வருகிறது!

வேறுபாடு
நீ புத்தங்களை
கண்களால் படிக்கிறாய்
நான் உன்னை
காதலால் படிக்கிறேன்!

விளக்கேற்றினாய்
பற்றி எரிந்தது எனக்குள்!

புரிய தான் வில்லை
அந்த பார்வையில்
அப்படி என்ன தான்
இருக்கிறதென்று!
என் இதயத் தேரை இழுத்து
நடுத் தெருவில் விடாதே
கண் சிமிட்டிப் பார்
உன் வாசல் வந்து விடுவேன்
காதல் கடவுள் துணையோடு!

சிக்கி தான் தவிக்கிறேன்
உன் சிவப்புக்கல் பதிந்த
மூக்குத்தியில்!

நீ நனையாத வரை
அந்த அடமழை
விடப் போவதில்லை!

இப்பிரபஞ்சத்தில் நிகழும்
எல்லாவற்றையும்
அவனே தீர்மானிக்கிறான்.
அவனின்றி
ஒரு அணுவும் அசையாது!

சிணுங்கும் உன் கொலுசொலி
எனக்கு சிம்பொனிதான்!!

ஜன்னலோரம் என் கண்கள்
ஏங்கும் பட்டாம் பூச்சி நீயடி!
மார்கழி மாசத்து
வாடைக்காற்றில்
உன் வாசம் அறிந்தேனடி
ஓசோன் படலத்தில்
குடியிருக்க சென்றாலும்
ஓயாமல் உன்
நினைப்புத்தானடி!
கனவிலாவது வந்திடு
காதல் தொல்லை தந்திடு!!

நாகத்தின் விஷமெல்லாம்
உன் ஒரு துளி பார்வைக்கு
ஈடாகுமா? தயவு செய்து
உன் கண்களை மூடிக்கொள்
இல்லையேல்
அந்த கடவுள் கூட
காதல் பித்தனாவான்!

மன்னிப்பு உன்னிடம்
கேட்கும் போது மட்டுமே
அழகாகிறது.



மீளாத உறக்கம் வேண்டும்
கனவிலாவது
கரைசேராமல்
உன்னை காதலிக்க!

**லி.நௌஷாத் கான்**



## என்னவள்

நீ ஒவ்வொரு முறையும் சிரித்து முடித்த பிறகு
நான் சுவாசிக்கவே வெகுநேரமாகிறது

உன் பாதம்பட்ட புல்தரை குளிர்சுகம் கண்ட
பிறகு பனித்துளிகளைத் தலையில் சுமக்க
மறுக்கிறது

நீ மெல்ல உன் கீழுதட்டைக் கடிக்கும்
போது என் மனம் கிழிபடும் ஓசை உனக்குக்
கேட்கிறதா?

"நான் உங்களை நேசிக்கிறேன்" என்ற
உன் முச்சொல் வாசகம் ஒரு மும்முனைத்
தாக்குதல் அன்றோ? என் சொற்களுக்குப் பிடிபடாமல் என்



கவிதைக்கு வெளியேயும் நீ புன்முறுவல்
காட்டுகிறாய்!

ஆளில்லாக் கிரகம் ஒன்றைக் கொக்கி
போட்டு நிலாவில் தொங்கவிட்டு நாம் ஊஞ்சல்
ஆடிப்பார்த்தால் என்ன?

**எஸ் .சந்திரசேகர் அமுதா,** செஞ்சிக்கோட்டை

## இறைவன் தந்த இதயவீணை.!

எழுந்து பாரு நண்பா..!
உடன்.. எழுந்து பாரு நண்பா.!
விழுந்து விழுந்து தூங்காதே..
வேண்டுகின்றேன் அன்பாய்.!

குனிந்து குனிந்து கிடப்பதனால்..
முதுகில் ஏறி மிதிப்பார்..!
இனவுணர்வை இழந்து விட்டால்
ஏளனமாய் சிரிப்பார்..! மானம் நமக்கு
உயிராகும்.. கவரி மானின் கதையும்
இதைக் கூறும்.! கவலை யின்றி நீ
யிருந்தால்.. நாளை நாடு என்னாகும்.?

ஒன்ற செய்வாய்.. இன்றே செய்வாய்..
நன்றே செய்தால் உயர்வு..
உணர்வுடனே துணிந்து நின்றால்..
உனது வாழ்வில் உய்வு..!
தூக்கம் என்பது வீழ்த்திவிடும்..
விழிப்பு கொண்டால் வெற்றி வரும்.!
இதை நன்கு அறிக.. நண்பா உனை
நலமும் வளமும் தேடி வரும்.!
காலம் மாறும் என்று கனவு
கண்டிருந்தால் போதுமா..?
நாளும் உண்டு ...



உறங்கி வந்தால் நல்ல நேரம்
தோன்றுமா?
சென்ற காலம் உடைந்தபானை.!
நாளை என்பது மதிலில் பூனை.!
இன்று உனது கையில் உள்ளது
இறைவன் தந்த இதயவீணை.!

**வே.கல்யாண்குமார்.**

## மலரினும் மெல்லியது காதல் !


மலரினும் மெல்லியது காதல் ஆனால்
மலையினும் வலியது காதல் !

ஒருவன் ஒருத்தியை நேசித்து விட்டால்
உயிர் உள்ளவரை நேசிப்பது காதல் !

தடைகள் ஆயிரம் வந்த போதும்
தகர்த்து இணைவதே உண்மைக் காதல் !

புறஅழகுப் பார்த்து வருவது அல்ல காதல்
அகஅழகு ஈர்த்து வருவதே மெய்யான காதல்!

என்னவென்று விளக்கமுடியாவிடினும்
ஏதோ ஒன்று இணையிடம் பிடித்து இருக்கும்!



இடையில் வந்தவள் என்றபோதும் மன
எடையில் உயர்ந்து நிற்பவள் காதலி !

உன்னத காதலிக்கு உள்ளத்தில் முதல் இடம்
உலகில் உள்ள உறவுகளுக்கு அடுத்த இடம்!
முதல் காதல் நினைவு என்பதுஇருவருக்கும்
மூச்சு இருக்கும் வரை நினைவு இருக்கும் !
உடலில் உயிர் உள்ளவரை இருவருக்கும்
உடலில் மூளையின் மூலையில் இருக்கும் !
காதல் உணர்வு என்பது சொல்லில் அடங்காது
காதலித்தவர்கள் மட்டுமே உணரும் உணர்வு!

காதலிக்கும் காலத்தில் உள்ள மனமகிழ்வு



காதலர்களுக்கு மண்ணில்
காணும் சொர்க்கம்!
நேற்று இன்று நாளை என்று
முக்காலமும்
நிலைத்து இருக்கும் ஒன்று
ஒப்பற்ற காதல்!

**கவிஞர் இரா .இரவி !**


MARRIAGE
Anniversary
முகமது இம்ரான் கான் - யாஸ்மீன்பானு


VILAMBARAM
WANTED
10 SMART FEMALE
Telecallers
Job Type: Full-time
Education : Bachelor's degree
Freshers And Experience
Both can apply.
SEO & DIGITAL MARKETING
COMPANY SINCE 2020
Dont miss this opportunity
INTERESTED CANDIDATES CAN APPLY
+91 9337501889
+91 7789941009
Job @ CHENNAI
www.vilambaram.com


ரியல் எஸ்டேட்
ஏஜெண்டுகள் தேவை
காஞ்சிபுரத்தில்
RERA & DTCP
APPROVED
PLOTS
விற்பனை செய்வதற்கு
மாதம் ரூ.5 லட்சம்
வரை சம்பாதிக்கலாம்
தொடர்புக்கு:
936345 9002


MLMPERFECT.COM
Start Any MLM
Software @
Rs.999/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247
7684053514


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


ஜப்பான்
7 நாட்கள் -மே-5
ADD - ON - S.KOREA
ஜன-15க்குள் முதலில் பெயர் பதிவு செய்யும்
10 நபர்களுக்கு ரூ.10000/- கட்டண சலுகை
வியட்நாம்
கம்போடியா
டாணாங் - பாணா - ஹனோய்
மார்ச் 15- 9 நாட்கள்
ஜன-15க்குள் முதலில் பெயர் பதிவு செய்யும்
10 நபர்களுக்கு ரூ.10000/- கட்டண சலுகை
துபாய்
பிரப்வரி -14 ம் தேதி, மார்ச் -24 ம் தேதி
தைப்பூசம்
மலேசியா 3-நாட்கள்
சுற்றுலா ஏற்பாடுகள்
25வது வருடம்
சூரியா டிராவல்ஸ்
38-H, பர்கிட் ரோடு,
தி.நகர், சென்னை -17
98400 85622 / 9940396496


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


WANTED
NEWS COORDINATOR
Salary
Rs. 25000
Plus
*Salary is not a constraint for right candidate
Responsibilities:
1. Appoint Reporters and Photographers in Tamil Nadu Districts and Taluks
2. Will coordinate with reporters and the news desk
3. Should have a minimum of six years of experience in a print and TV newsroom.
4. Will report to the editors at the Chennai office
PRGI No. TNBIL/25/A1569
வைகறையில்
பேப்பர்பாய்
Send CV to
padmamediapublications@gmail.com
Call
9337501889


WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling
Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling
Metal Roofing for
PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for
Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com


Just499
NEWS WEBSITE
PORTAL
We Provide Complete News
Website Portal Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com
BREAKING NEWS


Launch Your
Own Secure
Crypto MLM
Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com

தமிழகம் எங்கும் உள்ள
(Litigation)
வில்லங்கமுள்ள, இல்லாத
சொத்துக்கள் வாங்க,விற்க
உரிமையாளர் அணுகவும்
90039 34668

PURASAIVAKKAM KOSAPET
Land 1357 Sqft
G+2, 20 Years Old
1A, Padavatamman Koil Lane, Thana Street Last
Rental Income Property
also online Patta, Approval
Ct: 94445 74758

CHITLAPAKKAM MAIN ROAD
No: 5 Balaji Avenue
Opp. Arokya Milk shop
Space for rent 1300 Sq.ft
Ground Floor
Suitable for Banks, Playschool, Hotel, Super Market, Shops Etc.
with Parking Facility
98401 32657
99529 66895

Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only Rs. 499/-
Just 499
www.just499.com

Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY WEBSITE
RS. 999/-
Call/Whatsapp - +91 7789951009



போரூர் கெருகம்பாக்கம்
6000 சதுரடி
30 அடி மெயின் ரோட்டில் (பஜார்)
காலி இடம் வாடகைக்கு உள்ளது
குடோன் | CRICKET TURF | SHOWROOM வைக்க உகந்தது.
98402 19966

CHENNAI, PORUR
Nr. Alapakkam Metro Stn
12500 sft. built. G+2
(4200 sft each floor)
Opp Magnolia Apartments.
Indl Power Ready.
Ct : 94440 66905
93818 56824
98409 81212

கலிகி அரங்கநாதன் மாண்ட்ஃபோர்ட் குழும பள்ளிகள்
பெரம்பூர் / அயனாவரம் / கொளத்தூர் / வில்லிவாக்கம்
ஆட்கள் தேவை
Transport Manager
டிரான்ஸ்போர்ட் மேனேஜர்
Drivers / டிரைவர்
விண்ணப்பிக்கவும்
hr.krmgroup@gmail.com
7708066105 / 7358500111 / 25514508
எண் 8, ஆனந்தவேலு தெரு, பெரம்பூர், சென்னை - 600011 (பெரம்பூர் பஸ்நிலையம் அருகில்)

உங்கள்
COLLEGE & SCHOOL BUS-க்கு
எங்களிடம் வாடகைக்கு அணுகவும்
எங்களிடம் COLLEGE & SCHOOL-க்கு தேவையான A/C & Non A/C - NEW VAN மற்றும் 32 Seat, 42 Seat, 52 Seat BUS காண்ட்ராக்ட் அடிப்படையில் வாடகைக்கு கிடைக்கும்.
Logo, Name, Yellow Paint
RTO Rules & Regulation
100% பாதுகாப்பான முறையில் எங்களது சர்வீஸ் உள்ளன.
PRINCE LOGISTICS
95000 85244
80724 11192

ஆட்கள் தேவை
• VTL,
• Radial Drilling,
• Assembly,
• Quality Inspector,
Goodwin Pumps India Pvt Ltd, OMR, Thiruporur.
Ct: 8754010828,
vinoth@goodwinindia.in

ஆட்கள் தேவை
WHEELS INDIA LIMITED
EEPD – Thervoykandigai
நிரந்தர பணியிடங்களுக்கு
CNC ஆபரேட்டர் / Tool Setter தேவை
Experience : 5–10 years
Machine Experience :
VMC / HMC / CNC லேத் (Lathe)
Education: ITI / Diploma / B.E
Salary: Based on Skill and Industry standards
Job Location : Wheels India Limited, Sipcot Industrial Park, Thervoykandigai, Thiruvallur, Pincode - 601202
Walk-in Date :
From 29.12.2025 to 04.01.2026
தொடர்புக்கு : 90941 15116

பூந்தமல்லி பைபாஸ்
சென்னை–பெங்களூர் நெடுஞ்சாலையில் 6 கிரவுண்ட்
2/4 வீலர் ஷோரூம் சர்வீஸ் சென்டர் / ஹோட்டல்களுக்கு ஏற்றது.
90477 34343
COSMIC PROPERTIES

Besant Nagar, MG Road. Gf-1100 sqft Clinic No Broker. 9445772827

Repco Home Finance
- We value your Dream
EMPANELMENT OF VALUER FOR CHENNAI REGION BRANCHES
"Repco Home Finance Ltd invites application from registered Valuers to be empanelled in respective Chennai Region Branches"
For further details, please visit
www.repcohome.com

CHENNAI OBESITY & GASTRO SURGEONS CENTRE
WE ARE HIRING
✦ Radiologist/Sonologist
✦ Nursing (ANM/B.sc) - 2 yrs Exp.
✦ Lab Technician (M/F) - 2 yrs Exp.
✦ PRO ( 2 yrs Exp in Medcial Field)
✦ ECHO Technician (C.A.)- 2yrs Exp.
7299030915 / 9443812425

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

தொழிலதிபர் வீட்டில் ஹவுஸ் கீப்பிங் பணிக்கு தங்கி பணிபுரிய 10ஆம் வகுப்பு படித்த
பெண்கள்
தேவை. வயது 18 - 40க்குள்
சம்பளம் :ரூ. 15,000 - 20,000
Call : 98400 85521
99400 77012

அசுரன் சோப்பு கம்பெனி-க்கு தமிழ்நாடு முழுவதும்
NEW YEAR OFFER
POWDER: 1 kg - Rs.35, 2 kg - Rs.70
SOAP: 150 gm - Rs. 5.25, 400 gm - Rs. 15
சோப்பு, பவுடர், லிக்விட்ஸ் விற்பனை செய்ய
டீலர்கள் தேவை
91507 62502 / 98849 53069

அடகு நகை மீட்டு மறு அடகு வைத்து
G-Rs. 10000/-கடன் வழங்கப்படும்.
அடகு நகை மீட்டு மார்க்கெட் விலையை விட அதிக விலைக்கு வாங்கப்படும்.
KRISH FINCORP
8838358029, 9840134150

தாம்பரத்தில்
திருமண அழைப்பிதழ் கடைக்கு அனுபவமுள்ள
❖ DTP Designer
❖ Salesman
(ஆண்/பெண்) தேவை
9940334020

WORK AT GUDUVANCHERY
SECURITY GUARD & LADY GUARD
Salary Rs. 22,500 (26 Days) 4 OFF
Quali. : 10th, 12th, Dip.
Age : 25 to 50 years
Duty : (8hrs) Free Food
Height : 168cms & above
Benefits : ESI / EPF & Accident Policy
BSS SECURE SOLUTIONS PVT LTD
99411 80023

ரீகல் FAMOUS DETERGENT BRAND சோப் கம்பெனிக்கு தமிழ்நாடு முழுவதும்
சோப், பவுடர், லிக்விட்ஸ் விற்பனை செய்ய
டீலர்கள் தேவை
90430 18922 / 90430 18923

Breaking News Card.com
www.breakingnewscard.com
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

TVS 2 Wheeler Showroom @ Chennai Req.
+ Sales Executives- (M / F)
+ Customer Care Executives- (F)
+ PDI Incharge/ Technicians
+ Service Advisors
+ Mechanics
+ Floor In-Charge
+ Pick-up Drop Person (with DL)
+ Spare Parts Executive
+ Billing Executive
Exp. & Fresher's can apply. Preference will be given to Candidates with prior Exp.
Accommodation/Excellent Salary ESI/PF/Incentives/Annual Bonus
Ct: 73052 37666
73051 87222

கலிகி அரங்கநாதன் மாண்ட்ஃபோர்ட் குழும பள்ளிகள்
பெரம்பூர் / அயனாவரம் / கொளத்தூர் / வில்லிவாக்கம்
ஆட்கள் தேவை
Transport Manager
டிரான்ஸ்போர்ட் மேனேஜர்
Drivers / டிரைவர்
விண்ணப்பிக்கவும்
hr.krmgroup@gmail.com
7708066105 / 7358500111 / 25514508
எண் 8, ஆனந்தவேலு தெரு, பெரம்பூர், சென்னை - 600011 (பெரம்பூர் பஸ்நிலையம் அருகில்)

Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com



THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots, Flats, House
Villa, Bungalows
Farm Land, Ware Houses
Factory Sites, Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget ⇨ We Show Your Home
Call :7871617005

WANTED
CIVIL ENGINEER
Age: Below 40 years
Experience Need
Qualification : Dip / BE
Good Salary
West Tambaram, Ch - 45
Email ID: vmgarden9@gmail.com
88700 02462

STAR TOURS - அதிரடி ஆஃபர்
| | |
|---|---|
| தாய்லாந்து மலேசியா | 5 Days-38,000 / 4 Days-32,000 |
| வியட்நாம் கம்போடியா | 6 Days Rs. 75,000 |
| சிங்கப்பூர் மலேசியா | 6 Days.65,000 |

All Inclusive.
94459 36579 / 95661 47112

தமிழகம் எங்கும் உள்ள
(Litigation)
வில்லங்கமுள்ள, இல்லாத
சொத்துக்கள் வாங்க,விற்க
உரிமையாளர் அணுகவும்
90039 34668



# பல்சுவை களஞ்சியம்




## பாதங்களை வெடிப்பின்றி மிருதுவாக வைத்து கொள்ள வேண்டுமா? இதோ சூப்பரான டிப்ஸ்!!

பொதுவாக முகத்தை பொலிவாக வைத்துக்கொள்ள எல்லோரும் பெரிய அளவில் மெனக்கெடுகிறோம்.

அதேநேரம், நம் உடலை முழுமையாகத் தாங்கும் பாதத்தை கண்டுகொள்வதே இல்லை. இதனால் தோல் வறட்சியும், அதிக உடல் எடையும்தான் பாத வெடிப்புக்கான முக்கியமான காரணிகள்.

நம் உடலில் நீர்ச்சத்து குறையும்போது தோல் வறண்டு, பாதத்தில் வெடிப்பு உண்டாகும். எனவே இவற்றை எளியமுறையில் போக்கலாம்.

தற்போது அவை என்னென்ன என்பதை தெரிந்து கொள்வோம்.

வாழைப்பழத்தை நன்றாக மசித்து வெடிப்பின் மேல் தேயுங்கள். சில நிமிடங்களில் கழுவுங்கள். இவை ஒரே வாரத்தில் பாத வெடிப்பை மறையச் செய்து மிருதுவான பாதத்தை தரும்.

வாசலினை எடுத்து அதில் எலுமிச்சை சாறு கலந்து பாதங்களில் தடவுங்கள். இரவு முழுவதும் அப்படியே வைத்திருந்து மறு நாள் காலையில் கழுவுங்கள். சாக்ஸ் போட்டுக் கொள்வதால் இன்னும் நல்லது.

ஆலிவ் எண்ணெயில் சில துளி லாவெண்டர் எண்னெய் கலந்து பாத வெடிப்புகளில் தடவுங்கள். இது அற்புதமான ரிசல்ட்டை தரும். விரைவில் வெடிப்பிலிருந்து குணம் பெறுவீர்கள்.

விளக்கெண்ணெயை சூடுபடுத்தி மஞ்சள் கலந்து தூங்குவதற்கு முன் வெடிப்பில் இந்த எண்ணெயை பூசிக் கொண்டு படுங்கள். இவை ஒரு சில நாட்களில் வெடிப்பை போக்கும்.

வினிகரை சிறிது எடுத்து வெதுவெதுப்பான நீரில் கலந்து பாதங்களை அதில் 10 நிமிடம் தினமும் ஊற வைக்கவும். பின்னர் ஸ்கர்ப் செய்யுங்கள். மிக விரைவில் பலன் தரும். மேலும் வெடிப்பு உண்டாகாமலும் தடுக்கும்.



தேன் ஒரு ஸ்பூன் எடுத்து அதில் அதே அளவு பால கலந்து பாதத்தில் தடவவும். மறு நாள் காலையில் கழுவுங்கள். இது பாதங்களை மிருதுவாக்கும். சொரசொரப்புத்தன்மையை நீக்கும்.

ஓட்ஸை பொடித்து அதனைக் கொண்டு தினமும் பாதங்களை ஸ்க்ரப் செய்யுங்கள். இவை கால்களை மிருதுவாக்குவதோடு, பாதங்களை அழகாக்கு. ஓஸினால் தேய்க்கும்போது பாதங்களின் பக்கவாட்டில் இருக்கும் கருமையை எளிதில் மறையச் செய்யும். ஓட்ஸுடன் எலுமிச்சை சாறு கலந்தால் இன்னும் நல்ல பலன்களை தரும். ஓட்ஸை பொடி செய்து அவற்றுடன் எலுமிச்சை சாறு கலந்து பாதத்தில் தேயுங்கள். சில நிமிடம் கழித்து கழுவுங்கள். இந்த குறிப்பு இன்னும் வேகமாக பலனைத் தரும்.

லிஸ்டெரின் வினிகர் மற்றும் நீர் ஆகிய மூன்றையும் சம அளவு எடுத்து பாத வெடிப்புகளில் தடவுங்கள். அல்லது இவை கலந்த நீரில் 15 நிமிடம் பாதங்களை ஊற விடுங்கள். இவை விரைவில் வெடிப்பை குணப்படுத்தும்.

பாதம் மூழ்கும் அளவிற்கு நீரை வெதுவெதுப்பக எடுத்துக் கொண்டு அதில் ஆப்பிள் சைடர் வினிகரை 1 மூடி கலந்து பாதங்களை 10 நிமிடம் ஊற வைகக்வும். வாரம் 3 நாட்கள் செய்தால் வெடிப்பு மறையும். தவிர பாத வெடிப்பு வருவதை தடுக்கலாம்.



லால்குடி
- **வெ.நாராயணன்**
மாம்பாக்கம், சென்னை

## பதினெட்டு ’பட்டி

வாழைப்பழ வியாபாரியோட பையன் எப்படி இருப்பான்?"
"அப்படியே அப்பனையே உரிச்சு வைச்சிருப்பான்."

-----------------------


ரெய்டுக்கு வந்தவங்க போலி சி.பி.சி.ஐ.டி..ன்னு தலைவர் எப்படி உறுதியா சொல்றாரு?"

"தலைவரோட பேஸ்புக் அக்கவுண்ட்டுல. எவ்வளவு பணம், ’பேலன்ஸ்’ இருக்குன்னு துருவி துருவி விசாரிச்சாங்களாம்!

-எஸ்.எம்.பித்து

-----------------------

கடி டைம்



ஏகப்பட்ட நாய்கள் அவரைச் சுற்றி நிற்குதே..?"

"நான் சொல்லலை அவரு பதினெட்டு ’பட்டி’க்குச் சொந்தக்காரருன்னு..."

## எத்தனை தலைமுறையை காக்கும் புண்ணியப் பலன் ?



கங்கை போன்ற புனித நதியில் நீராடுவது - 3 தலைமுறை.

பாழடைந்த கோவிலில் தீபம் ஏற்றுவது - 5 தலைமுறை.

கோவில் திருப்பணிக்கு உதவுவது -7 தலைமுறை.

ஏழை பெண்ணுக்கு திருமணம் செய்வது - 9 தலைமுறை.

அனாதை பிணத்திற்கு அந்திம கிரியை - 11 தலைமுறை

கோசலைக்கு உதவுவது, பசு பராமரிப்பு - 13 தலைமுறை.

காசி, கயாவில் செய்யப்படும் தர்ப்பணம் - 16 தலைமுறை.

பசிக்கு உணவு அளிப்பது அன்னதானம் 27 தலைமுறை.



-**சிவ.முத்து லட்சுமணன்**
போச்சம்பள்ளி

# மீம்ஸ்










## விடுகதை

| | |
|---|---|
| கொக்கு எப்ப ஒத்த கால்ல நிக்கும்? | அது ஒத்த காலை எப்ப தூக்குது அப்பதான். |
| நாம் ஏன் தண்ணீர் தெளித்து கோலம் போடுகிறோம்? | கோலம் போட்டு தண்ணீர் தெளித்தால் கோலம் அழிந்துவிடும்ல. |
| ஒரு பையன் அவனுடைய 500 ரூபாய் நோட்டையும் 2000 ரூபாய் நோட்டையும் சாக்கடையில் போட்டுட்டான் பர்ஸ்ட் எதை எடுப்பான்? | அவன் ஃபர்ஸ்ட் வாந்தி எடுப்பான். |
| ரோட்ல போற சில பேரு ஒருத்தர்கிட்ட மட்டும் அடிக்கடி டைம் கேக்குறாங்க ஏன்? | ஏன்ன அவரு வாட்ச்மேன் ஆம். |
| முட்டையை போடாத பறவை என்ன பறவை? | ஆண் பறவை. |



# ஜோக்ஸ்

ஆசிரியர்: என்னடா போயும் போயும் மெக்கானிக்கல் இஞ்ஜினியரிங் கிடைச்சுருக்கே அப்படீன்னு யாரும்

வருத்தப்படவேண்டாம், என்னோட ஃபிரெண்ட் ஒருத்தன் திருச்சில 5000 ரூபாய் வாங்கிண்டு இருந்தான், இன்னிக்கு மும்பைல 1 லட்சம் வாங்கிட்டுருக்கான்"

மாணவர்: என்ன கடனா?

=====================-


“தேள் கொட்டினால் பயங்கரமா வலி இருக்கும்னு சொல்வாங்க... நீங்க இப்படி சிரிக்கிறீங்களே...?”

“தேள் கொட்டினது என்னோட மனைவிக்கு...!”

=====================

திருடன் 1: டேய் நேத்து நாம திருடுன பணத்த எண்ணாமகூட ஒளிச்சி வச்சிட்டோமே.....

திருடன் 2: அதுனால என்ன நாளைக்கு பேப்பர்ல வரும்ல... அப்ப பார்த்துக்கலாம்.



=====================

“என் உயிரைக் காப்பற்றிய நர்சையே நான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்.”

“எப்படிக் காப்பாத்தினா?”

“ஆபரேசன் ரூமிலேயிருந்து பின்வழியா என்னைத் தப்பிச்சிப் போக வச்சது அவதான்!”

===================

காமெடி பீஸ்

தேர்தலுக்கு முன் வடிவேலுவிடம் கட்சிக்காரர்: “வைகைப் புயல் சார்..! நீங்கதான் இந்த தேர்தல்ல எங்களுக்கு பிரசார பீரங்கி..!”

தேர்தல் முடிவிற்குப் பின் வடிவேலு: இப்படி உசுப்பேத்தி உசுப்பேத்தியே உள்ள போட்டிருக்கிற ட்ரவுசர அத்து வுட்டுடானுங்களே!

====================

வடிவேலு: ஹலோ.. நான் வட்ட செயலாளர் வண்டு முருகன் பேசறேன்... எதிர்முனை: நீ வட்ட செயலாளரா இரு.. சதுர செயலாளரா இரு... இன்னும் கொஞ்ச நேரத்துல அட்ரஸ் இல்லா செயலாளரா ஆகப் போற...

வடிவேலு: மனதிற்குள்.. பாடி ஸ்ட்ராங்கு.. பேஸ்மெண்ட் வீக்குங்கறதை பயபுள்ள கண்டுபிடிச்சிட்டானோ...



# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## வாஸ்து குறை போக்கும் பைரவேஸ்வரர்

சிவபெருமானின் எல்லையற்ற அருட்வடிவங்களில் மிகச்சிறப்பாகப் போற்றப்பெறுவது ஸ்ரீ பைரவர் வடிவம். ஜீவர்கள் இடர்ப்படும் காலங்களில் விரைந்து



வந்து அவர்களைக் காத்தருள்வதற்காக ஆவிர்பவிக்கும் சிவபெருமானின் வேகவடிவமே பைரவமூர்த்தி.

சகல உலகங்களையும், அதில் அமைந்துள்ள திருத்தலங்களையும், அங்குள்ள தீர்த்தங்களையும் காத்தருள்பவர் ஸ்ரீ பைரவ மூர்த்தியே.

பைரவர் திருக்கோலங்களில் அஷ்ட (எட்டு) வடிவங்களை விசேஷமானதாகக் கருதுவர். இந்த எட்டு திருவடிவங்களும் இன்னும் 64 திருவடிவங்களாக விரியும். இவற்றுக்கு "அஷ்டாஷ்ட பைரவமூர்த்தங்கள்' என்பது பெயர்.

இந்த 64 பைரவ அவதாரங்கள் அத்துணைக்கும் முன்தோன்றலான "ஆதி மகா பைரவ மூர்த்தி' தோன்றியருளிய தலம்தான் பைரவபுரி அல்லது வயிரவபுரி என்றழைக்கப்பெற்ற இன்றைய சோழபுரம். மேலாக, அஷ்டாஷ்ட பைரவர்களும் சிவபெருமானை லிங்கத்திருமேனியராக பூஜித்த தலமும் இது மட்டும்தான் என்கிறார்கள். பைரவர்கள் பூஜித்த காரணத்தால் இங்கருளும் மூலவருக்கு ஸ்ரீ பைரவேஸ்வரர் என்பதும், அம்பிகைக்கு ஸ்ரீ பைரவேஸ்வரி என்பதும் திருநாமங்கள்.புண்ணிய பூமியான இத்தலத்தில் எட்டு என்ற எண்ணே சிறப்புடன் விளங்குகின்றது. அஷ்டாஷ்ட பைரவர்களுடன் அஷ்ட திக் பாலகர்களும், அஷ்ட வசுக்களும் பூஜித்த தலம் இது. இன்றும் அவர்களுடன் சித்த புருஷர்களும் அரூபமாக இத்தலத்தில் பூஜிப்பதாக ஐதீகம்.

கிழமைகளில் ஞாயிறும், திதிகளில் அஷ்டமியும் பைரவருக்கு உகந்தவை. திதிகளில் எட்டாவது திதியாகிய இந்த அஷ்டமி திதி பிறந்திட்ட தலம் இந்த பைரவபுரிதான் என்கிறது தலபுராணம். அதுபோல, பாரம்பரிய சங்கீதத்தில் அம்பிகைக்கு உகந்த ராகமான "பைரவி' ராகம் பிறந்த தலமும் இதுதான். கலியுகத்தின் தொடக்கத்தில், மாமுனிவர் அகத்தியர் இத்தலத்து இறைவனை "பைரவி துணைவா' எனச் சொல்லி துதித்திட, அதைக்கேட்ட மாத்திரத்திலேயே அம்பிகையான பைரவேஸ்வரியின் கல் திருமேனியிலிருந்து பேரானந்தக் கண்ணீர் கசிந்ததாம். அகத்திய முனிவரின் இந்த வார்த்தைகளே தன்னைப் பேரானந்தத்தில் ஆழ்த்தியதாக மகிழ்ந்த அம்மை இதனை உத்தமமான "பைரவி' ராகத்தினால் தனது திருவாக்கு மலர்ந்து அருளியதாக ஐதீகம். அஷ்டமி தினங்களில் இத்தலத்தில் பைரவி ராகத்தில் அமைந்த பண்களைப் பாடிட அன்னையினருளால் பெண்கள் நலம் சிறக்கும். அம்மையின் இந்த ஆனந்தாமிர்தக் கண்ணீர்த் துளிகளே இத்தலத்துத் தீர்த்தமாக "பைரவ அமிர்த தீர்த்தம்' என்பதாக ஆகிவந்துள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது. எட்டு தளங்களை உடைய வில்வமே இத்தலத்துக்குரிய விருட்சம்.

வீடு, நிலம் தொடர்பான பிரச்னைகள் மற்றும் வாஸ்து குறைபாடுகளினால் அவதிப்படுபவர்கள் செவ்வாய்க் கிழமைகளில் இத்தலத்துக்கு வந்து வழிபாடாற்றி நிவாரணம் பெறுகின்றனர். பைரவருக்கு உகந்த எட்டு என்ற எண்ணின் அடிப்படையில் மாமுனி அகத்தியப்பெருமான் "அட்டகந்த எட்டுசந்த முஃட்டவிந்த நிட்டசிந்தம்' என்ற அபூர்வமான வாரணத்துதியை இத்தலத்தில் பாடியருளியுள்ளார்.வேறெங்கும் காண இயலாத வண்ணம்' அட்ட முஃட்ட நிட்டைப் படிகள்' எனப்பெறும் எட்டு பைரவப்படிகள் இத்தலத்துக்கே உரிய சிறப்பாகத் திகழ்கின்றன. இவ்வெட்டுப்படிகளையும் நீரால் சுத்தம் செய்து, மாக்கோலமிட்டு, எட்டு விளக்குகள் ஏற்றி வழிபடுவதால் அளப்பரிய நன்மைகள் பெறலாம். குறிப்பாக நரம்பியல், மூளை பிரச்னைகள் உடையவர்கள், விபத்துகளைச் சந்தித்து மீள்பவர்கள், தலை சம்பந்தமான கோளாறு உடையவர்கள் போன்றோர் இத்தலத்து பைரவ படிபூஜையினை செய்து பலன் பெறுவது இன்றளவும் கண்கூடு.

தொடக்கத்தில் அஷ்ட பைரவர்களும் பூஜித்த அஷ்ட லிங்கங்கள், அவர்களுக்குரிய பீடங்களுடன் எட்டு திக்குகளிலும் இருந்துள்ளன. காலத்தின் வேகத்திற்கு ஈடு செய்ய இயலாமல் சிதையத் தொடங்கிய கோயிலுடன் இவை பூமியில் தூர்ந்து விட்டன. தற்பொழுது மூல லிங்கம் உள்ள மையக்கோயில் மட்டும் எஞ்சியுள்ளது. கங்கா விசர்ஜனர், துர்கை, அர்த்தநாரீஸ்வரர், பிட்சாடனர் ஆதிகாலபைரவர் ஆகிய கோஷ்ட திருமேனிகள் தொன்மை அழகும், வரலாற்றுச் சிறப்பும் உடையவை. யோக மார்க்கத்தில் சிறப்பான பலன்களைப் பெற எண்ணுபவர்கள் இத்தலத்தில் தியானிப்பது கைமேல் பலன் தந்திடும். கார்த்திகை மாதத்தில் செய்யப்பெறும் மகா காலபைரவாஷ்டமி இத்தலத்தில் சிறப்புற நிகழ்த்தப் பெறுவது குறிப்பிடத்தக்கது. உன்னதமான பைரவ சக்தி நிறைந்துள்ள இத்தலத்தில் அருளும் ஸ்ரீ பைரவேஸ்வரி உடனருளும் பைரவேஸ்வரரை தரிசித்து அற்புதமான பலன்களைப் பெறலாமே..! கும்பகோணத்திலிருந்து சென்னை நெடுஞ்சாலை வழித்தடத்தில் திருப்பனந்தாளுக்கு 4 கி. மீ. முன்னதாக அமைந்திருக்கிறது இந்த சோழபுரம்.

## மன்னனுக்கு திதி செய்து முடிசூடும் மகேசன்!

முன்னோருக்கு திதி கொடுப்பது மரபு. சிவன் மகன் நிலையில் இருந்து வீர வல்லாள மகாராஜாவுக்கு திதி கொடுக்கிறார். மறுநாள் முடியும் சூடுகிறார். இந்த நிகழ்வு மாசி மகத்தன்று நடைபெறுகிறது.

சோழர்கள், பாண்டியர்களுடனும் திருமண உறவு உள்ளவர்கள் ஹொய்சாள மன்னர்கள். ஹொய்சாளப் பேரரசின் கடைசி மாமன்னர் வீரவல்லாள மகாராஜா. கி.பி 1291}இல் தொடங்கி, கி.பி. 1343 வரை கர்நாடகத்தின் பெரும்பாலான பகுதிகளையும் வட தமிழ்நாட்டையும் ஆந்திரப் பகுதிகளையும் ஆட்சி செய்தார். அந்த நாட்டின் இரண்டாம் தலைநகரம் திருவண்ணாமலை.

வல்லாள மகாராஜா தினமும் ஈசனுக்கு பூஜை செய்வார். இதனால் அவர் அண்ணாமலையார் கோயிலில் மேற்கொண்ட திருப்பணிகள் ஏராளம். இவர் 4,5}ஆம் பிரகாரங்களுக்கு இடையே உள்ள கோபுரத்தை கி.பி. 1328} ஆம் ஆண்டில் கட்டத் தொடங்கி, 1331}ஆம் ஆண்டில் முடித்தார். இந்தக் கோபுரம் "வல்லாள மகாராஜா கோபுரம்' என்றே அழைக்கப்படுகிறது.

அனைத்துச் செல்வங்கள் இருந்தும் மகாராஜாவுக்கு குறை இருந்தது. குழந்தை இல்லாத ஏக்கம் அவரை வாட்டியது. அவர் " சல்லமா தேவி' என்ற பெண்ணை இரண்டாம் மணம் புரிந்தும், பலனில்லை. அண்ணாமலையாரிடம் கண்ணீர் சிந்தி அடிக்கடி தன் தவிப்பை வெளிப்படுத்துவார் வல்லாள மகாராஜா. இதனால், அவருக்கு சிவன் திருவிளையாடலை நிகழ்த்தினார்.

துறவி கோலம் பூண்டு அரசவைக்கு வந்து மகாராஜாவை சந்தித்தார். சிவனடியாரைக் கண்டதும், மகாராஜாவின் மனம் பரவசம் அடைந்தது. "சுவாமி தங்களுக்கு அடியேன் என்ன உதவி செய்ய வேண்டும்?'' என்று மகாராஜா கேட்டார்.

"எனக்கு தாம்பத்தியத்துக்கு ஒரு பெண் வேண்டும்'' என்றார் துறவி. அரசவையில் இருந்தவர்களுக்கு ஆச்சரியமும், அதிர்ச்சியும் ஏற்பட்டது. இருப்பினும், துறவியின் விருப்பத்தை பூர்த்தி செய்ய மகாராஜா உத்தரவிட்டார்.

தாசிப் பெண்கள் கிடைக்கவில்லை. இறைவன் திட்டப்படி நடப்பதால், தேடி சென்றவர்கள் ஏமாற்றத்துடன் அரண்மனைக்குத் திரும்பினர். மகாராஜாவே புறப்பட்டு சென்றும் கூட, ஒரு தாசியும் கிடைக்கவில்லை. மன்னர் கவலையோடு அரண்மனைக்குத் திரும்ப அவரது இளையராணி சல்லமாதேவி, சிவனடியாரின் விருப்பத்தை தான் பூர்த்தி செய்து உதவுவதாக கூறினாள்.

துறவியை வணங்கி, ""சுவாமி.. என் கணவர் உமக்கு அளித்த வாக்குறுதி தவறாது. அருணாசலமே நீயே துணை'' என்றபடி கை தொழுது நின்றாள். அடுத்த விநாடி துறவியாயிருந்த அண்ணாமலையார், அழகான குழந்தையாக மாறி தரையில் இருந்தார். சல்லமாதேவி குழந்தையை வாரி எடுத்து உச்சி முகர்ந்தாள். வல்லாள மகாராஜா விரைந்து வந்து, அண்ணாமலையாரின் அருளாடல் புரிந்து கொண்டு கைக்கூப்பி நின்றார்.

அடுத்த விநாடியே குழந்தை



ஒளியாக மாறி மறைந்து அசரீரியாய் ஒலித்தது. "" பக்தனே, கலங்க வேண்டாம். உன் பூலோக வாழ்வு முடியும்போது யாமே, உனக்கு மகனாக இருந்து உன் ஈம காரியங்களை செய்து முடிப்பேன். ஒவ்வொரு ஆண்டும் சடங்குகளை செய்வேன்'' என்றது.

சில ஆண்டுகளில் மதுரை சுல்தான் படைகளுக்கும் வல்லாளனுக்கும் போர். ஒரு லட்சத்துக்கும் மேலான வீரர்களைக் கொண்டிருந்த வல்லாளனின் படை முன்பு மதுரை சுல்தானால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. பள்ளிகொண்டாப்பட்டு பகுதியில் முகாம் அமைத்து தங்கி இருந்தபோது, வல்லாள மகாராஜாவை சுல்தான் நயவஞ்சகமாக ஏமாற்றிக் கொன்றார்.

வல்லாள மகாராஜாவின் இறுதிச் சடங்குகளை பள்ளிகொண்டாப்பட்டு அருகே ஓடும் கௌதம நதிக்கரையில் அண்ணாமலையார் செய்து முடித்தார். அன்று தொடங்கி ஒவ்வொரு ஆண்டும் மாசி மகத்தன்று பள்ளிகொண்டாபட்டு கிராமத்துக்கு சென்று வல்லாள மகாராஜாவுக்கு மகனாக இருந்து திதி (தர்ப்பணம்) செய்து வருகிறார் அண்ணாமலையார்.

680-ஆவது ஆண்டாக இந்த ஆண்டு மார்ச் 6}இல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அன்றைய தினம் அதிகாலை அண்ணாமலையாரின் சந்திரசேகரர் அம்பாளுடன், திருவண்ணாமலையில் இருந்து புறப்பட்டு பள்ளிகொண்டாப்பட்டு கௌதம நதிக்கரைக்கு வருவார். அங்கு திதி கொடுப்பார். பின்னர் அஸ்திர தேவரால் தீர்த்தவாரி நடக்கும். அப்போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் பள்ளிகொண்டாப்பட்டுக்கு திரண்டு வந்து தம் மூதாதையருக்கும் திதி கொடுப்பார்கள். வழி நெடுக மண்டக பூஜைகளை ஏற்றுக் கொண்டு அண்ணாமலையார் கோயிலுக்குத் திரும்புவார்.

அரசனுக்குப் பிறகு இளவரசன் பட்டமேற்கும் மரபின்படி மறுநாள் அண்ணாமலையாரின் சோமாஸ்கந்த மூர்த்திக்கு கலச ஆவாகனம் செய்து அபிஷேகம் செய்து மகுடமுடி சூட்டும் விழா நடைபெறும். அப்போது மகாராஜாவின் வழி வந்தவர்கள் உடனிருப்பர்.

## ஆனந்த வாழ்வு தரும் ஆனைமுகன்

சென்னை மாநகரில் சிறப்பு மிக்க திருக்கோயில்கள் உள்ளன. அதில் ஒன்று, பாரிமுனை அருகே உள்ள தம்பு செட்டித்தெருவில் அமைந்துள்ள சித்தி புத்தி சமேத விநாயகர் திருக்கோயில். நாகப்ப செட்டியார் என்பவரால் கட்டப்பட்டதால், அருள்மிகு நாகப்பசெட்டி பிள்ளையார் கோயில் என்றும் அழைக்கப்படும் இக்கோயில் 300 ஆண்டுகள் பழைமை வாய்ந்ததாகும்.

கிழக்கு நோக்கிய கோயில். கருவறையில் சித்தி, புத்தி என்ற இரு தேவியருடன் விநாயகர் காணப்படுகிறார். கருவறை வெளிப்புறச் சுவரில் உள்ள அனைத்து தேவகோட்ட சிற்பத் திருமேனிகளும் கணபதி திருமேனிகளாக அமைந்து விளங்குகிறது.

முதலில் விநாயகர் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். இரண்டாவதாக நடனமாடும் கோலத்தில் நிருத்த கணபதி. மேற்கு தேவகோட்டத்தில் திருமால் போன்று மேலிரு கரங்களில் சங்கு } சக்கரமும், முன் கைகளில் தாமரை மலர்களைத் தாங்கி காட்சி அளிக்கும் கணபதி வடிவம் சிறப்பானது. அடுத்துள்ள தேவகோட்டத்தில் ஐந்து முகம் உடைய பஞ்சமுக கணபதியாகக் காட்சி தருகிறார். அடுத்த தேவகோட்டத்தில் லட்சுமி கணபதியாக தேவியை மடியில் வைத்திருக்கும் கோலத்தில் காட்சி தருகிறார்.

கருவறையைச் சுற்றி வரும்பொழுது ஒன்பது பலிபீடங்களையும்,



சண்டிகேசுவரரையும் காணமுடிகிறது. கருவறை நுழைவு வாயிலில் ருத்ரர்கள் துவாரபாலகர்களாகக் காட்சி தருகின்றனர். மேலும் இரண்டு பக்கங்களிலும் நாகங்களின் சிற்பங்கள் பிரதிஷ்டை செய்திருப்பது கோயிலுக்குச் சிறப்பினை தருகிறது.

இக்கோயிலில் சங்கடஹர சதுர்த்தி போன்ற அனைத்து வழிபாடுகளும், விழாக்களும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. விநாயகர் இங்கே சித்தி } புத்தி என்கிற இரு தேவியருடன் காட்சிதருவதால் திருமணத்தடை போன்ற இடர்ப்பாடுகளை அகற்றி நலமான, ஆனந்தமான வாழ்வு அருளுகிறார்.

## சரஸ்வதி தேவியை போற்றும் வசந்த பஞ்சமி

கல்வி, ஞானம், கலைகளின் கடவுளாக கருதப்படும் சரஸ்வதி தேவியின் அவதார நாளையே 'வசந்த பஞ்சமி' என்று போற்றுகிறோம். எனவே இது சரஸ்வதி ஜெயந்தி, சரஸ்வதி பஞ்சமி என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த நாளில் சரஸ்வதி தேவியை வழிபட்டால் கல்வி, ஞானம், கலைகள், இசை போன்ற துறைகளில் சிறந்து விளங்கலாம்.

மாதந்தோறும் இரண்டு முறை பஞ்சமி திதி வந்தாலும், ஆடி மாதம் அமாவாசைக்கு பிறகு வரும் பஞ்சமியை 'கருட பஞ்சமி' என்றும், ஆவணி மாதம் விநாயகர் சதுர்த்திக்கு மறுநாள் வரும் பஞ்சமியை 'ரிஷி பஞ்சமி' என்றும் வழிபடுவார்கள்.

அதுபோலவே தை அமாவாசைக்கு பின் வரும் பஞ்சமி திதியை 'வசந்த பஞ்சமி' என்று போற்றும் வழக்கம் உள்ளது. வசந்த பஞ்சமி வழிபாடு தமிழ்நாட்டில் மிகக்குறைவு என்றாலும், வட மாநிலங்களில் மிகவும் பிரசித்திப் பெற்றது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சரஸ்வதியை வழிபடும் தினமாக, புரட்டாசி மாதத்தில் வரும் நவராத்திரி உள்ளது. ஒன்பது நாட்கள் கொண்டாடப்படும் நவராத்திரி விழாவின் கடைசி மூன்று நாட்களில்தான் சரஸ்வதியை போற்றி கொண்டாடுவார்கள். ஆனால் வடநாட்டில் இந்த நவராத்திரி நாட்களில் துர்க்கையை விதவிதமாக அலங்கரித்து வழிபாடு செய்வார்கள். அதேநேரம் வசந்த பஞ்சமி தினத்தில் சரஸ்வதியை வழிபடுகிறார்கள். இந்த வசந்த பஞ்சமியானது, முன் காலத்தில் 'காமன் பண்டிகை' என்ற பெயரில் தமிழ்நாட்டில் கொண்டாடப்பட்டதாக சொல்லப்படுகிறது.

அண்ட சராசரங்களையும், அதில் பல்வேறு உயிரினங்களையும் படைத்த பிரம்மனுக்கு, தன் படைப்பின் மீது முழுமையான திருப்தி ஏற்படவில்லை. காரணம், உலகம் ஒலிகள் இன்றி நிசப்தமாக இருந்தது. இது பிரம்மனுக்கு வருத்தத்தை ஏற்படுத்தியது. அப்போது அவரது கையில் இருந்த கமண்டலத்தில்



இருந்து சில துளி நீர் கீழே சிந்தியது. அதில் இருந்து ஒரு பெண் சக்தி வெளிப்பட்டது. அந்த சக்தியானவள், தனது கையில் சுவடிகளையும், ஸ்படிக மாலையையும் தாங்கி, வலது காலை மடித்து, இடது காலை தொங்க விட்ட நிலையில் வெண் தாமரை மீது அமர்ந்திருந்தாள்.

அந்த பெண் சக்தி, தன்னுடைய மடியில் வீணை ஒன்றையும் வைத்திருந்தாள். அந்த வீணையை தன்னுடைய மென் கரங்களால் மீட்டத் தொடங்க, அதில் இருந்து தெய்வீக இசை வெளிப்பட்டது. இதன் மூலமாக, பிரம்மனின் படைப்புகள் அனைத்திற்கும் ஓசை நயம் கிடைத்தன. நதிகள் சலசலத்தன. மரங்கள் அசைந்து காற்றுடன் ஓசையை உண்டாக்கின. கடல் பேரிரைச்சலுடன் அலைகளை வெளிப்படுத்தின. உயிரினங்கள் சத்தமிட்டன. இப்படி பிரபஞ்சம் முழுவதும் ஒலியை நாதமாகக் கொண்டதாக மாறியது.

இதைக் கண்ட பிரம்மதேவர் மகிழ்ச்சி அடைந்தார். அந்த பெண் சக்தியை பலவிதமாக போற்றினார். அந்தப் பெண்ணை தன்னுடைய நாக்கில் இருத்திக் கொண்டார். அவளுக்கு 'சரஸ்வதி' என்று பெயரிட்டார். அந்த தினமே 'வசந்த பஞ்சமி' என்று கருதப்படுகிறது. இந்த நாளில் சரஸ்வதி தேவியை வழிபாடு செய்து வந்தால், ஞானத்தில் சிறந்து விளங்கலாம்.

பஞ்சாப், அரியானா, ஜம்மு-காஷ்மீர், அசாம், திரிபுரா, ஒடிசா, மேற்கு வங்காளம் போன்ற பகுதிகளில் வசந்த பஞ்சமி அன்று நடைபெறும் சரஸ்வதி வழிபாடு மிகவும் சிறப்பு வாய்ந்தது.

மேற்கு வங்காளத்தில், வசந்த பஞ்சமி அன்றுதான், குழந்தைகளின் கல்வியைத் தொடங்குகிறார்கள்.

வசந்த பஞ்சமி தினத்தில் மஞ்சள் நிறத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். சரஸ்வதி தேவிக்கு மஞ்சள் நிற ஆடை அணிவித்தும், மஞ்சள் நிற மலர் மாலை சூட்டியும், லட்டு போன்ற மஞ்சள் நிற நைவேத்தியங்கள் படைத்தும் வழிபடுகிறார்கள். பூஜையில் வைக்கப்படும் பிள்ளையாரையும் மஞ்சளில் பிடித்துதான் வைப்பார்கள்.

பஞ்சாப் பகுதிகளில் இந்த காலகட்டத்தில்தான் கடுகு செடியில் மஞ்சள் நிறப் பூக்கள் பரவலாக பூத்துக் குலுங்கும். அதனை அடிப்படையாகக் கொண்டே, அனைத்திலும் மஞ்சள் வண்ணம் பயன்படுத்தப்படுகிறது. வசந்த பஞ்சமி நாளில் சரஸ்வதி தேவியை வழிபட்டு அறியாமை மற்றும் சோம்பல் நீங்கி, அறிவும், தெளிவும் பெற்று சிறந்த வாழ்க்கை வாழ்வோம்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## உடல் திறனாய்வு தேர்வு



பாளையங்கோட்டை ஆயுதப்படை மைதானத்தில் 2-ம் நிலை காவலர் பணிக்கான உடற்தகுதி மற்றும் உடல் திறனாய்வு தேர்வு நேற்று நடந்தது.

## பழனி திருஆவினன்குடி கோயிலில் ஹோமம்



பழனி திருஆவினன்குடி கோயிலில் கும்பாபிஷேக மண்டல பூஜை நிறைவு விழாவையொட்டி நேற்று ஹோமம் நடந்தது.

## வாள் சண்டை போட்டி



காஞ்சிபுரத்தில் மாநில அளவிலான பாரதியார் தின மற்றும் குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளுக்கான வாள் சண்டை போட்டியை கலெக்டர் கலைச்செல்வி நேற்று தொடங்கி வைத்தார்.

## வெற்றி மாணவ, மாணவியருக்கு பரிசுகள்



ஈரோடு இந்து கல்வி நிலைய மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 40-ம் ஆண்டு விழா போட்டிகளில் வெற்றி மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

## அதிமுகவினர் இனிப்பு, சிற்றுண்டி வழங்கினர்



மணலி பஸ் நிலையத்தில் எம்ஜிஆர் பிறந்த நாளை யொட்டி அதிமுகவினர் இனிப்பு, சிற்றுண்டி வழங்கினர்.

## மயிலாப்பூர் கேசவர் தெப்பம் 5வது நாள் நிகழ்வு



மயிலாப்பூர் கேசவர் தெப்பம் 5வது நாள் நிகழ்வு.

## மத்திய மந்திரியை பூவை ஜகன் மூர்த்தி சந்திப்பு



மத்திய மந்திரி பியூஸ்கோயலை நேற்று புரட்சி பாரதம் கட்சியின் தலைவர் பூவை ஜகன் மூர்த்தி சந்தித்துப் பேசினார். உடன் நயினார் நாகேந்திரன்.

## சரத்குமார் பொன்னாடை



தமிழக தேர்தல் பொறுப்பாளர் பியூஸ்கோயலை நடிகர் சரத்குமார் மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினார்.

## 26ம் தேதி வெல்லும் தமிழ்ப் பெண்கள் மாநாடு



தஞ்சாவூரில், வரும் 26ம் தேதி நடக்கும் 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' தி.மு.க டெல்டா மண்டல மகளிர் அணி மாநாட்டிற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை துணை பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி. நேற்று ஆய்வு செய்தார்.

## துணை முதல்வர் உதயநிதி கலந்தாலோசனை



தென் மண்டலத்திற்கு உட்பட்ட 20 மாவட்டங்களைச் சேர்ந்த அமைச்சர்கள்- மாவட்டச் செயலாளர்கள்- நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்- மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆகியோருடன் தென்மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு தொடர்பாக துணை முதல்வர் உதயநிதி நேற்று கலந்தாலோசித்தார்.

## டிட்டோஜாக் அமைப்பினர் சந்திப்பு



துணை முதல்வர் உதயநிதியை டிட்டோஜாக் அமைப்பினர் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். உடன் அமைச்சர் அன்பில் மகேஷ் உள்ளார்.

## எடப்பாடி பழனிசாமி பாஜக தேர்தல் பொறுப்பாளர் சந்திப்பு



அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை பாஜக தேர்தல் பொறுப்பாளர் பியூஸ்கோயல் நேற்று சந்தித்துப் பேசினார்.

## மாணவிகளுக்கு சில்வர் தண்ணீர் பாட்டில்கள்



அரியலூர் நிர்மலா பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று அமைச்சர் சிவசங்கர் சார்பில் நேற்று மாணவிகளுக்கு சில்வர் தண்ணீர் பாட்டில்கள் வழங்கப்பட்டது.

## சங்கு ஊதி சாலை மறியல் போராட்டம்



புதுச்சேரி பொதுப்பணித்துறையில் பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் சங்கு ஊதி சாலை மறியல் போராட்டம் நடத்தினர் .

## JEC AGSRT கூட்டு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் திறப்பு




ஜெயா பொறியியல் கல்லூரியில் தமிழ்நாடு அரசின் StartupTN அனுமதி வழங்கப்பட்ட ஜெயா இன்குபேஷன் மையம் மற்றும் JEC AGSRT கூட்டு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தை அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், நாசர் ஆகியோர் நேற்று மாலை திறந்து வைத்தனர்.

## VVPAT செயல் விளக்க விழிப்புணர்வு முகாம்



திருப்பத்தூர் கலெக்டர் அலுவலக வளாகத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் VVPAT செயல் விளக்க விழிப்புணர்வு முகாமை கலெக்டர் சிவசவுந்திரவல்லி பார்வையிட்டார்.

## "ஏழை, எளியவர்களுக்கு உதவி"



ராகவி சினி ஆர்ட்ஸ் சார்பிலும், நீலாவதி டிரஸ்ட் சார்பிலும் புத்தாண்டு, பொங்கல் விழாவை முன்னிட்டு திரைப்பட இயக்குனரும், நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினரும், சமூக சேவகருமான சேவா ரத்னா டாக்டர் ஜெ.விக்டர், எழுத்தாளர் விவேக் ராஜ் இணைந்து ஏழை, எளியவர்களுக்கு உடை, பணம், இனிப்புகள் வழங்கினார்கள். விடுபட்ட வர்களுக்கு செல்லூர் மற்றும் நரிமேடு 6 நபர்களுக்கு சேலை, ரொக்க பணம், தேநீர் வழங்கினார்கள்.

## மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் கூட்டம்



தென்காசி கலெக்டர் அலுவலகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் கூட்டம் கலெக்டர் கமல்கிஷோர் தலைமையில் நடந்தது.

## நெகிழி ஒழிப்பு பேரணி



வலங்கைமான் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் சேவை செய்யும் நாட்டு நலப்பணி திட்ட சிறப்பு முகாம் மூன்றாவது நாள் 21.01.2026 நெகிழி ஒழிப்பு பேரணி மற்றும் விழிப்புணர்வு சிறப்புரை நடைபெற்றது . இதில் டாக்டர் திலீப்குமார் சிறப்புரையும் நிகழ்ச்சியை நாட்டு நலப் பணி திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ரங்கதுரை மற்றும் திரு. சீத்தாராமன் அவர்கள் வழிநடத்திச் சென்றார்கள் .

## தமிழ்நாடு அரசு சாதனைகள்,





திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சாபுரம் ஒன்றியம் ஊசாம்பாடி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசு சாதனைகள், நலத் திட்டங்கள் குறித்து அமைக்கப்பட்டுள்ள விளம்பர பதாகையில் உள்ள புகைப்படத் தொகுப்பினை மக்கள் பார்வையிட்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மத்திய அமைச்சருடன் ஜான்பாண்டியன் சந்திப்பு



சென்னையில் மத்திய அமைச்சர் பியூஸ்கோயலை தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் ஜான்பாண்டியன் சந்தித்து தமிழக சட்டமன்றத் தேர்தல் தொடர்பாக பேசினார்.உடன் பாஜக மாநிலத் தலைவர் நயினார்நாகேந்திரன் உள்ளார்.

## மனவளக்கலை மன்றம் சார்பில் சித்த மருத்துவ விழிப்புணர்வு..!

**வந்தவாசி, ஜன 23:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை சார்பில் பொது மக்களுக்கு கண்ணுக்கு கலிங்கம் சொட்டு மருந்து விடும் நிகழ்வு நடைபெற்றது. அறக்கட்டளை செயலாளர் சம்பத் தலைமையில், பொறுப்பாசிரியர் அன்பழகன் முன்னிலை வகிக்க, நிகழ்வில் சமூக ஆர்வலர் கேப்டன் மு.பிரபாகரன் மன்னிப்பு என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். மேலும் வீரம்பாக்கம் அரசு சித்த மருத்துவமனை டாக்டர்



வேலாயுதம் தலைமையில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## ரவுசு மணி

ஒருவர் புரிந்தும் புரியாதது போல் இருந்தால்....
நாம் தெரிந்தும் தெரியாதது போல் நடப்பது தான் நல்லது....



V. முத்து ராமகிருஷ்ணன்




உதகையில் "கிராமம் தோறும் புத்தொழில்" திட்டத்தின் கீழ் முதல் கிராம புத்தாக்க குழுவினை கலெக்டர் லட்சுமி பவ்யா நேற்று தொடங்கி வைத்தார்.

# சுற்றுலா: ராஜயோக வாழ்வு தரும் 5 கோயில்கள்! இவற்றில் அம்பானி வழிபட வரும் கோயில்!

கோவில்கள் நிறைந்த மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. கடன் நிவர்த்தி, சொந்த வீடு கனவு, செல்வ செழிப்பு மற்றும் குபேர யோகத்தை வழங்கும் 5 சக்தி வாய்ந்த ஆலயங்கள் குறித்து இப்பதிவில் காண்போம்.

### 1. சௌரிராஜப் பெருமாள்:

நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கண்ணபுரம் சவுரிராஜ பெருமாள் கோவில் மகாவிஷ்ணுவின் அபூர்வமான தலங்களில் ஒன்றாகும். பெருமாள் தனது இதயத்தில் மகாலட்சுமியை சுமந்து கொண்டிருக்கும் இத்தலத்தில் தீராத கடன் சுமைகள் நீங்கி, செல்வம் பெருக வேண்டிக்கொண்டால் நினைத்தது நிறைவேறும். இத்தலத்தில் பெருமாள் மற்ற கோவில்களை போல பக்தர்களுக்கு ஆசி வழங்கும் நிலையில் இல்லாமல் கையேந்தி தானம் பெறும் நிலையில் காட்சியளிப்பதால் வேண்டுபவர்களின் கஷ்டங்கள் மற்றும் தரித்திரங்களை பெருமான் வாங்கிக்கொண்டு செல்வத்தை தருவார் என்பது நம்பிக்கை.

### 2. ஸ்ரீபிரசன்ன வெங்கடேச பெருமாள்:

ராணிப்பேட்டை மாவட்டம், திருப்பாற்கடல் என்ற கிராமத்தில் ஆதிசேஷன் மீது பள்ளிகொண்ட கோலத்தில் காட்சியளிக்கும் பிரசன்ன வெங்கடேச பெருமாளை இத்தலத்தில் தரிசிப்பது நேரடியாக வைகுண்ட பெருமாளை தரிசிப்பதற்கு சமம். இங்கு பெருமாள் சிவபெருமானின் ஆவுடையார் மீது நின்ற கோலத்தில் காட்சி தருவதால் ராஜயோகம் தரவல்லது. 'திருவோண நட்சத்திர தோஷங்களை' நீக்கி ராஜ யோகத்தை வழங்கும் இந்த தலத்தில் சைவ வைணவ ஒற்றுமை பறைசாற்றப்படுகிறது. இங்கு அத்திப்பழத்தை தானமாக வழங்கினால் தீராத நோய்கள் நீங்கி அவர்களது வீடுகளில் மகாலட்சுமி வாசம் செய்வாள்.




### 3. திருச்சேறை சாரபரமேஸ்வரர் திருக்கோவில்:

கும்பகோணத்திற்கு அருகில் உள்ள இந்தத் தலத்தில் உள்ள 'ரிண விமோசனலிங்கேஸ்வரர்' சன்னதியில் தொடர்ந்து 11 திங்கட்கிழமைகள் இங்குள்ள ஞான தீர்த்தத்தில் நீராடி ஈசனை வழிபட்டால் தீராத கடன் தொல்லை தீர்ந்து, செல்வம் தேடி வரும் என்பது ஐதீகம். ஆகவே இங்குள்ள சிவபெருமான் 'ரிண விமோசனேஸ்வரர்' (கடன் தீர்ப்பவர்) என்று அழைக்கப்படுகிறார். மேலும் சிவ துர்க்கை, விஷ்ணு துர்க்கை, வைஷ்ணவி துர்க்கை என்ற மூன்று துர்கைகள் இக்கோவிலில் ஒரே இடத்தில் அருள்பாலிப்பது மிகவும் விசேஷமாகும்.



### 4. காஞ்சி காமாட்சி அம்மன்:



ஸ்ரீசக்கரத்தின் அம்சமாக காஞ்சிபுரத்தில் தவக்கோலத்தில் இருக்கும் காமாட்சியம்மன் திகழ்கிறாள்.

இங்குள்ள 'அர்த்தமேரு' சக்கரத்திற்கு பூஜை செய்வது சகல ஐஸ்வர்யங்களையும் வழங்கும். ஆதிசங்கரர் இங்கு வந்து அர்த்தமேரு என்ற ஸ்ரீ சக்கரத்தை பிரதிஷ்டை செய்ததால் சிலைக்கு பதில் இந்த சக்கரத்திற்கே முக்கிய பூஜைகள் செய்யப்படுகின்றன.

வாரத்திற்கு இரண்டு எலுமிச்சை பழங்களை வைத்து தொடர்ந்து ஆறு வாரங்கள் வழிபட்டால் நினைத்த காரியம் கைகூடி செல்வம் பெருகி சொந்த வீடும் நிலமும் கிடைப்பதோடு, அம்பானி போன்ற பெரும் செல்வந்தர்கள் பூஜித்து வரும் தலமாகவும் இது இருக்கிறது.

### 5. சிறுவாபுரி முருகன்:

சிறுவாபுரி முருகனை நினைத்தாலே சொந்த வீடு நிச்சயம். 'சொந்த வீடு தரும் வேலவனை' ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர்கள் மற்றும் சொந்த வீடு கனவு காண்பவர்கள் 6 செவ்வாய்க்கிழமைகளில் வந்து நெய் தீபம் ஏற்றி வழிபட நினைத்ததை நினைத்தபடி அருளுவார் என்பது நம்பிக்கை.

ராமரின் புதல்வர்களான லவனும் குசனும் இங்கு போர் புரிந்ததாக கூறப்படும் நிலையில் இங்கு வந்து வழிபட மனதிற்கு தெளிவும் வழிகளையும் காட்டும் சக்தி கிடைப்பதாக பக்தர்கள் கூறுகிறார்கள் .

மேற்கூறிய ஐந்து தலங்களை தரிசனம் செய்து செல்வ செழிப்போடு ராஜயோக வாழ்வு கிடைக்க பெற்று மன நிம்மதியாக வாழுங்கள்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## சென்னையில் உள்ள கோவிலில் வேலை வாய்ப்பு: ரூ.48 ஆயிரம் சம்பளம்

சென்னை பூங்கா நகரில் உள்ள அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோவிலில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப இந்து சமய அறநிலையத்துறை அறிவிப்பை வெளியிட்டுள்ளது. மொத்தம் 08 பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியாகியுள்ளது. இது பற்றிய விவரங்களை பார்க்கலாம்.

பணியிடங்கள்; அலுவலக உதவியாளர், இரவு காவலர், தோட்ட பராமரிப்பாளர், ஓதுவார், சுயம்பாகி, கால்நடை பராமரிப்பாளர், ஸ்ரீபாதம் தாங்கி, சரக்கரை காப்பாளர்- என மொத்தம் 08 காலியிடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். வயது வரம்பு: 01.07.2025 தேதியின் படி 18-வயது முதல் 45 வயதுக்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். சம்பளம்: அதிகபட்சமாக ரூ.13,200- 41,800 வரை சம்பளமாக வழங்கப்படும். தகுதியுள்ளவர்கள் தபால் வழியாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி: செயல் அலுவலர்,சென்னை அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், எண் 315, தங்கசாலை தெரு, சென்னை -600003. விண்ணப்பிக்க கடைசி நாள்: 27.01.2025 வரை விண்ணப்பிக்கலாம். தேர்வு அறிவிப்பினை படிக்க: https://hrce.tn.gov.in/hrcehome/ajax/hppdf_view.php.

## துணை ராணுவத்தில் காலிப் பணியிடங்கள்

துணை ராணுவத்தின் ஒரு பிரிவான அசாம் ரைபிள்ஸ் படைப்பிரிவில் காலியாக உள்ள 95 பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியாகியுள்ளது. இது பற்றிய விவரங்கள் வருமாறு

பணி வழங்கும் நிறுவனம்: அசாம் ரைபிள் காலி இடங்கள்: 95 (விளையாட்டு வீரர்கள் மட்டும்) பதவி: ரைபிள் மேன்/ரைபிள் உமன் (ஜெனரல் டூட்டி) கல்வி தகுதி: 10-ம் வகுப்பு விளையாட்டு தகுதி: கால்பந்து, தடகளம், துப்பாக்கிச் சுடுதல் உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பவர்கள். வயது: 9-2-2026 அன்றைய தேதிப்படி 18 முதல் 23 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும். அரசு விதிமுறைகளின்படி வயது தளர்வு உண்டு. தேர்வு முறை: உடல் திறன் தேர்வு, உடல் தகுதி தேர்வு, மருத்துவ பரிசோதனை விண்ணப்பிக்க கடைசி தேதி: 9-2-2026 இணையதள முகவரி: https://www.assamrifles.gov.in/join-assam-rifles

## தூத்துக்குடி சிவன் கோவிலில் ரீல்ஸ், செல்பி எடுக்கத் தடை

**தூத்துக்குடி, ஜன.23:**

தூத்துக்குடி சிவன் கோவிலில் ரீல்ஸ், செல்பி எடுக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி நகரின் மையத்தில் பழமையான ஸ்ரீ பாகம்பிரியாள் உடனுறை சங்கர ராமேஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. இந்நிலையில் கோவில் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், பக்தர்கள் லுங்கி, சார்ட்ஸ், நைட்டி போன்ற ஆடைகளை அணிந்து வர அனுமதி இல்லை. பிற மத அடையாள ஆடைகள் அணியக் கூடாது. கோவில் வளாகத்திற்குள் காலணிகள் அணியக் கூடாது. கோவில் வளாகத்தில் ரீல்ஸ், செல்ஃபி எடுப்பது மற்றும் செல்போன் பயன்படுத்துவதை தவிர்க்கவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழில் நெறி வழிகாட்டும் கண்காட்சி - கருத்தரங்கம்

**இராமநாதபுரம், ஜன.23:**

இராமநாதபுரம் வேலுமனோகரன் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்க நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் சிம் ரன்ஜீத் சிங் காலோன் தலைமை தாங்கி, தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி அரங்கை திறந்து வைத்து பார்வையிட்டார். மாணவிகள் எதிர்காலத்தில் தேர்வு செய்யக் கூடிய பல்வேறு தொழில் வாய்ப்புகள், வேலைவாய்ப்பு திட்டங்கள், பயிற்சி வாய்ப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட வேலைவாய்ப்புத் துறை மண்டல இணை இயக்குநர் சே. திருமலைச்செல்வி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மதுக்குமார், கல்லூரி தாளாளர் வேலுமனோகரன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சிவகுமார், வேலைவாய்ப்பு இளநிலை அலுவலர் மார்த்தாண்ட பூபதி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் கல்லூரி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மாணவிகளுக்கு பயனளிக்கும் வகையில் தொழில் நெறி தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டு, அவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

## மது விற்பனை: ஒருவர் கைது

**இராஜபாளையம், ஜன.23:**

இராஜபாளையத்தை அடுத்த சுந்தரராஜபுரம் பகுதியில் சேத்தூர் ஊரக காவல் நிலைய சார்பு ஆய்வாளர் முருகராஜ் போலீசாருடன் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது அந்த பகுதியில் இரு சக்கர வாகனத்தில் சாக்கு மூட்டையுடன் நின்றிருந்த நபரை சந்தேகத்துடன் சோதனை செய்தபோது மூட்டையில் மது பாட் டில்கள் இருந்தது தெரியவந்தது. இதனையடுத்து அவரை விசாரித்தபோது அவர் தேவதானத்தை அடுத்த பாரதி நகர் பகுதியைச் சேர்ந்த முருகன்(34) என்றும், டாஸ்மாக் கடையில் மது பாட்டில்கள் வாங்கி அதை அதிக விலைக்கு விற்பனை செய்து வந்ததாக தெரியவந்தது. இதனையடுத்து அவரிட மிருந்த 85 மது பாட்டில்கள் மற்றும் இரு சக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

# விருதுநகர் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் 19 இடங்களில் திறப்பு



**விருதுநகர், ஜன.23:**

விருதுநகர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் வத்ராப், கான்சாபுரம், முஷ்டாக்குறிச்சி, இராமசாமியாபுரம், தம்பிப்பட்டி, தேவ தானம், சேத்தூர், மேட்டுப்பட்டி, சுந்தரபாண்டியம், முடுக் கன்குளம் மற்றும் சென்னிலைக்குடி ஆகிய 11 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வரு கின்றன.

மேலும், தற்போது நெல் அறுவடைக்கு தயார் நிலை யில் உள்ள மேலூர் துரைச்சாமியாபுரம், அயன் கொல்லங்கொண்டான், ஜமீன் நல்லமங்களம், கோவிலூர், முகவூர், கம்மாப்பட்டி, கீழகாஞ்சிராங்குளம் மற்றும் ஏ. முக்குளம் ஆகிய 8 இடங்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளன.

குவிண்டால் ஒன்றுக்கு சன்ன ரகம் (ஜி.ஆர்.ஏ) ரூ.2545, பொது ரகத்திற்கு ரூ.2500ம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். எனவே, விவசாயிகள், அறுவடை செய்த நெல்லினை நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயனடையலாம். மேலும் விபரங்களுக்கு 04562 252607 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் எனவும் மாவட்ட நிர்வாகம் அறிவித்தள்ளது.

# இராமநாதபுரத்தில் தனியார்துறை இன்று வேலைவாய்ப்பு முகாம்




**ராமநாதபுரம், ஜன.23:**

இராமநாதபுரம், ஜன.20 தமிழ்நாடு அரசு ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழி காட்டும் மையத்திலும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தி வருகிறது. இம்முகாமில் தனியார் துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு, தங்கள் நிறுவனங்களுக்கு தேவையான வேலையாளர் தேர்வு செய்யலாம்.

முகாமில் 10-ம் வகுப்பு முதல் முது கலை பட்டம் வரை முடித்த வேலை நாடுநர்கள், ஐ.டி.ஐ மற்றும் டிப்ளமோ படித்தவர்கள் கலந்துகொண்டு தங்க ளது தகுதிக்கேற்ப வேலை வாய்ப்பினை பெறலாம்.

முகாமில் கலந்து கொள்ள விரும்பும் வேலைநாடுநர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வேலைநாடு நர்கள், 23.1.2026 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத் திற்கு தங்களின் விண்ணப்பம், அனைத்து அசல் கல்விச்சான்றுகள், ஆதார் அட்டை, குடும்ப அடையாள அட்டை மற்றும் புகைப்படத்துடன் நேரில் வந்து கலந்துகொள்ள வேண்டும். இந்த முகாம் மூலம் தனியார் துறை நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெறுவது, அரசு வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யப்படும் வாய்ப்பை பாதிக்காது.

அரசு பணியிடங்களுக்கு பரிந்துரை செய்யப்படுவதேயும் இம்முகாமில் வழங்கப்படும் வாய்ப்பின் அடிப்படை யில் நிகழும்.

மேலும், தனியார்துறை நிறுவனங்கள் மற்றும் வேலைதேடும் இளைஞர்களுக்கு இம்முகாம் முற்றி லும் இலவசமாக நடைபெறும்.

இதற்காக *"Tamil Nadu Private Job Portal" www.tnprivatejobs.tn.gov.in, http://www.tnprivatejobs.tn.gov.in* என்ற இணையதள சேவையும் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் சிம் ரன்ஜீத் சிங் காலோன் இதுகுறித்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## குப்பைகளை சாலையில் கொட்டி போராட்டம்

**ஒட்டன்சத்திரம், ஜன.23:**

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தாலுகா, வடமதுரை ஒன்றியத்திற்கு உட்பட்ட சுக்காம்பட்டி கிராமம், எஸ்.புதுப்பட்டி பகுதியில் சுமார் 700 குடும்பங்கள் வசித்து வரு கின்றன. இப்பகுதியில் ஊராட்சி மன்றத்தின் தூய்மைப் பணியாளர்கள் நாள்தோறும் வீடு வீடாகச் சென்று குப்பைகளை சேகரித்து, அந்தந்த தெருக்களில் ஒருங்கிணைத்து வைப்பர். சேகரிக்கப்பட்ட குப்பைகள் அரசால் வழங்கப்பட்ட பேட்டரி வாகனம் மூலம் சுமார் ஒன்றரை கிலோமீட்டர் தூரத்தில் உள்ள குப்பை கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு வந்தன. இந்நிலையில் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்பு பேட்டரி வாகனம் பழுதடைந்ததாக கூறப்படுகிறது. இந்த பழுதை சீரமைக்க ரூ.5 ஆயிரம் செலவாகும் என தெரியவந்த நிலையில், ஊராட்சி மன்ற நிர்வாகத்திடம் போதிய நிதி இல்லா ததால், தூய்மைப் பணியாளர்களே சொந்த செலவில் வாகனத்தை சீரமைக்க வேண்டும் என ஊராட்சி செயலர் பெரியசாமி தெரிவித்ததாக கூறப்படுகிறது. இதனால் வீடு வீடாகச் சென்று சேகரித்த குப்பைகளை குப்பை கிடங்கிற்கு கொண்டு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதனைக் கண்டித்து தூய்மை பணியாளர்கள் அனை வரும் தாங்கள் சேகரித்த குப்பைகளை அய்ய லூரிலிருந்து கடவூர் செல்லும் சாலையில் கொட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதுகுறித்து திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக தலையிட்டு, பேட்டரி வாகனத்தை சீரமைத்து தூய்மைப் பணியாளர்கள் பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தூய்மைப் பணியாளர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஜன.26 -450 ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம்



**விருதுநகர், ஜன.23:**

*விருதுநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட 450 கிராம ஊராட்சிகளில் ஜன.26 குடியரசு தினத்தன்று கிராம சபைக் கூட்டங்களை நடத்திட வேண்டுமென மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா உத்தரவிட்டுள்ளார்.*

*இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், கிராம சபைக் கூட்டத்தில் ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம், தணிக்கை அறிக்கை, மக்கள் திட்டமிடல் இயக்கம் மூலம் 2026-27 ஆம் நிதியாண்டிற்கான கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் பெறுதல், வரவு - செலவு திட்டப் பணிகள், தூய்மை பாரத இயக்க (ஊரகம்) திட்டம், ஜல் ஜீவன் திட்டம், சிறு பாசன ஏரிகள் புதுப்பித்தல் குறித்த விபரம், தொகுதி மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்டவை விவாதிக்கப்படும். எனவே, இக்கூட்டத்தில் பொது மக்கள் கலந்து கொண்டு பயனடையலாம் என தெரிவித்துள்ளார்.*

# தூய்மையான வாக்காளர் பட்டியலே ஜனநாயகத்துக்கு பலம் -தலைமைத் தேர்தல் ஆணையர்

புதுடெல்லி, ஜன.23:

'ஜனநாயகத்தை வலுப்படுத்த தூய்மையான வாக்காளர் பட்டியல் மிக முக்கியம்' என்று தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தெரிவித்தார்.

பிகாரைத் தொடர்ந்து, தமிழகம், மேற்கு வங்கம் உள்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தேர்தல் ஆணையம் மேற்கொண்டுவரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) பணியை மேற்கு வங்கத்தில் ஆளும் திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்துவரும் சூழலில் இந்தக் கருத்தை அவர் தெரிவித்தார்.



தில்லியில் புதன்கிழமை நடைபெற்ற தேர்தல் மேலாண்மை அமைப்புகளின் சர்வதேச மாநாட்டின் தொடக்க விழாவில் பங்கேற்ற அவர் மேலும் பேசியதாவது:

பிகார் மாநிலத்தில் கடந்த ஆண்டு எஸ்ஐஆர் பணி மேற்கொண்டபோது, வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர்களை நீக்கியது அல்லது புதிதாகச் சேர்த்ததை எதிர்த்து ஒரு புகார்கூட சமர்ப்பிக்கப்படவில்லை.

எஸ்ஐஆர் பணி நிறைவடைந்ததும் பிகாரில் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்ட சட்டப்பேரவைத் தேர்தலில் ஒரு லட்சம் வாக்குச்சாவடிகள் இடம்பெற்ற நிலையில், ஒன்றில்கூட மறு தேர்தலுக்கான உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

அந்த வகையில், ஜனநாயகத்தை வலுப்படுத்த, சட்டப்படி தகுதியுள்ள ஒவ்வொரு வாக்காளரும் சேர்க்கப்பட்ட தூய்மையான வாக்காளர் பட்டியலும், அத்தகைய வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்படுவதும் மிக அவசியம் என்றார்.

## விளையாட்டு செய்திகள்

### பி.வி. சிந்து, ஸ்ரீகாந்த் முன்னேற்றம்

புதுடெல்லி, ஜன.23:

இந்தோனேஷிய மாஸ்டர்ஸ் பாட்மின்டன் போட்டியின் இரண்டாம் சுற்றுக்கு இந்திய நட்சத்திரங்கள் பி.வி. சிந்து, ஸ்ரீ காந்த், லக்ஷயா சென் தகுதி பெற்றுள்ளனர்.

இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தாவில் செவ்வாய்க்கிழமை மாஸ்டர்ஸ் பாட்மின்டன் போட்டி நடைபெற்று வருகிறது. ஆடவர் ஒற்றையர் பிரிவில் உலகின் முன்னாள் நம்பர் 1 வீரர் கிடாம்பி ஸ்ரீ காந்த் 21-15, 21-23, 24-22 என்ற கேம் கணக்கில் ஜப்பானின் கோகி வாட்டன்பேயை வீழ்த்தி இரண்டாம் சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு இந்திய வீரர் லக்ஷயா சென்-சீன தைபேயின் வாங் ஸு வெய் ஆட்டத்தில் முதல் கேமை 21-13 என லக்ஷயா கைப்பற்றினார். ஆனால் இரண்டாவது கேமை 21-16 என்ற வாங் வென்ற நிலையில், மூன்றாம் கேம் கடினமாக இருந்தது. லக்ஷயா சென் முழு ஆதிக்கம் செலுத்தி 21-14 என வென்று இரண்டாம் சுற்றுக்கு தகுதி பெற்றார். கிரண் ஜார்ஜ் தனது ஆட்டத்தில் தோற்று வெளியேறினார்.

**பி.வி. சிந்து முன்னேற்றம்:**

மகளிர் முதல் சுற்றில் முன்னாள் உலக சாம்பியன் பி.வி. சிந்து 22-20, 21-18 என்ற கேம் கணக்கில் ஜப்பானின் மனாமி சியுஸு வை வீழ்த்தி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார். அகர்ஷி காஷ்யப், கலப்பு இரட்டையர் பிரிவில் ரோஹன் கபூர், ருத்விகா கடே, துருவ் கபிலா, தனிஷா க்ரஸ்டோ ஆகியோரும் தோற்றுவெளியேறினர்.

### வெற்றியுடன் நிறைவு செய்தது தமிழ்நாடு டிராகன்ஸ்

ஹாக்கி இந்தியா ஆடவர் லீக் தொடரை வெற்றியுடன் நிறைவு செய்தது அக்கார்ட் தமிழ்நாடு டிராகன்ஸ் அணி.

ஒடிஸா மாநிலம் புவனேசுவரத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் ராஞ்சி ராயல்ஸ் அணியை பெனால்டி ஷூட் அவுட்டில் 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது தமிழ்நாடு டிராகன்ஸ்.

முதல் நிமிஷத்திலேயே ராயல்ஸ் வீரர் மந்தீப் சிங் முதல் கோலடித்தார். கேப்டன் டாம் பூன் மீண்டும் ராயல்ஸ் அணிக்காக 2-ஆவது கோலை பதிவு செய்தார்.

பின்னர் டிராகன்ஸ் அணி தரப்பில் பிளே கோவர்ஸ், கார்த்தி செல்வம் கோலடித்த சமநிலை ஏற்பட்டது.

ஆட்ட நேர முடிவில் 3-3 என சமநிலையில் இருக்க பெனால்டி ஷூட் அவுட் முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது தமிழ்நாடு டிராகன்ஸ்.

கடைசி ஆட்டத்தை வெற்றியுடன் நிறைவு செய்தது. பிளே ஆஃப் சுற்றுக்கு தகுதி பெற்ற ராஞ்சி ராயல்ஸ் குவாலிஃபயர் 1-இல் கலிங்கா லேன்சர்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

தமிழ்நாடு டிராகன்ஸ் 5-ஆவது இடத்துடன் வெளியேறியது.

# ஆண்டுக்கு இரு முறை வழக்குரைஞர் கவுன்சில் தேர்வு இறுதி பருவ சட்ட மாணவர்களும் எழுதலாம்

சென்னை, ஜன.23:

'அகில இந்திய வழக்குரைஞர் கவுன்சில் (ஏஐபிஇ) தேர்வு நடத்தப்படுகிறது. இத் தேர்வில் இறுதிப் பருவ சட்ட (எல்எல்பி) மாணவர்களும் பங்கேற்கலாம்' என்று உச்சநீதிமன்றத்தில் இந்திய வழக்குரைஞர் சங்கம் (பிசிஐ) தரப்பில் செவ்வாய்க்கிழமை தெரிவிக்கப்பட்டது.



சட்டப் படிப்பை (எல்எல்பி) முடிக்கும் மாணவர்கள் வழக்குரைஞராக பணியாற்ற வழக்குரைஞர் கவுன்சிலில் (பார் கவுன்சில்) பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு பதிவு செய்ய, பிசிஐ சார்பில் நடத்தப்படும் ஏஐபிஇ தேர்வில் தகுதி பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த ஏஐபிஇ தேர்வில் பங்கேற்க எல்எல்பி இறுதிப் பருவ மாணவர்களையும் அனுமதிக்க உத்தரவிடக் கோரி கடந்த 2024-ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை 2024-ஆம் ஆண்டு செப்டம்பர் 20-ஆம் தேதி விசாரித்த உச்சநீதிமன்றம், ஏஐபிஇ தேர்வில் எல்எல்பி இறுதிப் பருவ மாணவர்களையும் அனுமதிக்க இடைக்கால உத்தரவை பிறப்பித்தது. எல்எல்பி முடிக்கும் மாணவர்கள் ஏஐபிஇ தேர்வுக்காக ஓராண்டு காத்திருப்பதை அனுமதிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் அப்போது குறிப்பிட்டது.

இந்த வழக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோா அடங்கிய அமர்வில் செவ்வாய்க்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது பிசிஐ தரப்பில் ஆஜரான வழக்குரைஞர், 'ஏஐபிஇ தேர்வு ஆண்டுக்கு இரு முறை நடத்தப்படுகிறது. இத் தேர்வில், எல்எல்பி இறுதிப் பருவ மாணவர்களும் பங்கேற்கலாம். அதற்கேற்ப 'பிசிஐ விதிகள் 2026-ஐ பிசிஐ வகுத்துள்ளது' என்றார்.

# 13 நாடுகள் வழியாக 22,000 நாட்டிக்கல் மைல் பயணிக்கும் இந்திய போர் கப்பல்



புதுடெல்லி, ஜன.23:

கேரள மாநிலம் கொச்சியிலுள்ள கடற்படை தளத்திலிருந்து நேற்று ஐஎன்எஸ் சுதர்ஷினி கப்பலின் நீண்ட தூர பயணத்தை தெற்கு கடற்படை கமாண்டிங் இன் சீப் அதிகாரியும், துணை தளபதியுமான சமீர் சக்சேனா தொடங்கி வைத்தார்.

இந்த கப்பல் 22 ஆயிரம் நாட்டிக்கல் மைல் தூரத்துக்கு பயணிக்க உள்ளது. 13 நாடுகள் வழியாக 18 துறைமுகங்களுக்கு பயணம் செய்யும். இதுகுறித்து கடற்படை செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறும்போது, "ஐஎன்எஸ் சுதர்ஷினி கப்பல் நீண்ட தூர பயணத்தை தற்போது தொடங்கியுள்ளது.

இந்த 'வரலாற்றுச் சிறப்புமிக்க பயணம்' இந்தியாவின் கடல்சார் முயற்சிகளுக்கு ஒரு சக்திவாய்ந்த அடையாளமாகத் திகழ்கிறது. இது உலகளாவிய கடல்சார் நடவடிக்கைகளில் நாட்டின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. கடந்த ஆண்டு டிசம்பரில் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற கடற்படை தின விழாவில் பங்கேற்று சாகசங்கள் செய்தது" என்றார். மேலும் பிரான்ஸில் வரும் மார்ச்-ஏப்ரலில் நடைபெறவுள்ள கப்பல் கண்காட்சி திருவிழாவிலும் பங்கேற்கவுள்ளது. இதைத் தொடர்ந்து வரும் ஜூலையில் அமெரிக்காவில் நடைபெறவுள்ள அந்நாட்டின் 250-வது சுதந்திர தினக் கொண்டாட்டத்திலும் பங்கேற்கும். அப்போது நியூயார்க் நகருக்கு இந்தக் கப்பல் செல்லும் என்பது குறிப்பிடத்தக்கது.

## க்ரைம் கார்னர்

### படுக்கை அறையில் வெடித்த மோதல்...தூங்கிய கணவரை கழுத்தை இறுக்கி கொன்ற மனைவி

திருப்பதி, ஜன.23:

ஆந்திர மாநிலம், ஏலூரு மாவட்டம், நுஜிவீடு அடுத்த கிழக்கு திகவல்லியை சேர்ந்தவர் சுதீர் ரெட்டி (வயது 44). இவரது மனைவி ஞான பிரசன்னா (வயது 40) சுதீர் ரெட்டி ஐதராபாத், குகட் பள்ளி, விவேகானந்தா நகரில் குடும்பத்தினருடன் தங்கி இருந்து தனியார் நிறுவனத்தில் மார்க்கெட்டிங் மேனேஜராக வேலை செய்து வந்தார். கணவன், மனைவி இருவரும் ஒருவரையொருவர் நடத்தையில் சந்தேகம் அடைந்தனர். இதனால் அடிக்கடி தகராறு ஏற்பட்டது. சுதீர் ரெட்டி தினமும் மது குடித்து விட்டு வந்து மனைவியை அடித்து, உதைத்து துன்புறுத்தி வந்தார். அப்போது இருவருக்கும் மோதல் வெடித்தது. அதன்பின்னர் சுதீர் ரெட்டி படுக்கையறையில் தூங்கிக் கொண்டு இருந்தார். அப்போது ஞான பிரசன்னா வீட்டிலிருந்த கயிறை எடுத்து வந்து கணவரின் கழுத்தை இறுக்கிக்கொலை செய்தார். பின்னர் கணவரை படுக்கையில் இருந்து கீழே தள்ளினார். இதில் சுதீர் ரெட்டி உடலில் காயம் ஏற்பட்டது. காலை உறவினர்களுக்கு போன் செய்த ஞான பிரசன்னா கணவர் மது போதையில் படுக்கையில் இருந்து கீழே விழுந்து இறந்து விட்டதாக நம்ப வைத்தார்.

சகோதரரின் சாவில் மர்மம் இருப்பதாக சுதீர் ரெட்டியின் சகோதரி போலீசில் புகார் செய்தார். போலீசார் சந்தேக மரணம் என வழக்கு பதிவு செய்தனர். பிரேத பரிசோதனை அறிக்கையில் சுதீர் ரெட்டி கழுத்தை இறுக்கி கொலை செய்யப்பட்டது தெரிய வந்தது. போலீசார் ஞான பிரசன்னாவை கைது செய்து ஜெயிலில் அடைத்தனர்.

### அடகு கடையில் நள்ளிரவில் திருட்டு முயற்சியை தடுத்த உரிமையாளர்: பிஹாரைச் சேர்ந்த இளைஞர் கைது



சென்னை, ஜன.23:

பாடி, டீஎம்பி நகர், அண்ணா தெருவில் வசித்து வருபவர் கணேஷ் (34). மேற்கு முகப்பேர், பள்ளி தெருவில் அடகுக் கடை நடத்தி வருகிறார்.

இந்த கடையில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமரா நேரடி காட்சியை அவர் தனது செல்போனில் பார்க்கும் வசதியை வைத்துள்ளார். கடந்த 19-ம் தேதி இரவு கணேஷ் தனது கடையை வழக்கம்போல் பூட்டிவிட்டு வீடு திரும்பினார். நள்ளிரவு சுமார் 11 மணியளவில், அவர் தனது செல்போன் மூலம் சிசிடிவி கேமரா காட்சியை பார்த்தபோது, ஒரு நபர் அடகுக் கடையின் பூட்டை பெரிய இரும்புக் கம்பியால் உடைத்துக் கொண்டிருந்தார். இது தொடர்பாக அவர் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தார். தகவல் அறிந்து நொளம்பூர் காவல் நிலைய ரோந்து போலீஸார் சம்பவ இடம் விரைந்தனர். போலீஸாரை கண்டதும் அந்த நபர் தப்பியோட முயன்றார். அவரை போலீஸார் விரட்டிப் பிடித்து விசாரித்தனர். இதில் பிடிபட்டது பிஹார் மாநிலம், சமஸ்திபூரைச் சேர்ந்த ரவிந்த்குமார் சர்மா (28) என்பது தெரிந்தது. இதையடுத்து அவரை போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். துரிதமாக செயல்பட்டு தகவலை போலீஸாருக்கு தெரிவித்ததால் பெரிய அளவில் நடைபெற இருந்த திருட்டு சம்பவம் தடுக்கப்பட்டது. அந்த அடகுக் கடை உரிமையாளரை போலீஸார் வெகுவாகப் பாராட்டினர்.

## வணிகச் செய்திகள்

### 3 நாள் சரிவுக்குப் பிறகு ஏற்றத்தில் பங்குச்சந்தை! நேர்மறையுடன் நிறைவு பெறுமா?

சென்னை, ஜன.23:

மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் நேற்று காலை 82,459.66 என்ற புள்ளிகளில் தொடங்கிய நிலையில் காலை 11 மணியளவில் சென்செக்ஸ் 160.16 புள்ளிகள் அதிகரித்து 82,073.00 புள்ளிகளில் வர்த்தகமாகிறது.

அதேபோல தேசிய பங்குச் சந்தை குறியீட்டு எண் நிஃப்டி 72.85 புள்ளிகள் உயர்ந்து 25,230.35 புள்ளிகளில் வர்த்தகமாகி வருகிறது. கடந்த 3 நாள்கள் பங்குச்சந்தை கடும் சரிவுடன் வர்த்தகமானது. மும்பை பங்குச்சந்தை சென்செக்ஸ் 82,000 புள்ளிகளுக்குக் கீழ் சென்றது. தொடர்ந்து இன்று குறைவான புள்ளிகள் வித்தியாசத்திலேயே ஏற்றத்துடன் வர்த்தகமாகி வருகின்றன. நேர்மறையுடன் வர்த்தகம் நிறைவு பெறுமா என்பது வார்த்தக நேர இறுதியில்தான் தெரிய வரும். இன்றைய வர்த்தகத்தில் சென்செக்ஸ் 30 பங்குகளில் 29 பங்குகள் ஏற்றத்துடன் வர்த்தகமாகின்றன. ஐசிஐசிஐ வங்கி மட்டும் சரிவில் வர்த்தகமாகிறது. சென்செக்ஸில் எடர்னல், ஏசியன் பெயிண்ட்ஸ், எஸ்பிஐ, அதானி போர்ட்ஸ், பிஇஎல், டாடா ஸ்டீல், இண்டிகோ, எம்&எம், ஆக்சிஸ் வங்கி, சன் பார்மா, ஹெச்டிஎஃப்சி வங்கி, ஐடிசி, பவர் கிரிட், டெக் மஹிந்திரா, மாருதி சுசுகி, கோடக் வங்கி, இன்ஃபோசிஸ் ஆகியவை 0.5 சதவீதம் முதல் 6 சதவீதம் வரை உயர்ந்து அதிக லாபம் ஈட்டின. நிஃப்டி மிட்கேப் குறியீடு 1.57 சதவீதமும் நிஃப்டி ஸ்மால்கேப் குறியீடு 1 சதவீதமும் உயர்ந்துள்ளன. துறைவாரியாக நிஃப்டி பொதுத்துறை வங்கி குறியீடு அதிகபட்சமாக 2 சதவீதம் வரை உயர்ந்தது. நிஃப்டி பார்மா, ஆட்டோ குறியீடுகள் தலா 1.8 சதவீதமும் ஐடி குறியீடு 1 சதவீதமும் லாபத்துடன் வர்த்தகம் நடைபெற்று வருகிறது. நேட்டோவில் கிரீன்லாந்தை இணைப்பதற்கான ஒப்பந்தத்தை எட்டியதால் ஐரோப்பிய நாடுகள் மீது வரிவிதிப்பு இல்லை என அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியதையடுத்து உலகளவில் பங்குச்சந்தை வர்த்தகம் முன்னேற்றம் கண்டுள்ளது.

# செலவுகளை உள்ளடக்கிய வகையில் மின்சார சட்டத் திருத்த மசோதா!: நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் தாக்கல்

புதுடெல்லி, ஜன.23:

செலவுகளை பிரதிபலிக்கும் கட்டணம் என்ற கருத்தில் மின்சார சட்டத் திருத்த மசோதா பட்ஜெட் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும் என்று மத்திய மின்சாரம், வீட்டுவசதி, நகர்ப்புற விவகாரத் துறை அமைச்சர் மனோகர் லால் நேற்று தெரிவித்தார்.



நாட்டில் மின்சாரத்தை விநியோகிக்கும் நிறுவனங்கள் (டிஸ்காம்ஸ்) பெரும் நஷ்டத்தை சந்தித்து வருகின்றன. மேலும், மின்சார உற்பத்தி, விநியோகம், மக்களுக்கு வழங்கப்படும் மானியம், விநியோகத்தின் போது மின்சார இழப்பு போன்ற பல காரணங்களால் டிஸ்காம்ஸ் நிறுவனங்கள் தொடர்ந்து நஷ்டத்தை சந்தித்து வருகின்றன.

இதுபோன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, அனைத்து செலவுகளையும் பிரதிபலிக்கும் கட்டணம் என்ற கருத்தில், மின்சார சட்டத் திருத்த மசோதாவை கொண்டு வர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

குறிப்பாக மின்சார விநியோகத்தில் தனியார் துறைக்கு அனுமதி அளித்து போட்டியை அதிகரிப்பது, அதன் மூலம் நுகர்வோர் அவர்களுக்கு விருப்பப்பட்ட விநியோக நிறுவனத்தை தேர்வு செய்வது உட்பட பல்வேறு அம்சங்கள் இந்த மசோதாவில் உள்ளது. இந்த மசோதா கடந்த நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரிலேயே தாக்கல் செய்யப்பட இருந்தது.

ஆனால், மாநிலங்களின் கடும் எதிர்ப்பால் மசோதா தாக்கல் செய்யப்படவில்லை. அரசு துறைகளின் நிதிச்சுமை, மாநிலங்களின் அதிகாரம் குறைதல், இலவச மின்சார திட்டங்களுக்கு பாதிப்பு போன்ற காரணங்களால் பல மாநில அரசுகளும், எதிர்க்கட்சிகளும், ஊழியர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், செலவுகளை பிரதிபலிக்கும் கட்டணம் என்ற கருத்தில் மின்சார திருத்த சட்டமசோதா நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் அறிமுகம் செய்யப்படும்.

இந்த சட்டத் திருத்தத்தின் மூலம் டிஸ்காம்ஸ் நிறுவனங்களின் நஷ்டம் குறைக்கப்படும். இந்த மசோதாவை நாடாளுமன்றத்தில் சுமுகமாக நிறைவேற்ற, அனைத்துத் தரப்பினரிடம் ஒருமித்த கருத்தை உருவாக்க முயற்சிப்போம் என்று மத்திய மின்சார துறை அமைச்சர் மனோகர் லால் நேற்று தெரிவித்தார். 'அகில இந்திய டிஸ்காம்ஸ் சங்கம்' நடத்திய மாநாட்டில் மத்திய அமைச்சர் மனோகர் லால் நேற்று இந்தத் தகவலை தெரிவித்தார்.

இந்நிலையில், தேசிய மின்சார கொள்கை 2026 பற்றி தங்கள் கருத்துகளை தெரிவிக்கும்படி மத்திய மின்சாரத் துறை அமைச்சகம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

# திருப்பதி ரத சப்தமி விழாவில் எந்த குறையும் இருக்கக்கூடாது.. தேவஸ்தான செயல் அதிகாரி உத்தரவு



**திருப்பதி, ஜன.23:**

கோவில் மாட வீதிகள், தரிசன வரிசைகள் மற்றும் வெளிப் பகுதிகளில் அன்னப்பிரசாதம் தொடர்ச்சியாக விநியோகம் செய்யப்படும் என தேவஸ்தான செயல் அதிகாரி தெரிவித்தார்.

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் 25-ந்தேதி ரத சப்தமி விழா நடக்கிறது. அன்றைய தினம் காலை, இரவு பல்வேறு வாகன சேவைகள் நடக்கின்றன. மொத்தம் 7 வாகனங்களில் உற்சவர் மலையப்பசுவாமி தனித்தும், உபய நாச்சியார்களுடனும் எழுந்தருளி கோவிலின் நான்கு மாடவீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். மலையப்பசுவாமியை தரிசனம் செய்வதற்காக ஏராளமான பக்தர்கள் திருமலைக்கு வருகை தருவார்கள். இதனால் திருமலை திருப்பதி தேவஸ்தானம் சார்பில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ரத சப்தமி விழா ஏற்பாடுகள் குறித்து திருமலையில் உள்ள அன்னமய்ய பவனில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. திருமலை திருப்பதி தேவஸ்தான செயல் அதிகாரி ஏ.கே.சிங்கால், கூடுதல் செயல் அதிகாரி வெங்கையா சௌத்ரி ஆகியோர் தலைமை தாங்கினர். இக்கூட்டத்தில் செயல் அதிகாரி ஏ.கே.சிங்கால் பேசுகையில், ஜனவரி 25-ம் தேதி ரத சப்தமி விழாவை பிரம்மாண்டமாகவும் சிறப்பாகவும் நடத்தவேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

வாகன சேவைகளை பக்தர்கள் சிரமம் இன்றி தரிசனம் செய்வதற்கான ஏற்பாடுகள் மற்றும் பிற வசதிகள் எந்த குறையும் இல்லாமல் பக்தர்களுக்கு திருப்தி அளிக்கும் வகையில் இருப்பதை உறுதி செய்வதற்காக மாவட்ட நிர்வாகம், காவல்துறை மற்றும் தேவஸ்தான ஊழியர்களிடையே ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும் அவர் பேசியதாவது:

* கோவில் மாட வீதிகள், தரிசன வரிசைகள் மற்றும் வெளிப் பகுதிகளில் அன்னப்பிரசாதம் தொடர்ச்சியாக விநியோகம் செய்யப்படும். * தேவஸ்தான கண்காணிப்புத் துறை மற்றும் மாவட்ட காவல்துறை ஒருங்கிணைந்து, ஒத்திகைப் பயிற்சிகளை நடத்துவதுடன், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

* பக்தர்களுக்கு விநியோகம் செய்வதற்காக 5 லட்சம் லட்டுகள் கையிருப்பில் வைக்க வேண்டும்.

* போதுமான வாகன நிறுத்துமிட ஏற்பாடு செய்ய வேண்டும்.

* வாகன சேவைக்கான வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டு, சான்றிதழ் வழங்கப்படவேண்டும்.

* கேலரிகள், கழிப்பறைகள், தடுப்புகள், விளக்குகள், எல்இடி திரைகள், தூய்மைப் பணிகள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் ஆம்புலன்ஸ்கள் தயார் நிலையில் வைக்கவேண்டும். * வாகன சேவைகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறும். * சூரியபிரபை வாகன சேவையின்போது, தேவஸ்தானத்தின் எஸ்.வி. பால மந்திர் மாணவர்கள் ஆதித்ய ஹிருதயம் பாராயணம் செய்வார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

## ஆந்திர மதுபான ஊழல் வழக்கு: ஜெகனின் தனிச் செயலர் 3 பேரின் இடைக்கால ஜாமீன் நீட்டிப்பு



**புதுடெல்லி, ஜன.23:**

ஆந்திர முதல்வராக ஜெகன் மோகன் ரெட்டி பதவி வகித்தபோது, 2019-2024 வரையிலான காலத்தில் மதுபானக் கொள்முதலில் ரூ.3,500 கோடி ஊழல் நடைபெற்றாக குற்றச்சாட்டு எழுந்தது. இதுதொடர்பாக ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரியும், முதல்வர் அலுவலக முன்னாள் செயலருமான தனஞ்செய ரெட்டி, ஜெகன் மோகன் ரெட்டியின் தனிச் செயலராக இருந்த கிருஷ்ண மோகன் ரெட்டி, பாரதி சிமெண்ட்ஸ் நிறுவன இயக்குநர் பாலாஜி கோவிந்தப்பா ஆகியோர் மீது வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் 3 பேரும் பெற்றிருந்த ஜாமீனை கடந்த நவம்பர் 19-ஆம் தேதி ஆந்திர உயர்நீதிமன்றம் ரத்து செய்ததோடு, விசாரணை நீதிமன்றத்தில் சரணடையும்படியும், அங்கு ஜாமீனுக்கு விண்ணப்பிக்கும்படியும் உத்தரவிட்டிருந்தது. இதை எதிர்த்து 3 பேரும் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இதை முன்பு விசாரித்த உச்சநீதிமன்றம், மூவரின் மனு குறித்து ஆந்திர அரசு மற்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்த நபர்களின் பதிலை கோரி, இடைக்கால ஜாமீன் அளித்திருந்தது.

இந்நிலையில், இந்த மனு உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதிகள் ஜய்மால்ய பாக்சி, விபுல் எம் பஞ்சோலி ஆகியோரைக் கொண்ட அமர்வு முன் புதன்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், ஜாமீனை ரத்து செய்த உயர்நீதிமன்ற உத்தரவில் தலையிட மறுத்துவிட்டனர். அதேநேரத்தில் 3 பேரையும் விசாரணை நீதிமன்றத்தை அணுகி ஜாமீன் பெறும்படி உத்தரவிட்டு, இடைக்கால ஜாமீனை நீட்டித்து ஆணையிட்டனர்.

## இந்தியா, ஸ்பெயின் வளங்களை ஒருங்கிணைக்க வேண்டும்: குடியரசுத் தலைவர் முர்மு



**புதுடெல்லி, ஜன.23:**

இந்தியா வந்த ஸ்பெயின் வெளியுறவு அமைச்சர் ஜோஸ் மேனுவல் ஆல்பரேஸ், புது தில்லியில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை அவரது மாளிகையில் புதன்கிழமை சந்தித்தார். அப்போது அவரிடம் முர்மு கூறியதாவது:

இந்தியா, ஸ்பெயின் இடையே நூற்றாண்டுகளாக நல்லுறவு நிலவுகிறது. வர்த்தகம், பண்பாடு, மக்களாட்சி விழுமியங்களால் அந்த உறவு செழிப்பாகியுள்ளது. உலகில் ஸ்திரத்தன்மை, அமைதி, வளமை நிலவ வேண்டும் என்ற இரு நாடுகளின் பொதுவான இலக்குகளை எட்ட ஐ.நா., ஜி20 கூட்டமைப்பு போன்ற பன்முகத் தளங்களில் இரு நாடுகளும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும். உலக அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு பயங்கரவாதம் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. அதற்கு எதிராக ஒன்றிணைந்து போரிட இந்தியாவும் ஸ்பெயினும் தமது வளங்கள், திறன்களை ஒருங்கிணைக்க வேண்டும். இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையொப்பமான பின்னர், இந்தியா-ஸ்பெயின் இடையிலான வர்த்தக உறவு மேலும் வலுப்பெறும் என்று தெரிவித்தார். பின்னர் பாம்பு விஷம் வாங்க வந்த மேலும் ஆறு பேரும் கைது செய்யப்பட்டனர்.

## சபரிமலை தங்கக் கவச முறைகேடு: டிடிபி முன்னாள் தலைவருக்கு ஜாமீன் வழங்க உயர்நீதிமன்றம் மறுப்பு

**சபரிமலை, ஜன.23:**

கடந்த 2019-இல் சபரிமலை ஐயப்பன் கோயிலின் கருவறைக் கதவுகள் மற்றும் துவார பாலகர் சிலைகளின் தங்கக் கவசங்கள் புதுப்பிக்கப்பட்ட பிறகு, அவற்றின் எடை குறைந்ததாகப் புகார் எழுந்தது. இதுதொடர்பாக இரு வழக்குகள் பதிவுசெய்யப்பட்ட நிலையில் விசாரணை மேற்கொள்ள கேரள உயர்நீதிமன்ற வழிகாட்டுதலில் சிறப்பு புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) அமைக்கப்பட்டது. இதையடுத்து, தங்கக் கவச புதுப்பிப்புப் பணிக்கான செலவை ஏற்ற பெங்களூரு தொழிலதிபர் உண்ணிகிருஷ்ணன் போற்றி, திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரிய முன்னாள் தலைவர்கள் ஏ.பத்மகுமார், என்.வாசு உள்பட 12 பேரை எஸ்ஐடி கைது செய்து விசாரித்து வருகிறது. இதனிடையே ஏ.பத்மகுமார், டிடிபியின் முன்னாள் நிர்வாக அதிகாரி பி.முராரி பாபு மற்றும் பெல்லாரியில் உள்ள நகைக் கடை அதிபர் கோவர்தன் ஆகியோர் ஜாமீன் கோரி கேரள உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். அவர்கள் மூன்று பேருக்கும் ஜாமீன் வழங்க மறுப்பு தெரிவித்து அந்த மனுக்களை நீதிபதி புதன்கிழமை தள்ளுபடி செய்தார்.

## டெல்லி குண்டுவெடிப்புடன் தொடர்பு எனக்கூறி முதியவர் டிஜிட்டல் கைது: ரூ.16 லட்சம் மோசடி



**மும்பை, ஜன.23:**

மராட்டிய மாநிலம் மும்பை புறநகர் மாவட்டம் கிழக்கு அந்தேரி பகுதியை சேர்ந்தவர் சேகர் (பெயர் மாற்றப்பட்டுள்ளது - வயது 75). இவர் மும்பை மாநகராட்சியில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் ஆவார்.

இதனிடையே, கடந்த மாதம் 11ம் தேதி சேகர் செல்போன் எண்ணுக்கு அழைப்பு வந்துள்ளது. அந்த அழைப்பில் என்.ஐ.ஏ. அதிகாரி என அறிமுகப்படுத்திக்கொண்ட மோசடி கும்பல் சேகரிடம் டெல்லி குண்டுவெடிப்பு கும்பலுடன் உங்களுக்கு தொடர்பு உள்ளதாக கூறியுள்ளனர். மேலும், சேகரிடம் உங்கள் வங்கி கணக்கில் பயங்கரவாத அமைப்பின் வங்கி கணக்கிற்கு ரூ. 7 கோடி பணம் பரிமாறியுள்ளதாக குற்றஞ்சாட்டினர்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணைக்கு சேகரின் வங்கி கணக்கு விவரங்களை கேட்டுள்ளனர். மேலும், இந்த வழக்கில் உங்களை டிஜிட்டல் கைது செய்துள்ளதாக சேகரிடம் அந்த கும்பல் கூறியுள்ளது. மோசடி கும்பலின் மிரட்டலை நம்பிய சேகர் தனது வங்கி கணக்கில் இருந்து அந்த கும்பல் கூறிய வங்கி கணக்கிற்கு ரூ. 16 லட்சம் பணத்தை டெபாசிட் செய்துள்ளார். பணத்தை டெபாசிட் செய்தப்பின் அந்த கும்பல் சேகருடனான தொடர்பை துண்டித்துள்ளது. இதையடுத்து, தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த சேகர் உடனடியாக போலீசில் புகார் அளித்தார். புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார், டிஜிட்டல் கைது மூலம் ரூ. 16 லட்சம் மோசடி செய்த கும்பல் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## குற்ற சம்பவங்களில் பாதிக்கப்பட்டவரின் வீட்டுக்கே சென்று புகாரைப் பெறும் வசதி - தெலங்கானா காவல் துறை புதிய முயற்சி

**ஐதராபாத், ஜன.23:**

போக்ஸோ வழக்குகள் உள்ளிட்ட குற்ற சம்பவங்கள் தொடர்பாக பாதிக்கப்பட்ட நபர்கள் அல்லது அவர்களின் உறவினர்கள் காவல் நிலையத்துக்குச் செல்லாமல் வீட்டில் இருந்தபடியே புகார் அளிக்கும் வகையிலான புதிய நடைமுறையை நாட்டிலேயே முதல்முறையாக தெலங்கானா மாநில காவல் துறை அறிமுகம் செய்ய உள்ளது. தெலங்கானா மாநில காவல் துறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவு (சிஐடி), இந்தப் புதிய திட்டத்தை அடுத்த வாரம் அறிமுகப்படுத்த உள்ளது.

இதுகுறித்து மாநில சிஐடி கூடுதல் காவல் துறை தலைமை இயக்குநர் (ஏடிஜிபி) சாரு சின்ஹா ஹைதராபாதில் புதன்கிழமை கூறியதாவது:

பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான (போக்ஸோ) பாலியல் துன்புறுத்தல்கள், எஸ்சி., எஸ்டி பிரிவினருக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றங்கள், குழந்தைத் திருமணங்கள், ராகிங் உள்ளிட்ட குற்றங்களால் பாதிக்கப்படுபவர்களில் பெரும்பாலானோர், காவல்நிலையத்துக்கு நேரில் வந்து புகார் தெரிவிக்க தயங்குகின்றனர்.

இதை உணர்ந்து, இதுபோன்ற குறிப்பிட்ட சில குற்ற சம்பவங்களில், காவல்நிலையத்தை மையப்படுத்திய வழக்குப் பதிவு (எஃப்ஐஆர்) என்ற நிலையிலிருந்து, குடிமக்களை மையப்படுத்திய வழக்குப் பதிவு நடைமுறையாக மாற்ற தெலங்கானா காவல் துறை முடிவெடுத்தது. இந்தப் புதிய நடைமுறையின்படி, போக்ஸோ உள்பட மேற்குறிப்பிட்ட குற்ற சம்பவங்களில் பாதிக்கப்படும் நபர்கள், புகாரைப் பதிவு செய்ய காவல் நிலையத்துக்குச் செல்ல வேண்டியதில்லை. அவர்களின் வீட்டில் இருந்தபடியே இதுதொடர்பான புகாரைப் பதிவு செய்யலாம்.

அதனடிப்படையில், போலீஸார் உடனடியாக பாதிக்கப்பட்ட நபரின் வீட்டுக்கோ, மருத்துவமனைக்கோ அல்லது அவரின் விருப்பத் தேர்வு அடிப்படையிலான இடத்துக்கோ சென்று பாதிக்கப்பட்டவரின் முதல்கட்ட வாக்குமூலத்தைப் பதிவு செய்வர்.

பின்னர், அந்த விவரங்கள் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்துக்கு அனுப்பப்பட்டு, எஃப்ஐஆர் பதிவு செய்யப்படுவதோடு, எஃப்ஐஆர் நகலும் பாதிக்கப்பட்ட நபரின் வீட்டுக்கே விநியோகிக்கப்பட்டுவிடும்.

இந்த நடைமுறை மூலம், குற்ற சம்பவங்கள் தொடர்பாக உரிய நேரத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரணை தொடங்கப்படும் என்பதோடு, பாதிக்கப்பட்ட நபர்கள் அலைக்கழிக்கப்படுவது முழுமையாகத் தவிர்க்கப்படும்.

இந்தப் புதிய நடைமுறை குறித்து போலீஸாருக்கு தற்போது பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஒரு வாரத்தில் இந்தப் பயிற்சி நிறைவுபெற்றுவிடும். எனவே, மாநிலத்தில் இந்தப் புதிய நடைமுறை வரும் 27-ஆம் தேதி முதல் அறிமுகப்படுத்தப்படும் என்றார்.

## அடல் ஓய்வூதியத் திட்டம்: 2030-31 வரை நீட்டிப்பு - மத்திய அமைச்சரவை ஒப்புதல்

**புதுடெல்லி, ஜன.23:**

டில்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அமைப்புசாராத் துறைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் உள்பட 18 முதல் 40 வயதுக்குட்பட்ட அனைத்து இந்தியக் குடிமக்களும் 60 வயதுக்குப் பிறகு மாதம் ரூ.1,000 முதல் ரூ.5,000 வரை உத்தரவாத ஓய்வூதியம் பெறுவதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டத்தை கடந்த 2015-ஆம் ஆண்டு மே 9-ஆம் தேதி மத்திய அரசு அறிமுகம் செய்தது. வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படுவர். சந்தாதாரரின் இறப்புக்குப் பிறகு அவரது துணைவருக்கும், அதன் பிறகு அவரால் நியமிக்கப்பட்ட பயனாளிக்கும் (நாமினி) பலன்கள் தொடரும். 2026-ஆம் ஆண்டு ஜனவரி 19-ஆம் தேதி கணக்கின்படி இந்தத் திட்டத்தில் 8.66 கோடி சந்தாதாரர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்தை வரும் 2030-31 நிதியாண்டு வரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எஸ்ஐடிபிஐ-க்கு ரூ. 5,000 கோடி பங்கு மூலதனம்

**புதுடெல்லி, ஜன.23:**

குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு (எம்எஸ்எம்இ) கடன் வழங்குவதை அதிகரிக்கும் நோக்கில் இந்திய சிறு நிறுவனங்கள் மேம்பாட்டு வங்கிக்கு (எஸ்ஐடிபிஐ) ரூ. 5,000 கோடி பங்கு மூலதன ஆதரவை அளிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. மத்திய நிதிச் சேவைகள் துறை (டிஎஃப்எஸ்) மூன்று தவணைகளாக இந்தப் பங்கு மூலதன ஆதரவை எஸ்ஐடிபிஐ-க்கு வழங்க உள்ளது. இந்தக் கூடுதல் பங்கு மூலதனம் மூலம், குறு, சிறு, நடுத்தர நிறுனங்களுக்கு நியாயமான வட்டி விகிதத்தில் எஸ்ஐடிபிஐ கடன் வழங்குவது அதிகரிக்கும். குறிப்பாக, இந்த வங்கி மூலம் 2025 நிதியாண்டில் 76.26 லட்சம் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு கடனுதவி வழங்கப்பட்ட நிலையில், 2028-ஆம் நிதியாண்டில் அது 1.02 கோடியாக அதிகரிக்கும் (25.74 லட்சம் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் கூடுதல் பயனாளிகளாக சேர்க்கப்படுவர்). இந்தத் துறையில் 1.12 கோடி புதிய வேலைவாய்ப்புகளும் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று அரசு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கர்நாடகத்தில் 106 கிலோ கஞ்சா பறிமுதல்: இருவர் கைது

**பெங்களூரு, ஜன.23:**

தென்கன்னட மாவட்டம், புத்தூர் காவல்நிலையத்துக்கு உளவுப்பிரிவு மூலம் கிடைத்த தகவலின் அடிப்படையில் மங்களூருக்கு செல்லும் சாலையில் போலீஸார் செவ்வாய்க்கிழமை வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, ஒரு கார் மற்றும் சரக்கு வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தனர். அப்போது, ஓட்டுநர்களின் நடத்தை வித்தியாசமாக இருந்ததால் வாகனத்தை முழுமையாக சோதித்துள்ளனர். இந்த சோதனையில் வாகனத்தில் 73 நெகிழி பொட்டலங்களில் பதுக்கிவைத்திருந்த 106.06 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர். இதன் மதிப்பு ரூ. 53 லட்சம் என போலீஸார் தெரிவித்தனர். மேலும், இந்த கஞ்சாவை கேரளம், மங்களூரில் விற்பனைக்காக எடுத்துச் செல்வது விசாரணையில் தெரியவந்தது. இதுதொடர்பாக பெல்தங்கடி வட்டம், சார்மடி கிராமத்தை சேர்ந்த பி. ரஃபீக் (37), அப்துல் சாதிக் (37) ஆகிய இருவரை போதைப்பொருள் தடுப்புச் சட்டத்தின் கீழ் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

## சட்டவிரோத சுரங்கத்தால் பெரும் பாதிப்பு: உச்சநீதிமன்றம்



**புதுடெல்லி, ஜன.23:**

இயற்கை எழில்மிகு நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட ஆரவல்லி மலைத் தொடர் குஜராத், ராஜஸ்தான், ஹரியாணா ஆகிய மாநிலங்களிலும், தில்லி யூனியன் பிரதேசத்திலும் பரவியுள்ளது.

இந்நிலையில், உள்ளூர் நிலப்பரப்பில் குறைந்தபட்சம் 100 மீட்டருக்கு மேற்பட்ட உயரத்தை உடைய மலை 'ஆரவல்லி மலை' என்றும், 500 மீட்டருக்கு இடைப்பட்ட இரண்டு அல்லது இரண்டுக்கும் அதிகமான, 100 மீட்டர் உயர மலைகளை 'ஆரவல்லி மலைத் தொடர்' என்றும் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அளித்த நிபுணர் குழு புதிய விளக்கத்தை உச்சநீதிமன்றத்தில் சமர்ப்பித்தது. இந்தவிளக்கத்தை ஏற்றுக்கொண்டு கடந்த ஆண்டு நவம்பர் 20-ஆம் தேதி உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இதனால் 100 மீட்டருக்கு கீழுள்ள மலைப் பகுதிகளில் சுரங்கப் பணிகள் நடைபெறும் எனவும், நிலத்தடி நீருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டு பாலைவன நிலமாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் உள்பட பலரும் எச்சரித்தனர்.

இதைத் தொடர்ந்து, ஆரவல்லி மலைத் தொடரின் இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதற்காக, அங்கு சுரங்கப் பணிகளுக்கான புதிய குத்தகைகளை வழங்க மாநில அரசுகளுக்குத் தடை விதித்து மத்திய அரசு கடந்த ஆண்டு டிசம்பர் 24- ஆம் தேதி உத்தரவிட்டது.

இருப்பினும், இந்த விவகாரம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில், உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து டிசம்பர் 29-ஆம் தேதி மீண்டும் விசாரித்தது.

அப்போது ஆரவல்லி மலை மற்றும் மலைத் தொடர் குறித்து சுற்றுச்சூழல் அமைச்சகம் அமைத்த குழு அளித்த பரிந்துரைகள், அதை ஏற்று உச்சநீதிமன்றம் நவம்பர் 20-ஆம் தேதி வெளியிட்ட உத்தரவுக்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.

இந்நிலையில், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி மற்றும் விபுல்.எம்.பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் புதன்கிழமை விசாரணை நடைபெற்றது.

அப்போது ஆரவல்லி மலை மற்றும் மலைத் தொடர் குறித்து புதிய விளக்கத்துக்கு ஏற்கெனவே விதித்த இடைக்காலத் தடை உத்தரவை நீதிபதிகள் நீட்டித்தனர்.

## கிரீன்லாந்தை கைப்பற்ற ராணுவத்தை பயன்படுத்த மாட்டோம்: ட்ரம்ப்

**வாஷிங்டன், ஜன.23:**

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்று வரும் உலகப் பொருளாதார மன்ற மாநாட்டு கூட்டத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் புதன்கிழமை உரையாற்றினார். அப்போது, கிரீன்லாந்து தீவை அமெரிக்காவுடன் இணைத்துக் கொள்ள எவ்வித ராணுவ பலத்தையும் பயன்படுத்தப் போவதில்லை என்று அவர் உறுதிபடத் தெரிவித்தார்.



இது குறித்து அவர் பேசியதாவது: அமெரிக்கப் பொருளாதாரம் அபரிமிதமான வளர்ச்சியை எட்டியுள்ள நிலையில், ஐரோப்பிய நாடுகள் சரியான திசையில் பயணிக்கவில்லை. கிரீன்லாந்தை நிர்வகிப்பதற்கும், அதனை பாதுகாப்பதற்கும் அமெரிக்காவால் மட்டுமே முடியும். உலகப் பாதுகாப்பிற்காக எங்களுக்கு கிரீன்லாந்து என்ற அந்தப் பனிப்பாறைத் தீவு தேவைப்படுகிறது, நீங்கள் அதனை தர சம்மதித்தால் அதற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருப்போம். மறுத்தால் அதனை நாங்கள் நினைவில் கொள்வோம். இந்த விவகாரத்தில் நேட்டோ நாடுகள் நியாயமற்ற வகையில் நடந்துகொள்கின்றன.

டென்மார்க்கிடமிருந்து கிரீன்லாந்தை வாங்குவது குறித்து உடனடிப் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளது. இரண்டாம் உலகப் போரின்போது ஆர்க்டிக் தீவுகளுக்கு அமெரிக்கா அளித்த பாதுகாப்பை மறந்துவிட்டு, டென்மார்க் நன்றியுணர்வின்றி நடந்து கொள்கிறது. உண்மையில் இந்த மிகப்பெரிய பாதுகாப்பற்ற தீவு வட அமெரிக்காவின் ஒரு பகுதியாகும். அது எங்கள் பிராந்தியம். அங்குள்ள கனிம வளங்களை வெட்டியெடுப்பதில் பல்வேறு சிரமங்கள் உள்ளன. நூற்றுக்கணக்கான அடி ஆழப் பனியைத் தோண்ட வேண்டியுள்ளது. ஆனால் அந்த வளங்களுக்காக மட்டும் நாங்கள் அதைக் கேட்கவில்லை; தேசிய பாதுகாப்பிற்காக அது தேவைப்படுகிறது. கிரீன்லாந்தை கைப்பற்ற ராணுவ பலத்தை பிரயோகிக்கும் எண்ணமில்லை. டென்மார்க்கிடம் பேச்சுவார்த்தை மூலமாகவே சுமூக முடிவை எட்ட விரும்புகிறோம். இவ்வாறு ட்ரம்ப் பேசினார்.

ஐ.நா. திறமையின்மை...: அதிபர் ட்ரம்பின் இரண்டாம் பதவிக்காலத்தின் ஓராண்டு நிறைவையொட்டி வெள்ளை மாளிகையில் அவர் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: ஐக்கிய நாடுகள் சபை ஒரு மகத்தான நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது. ஆனால், அது ஒருபோதும் தனது முழுத் திறனையும் வெளிப்படுத்தியதில்லை. அதன் காரணமாகவே, காசா மறுசீரமைப்பிற்காக நாங்கள் தற்போது ‘அமைதி வாரியம்’ என்ற அமைப்பை உருவாக்கியுள்ளோம். சர்வதேச விவகாரங்களில் ஐ.நா. சபை இன்னும் ஆக்கபூர்வமாகவும், சிறப்பாகவும் செயல்பட்டிருந்தால் இத்தகைய புதிய வாரியத்தின் தேவை இருந்திருக்காது என்பதே எனது எண்ணம்.

எனது இரண்டாவது பதவிக்காலத்தின் முதல் ஓராண்டு காலத்திலேயே எட்டு போர்ச் சூழல்களை நான் முடிவுக்குக் கொண்டு வந்துள்ளேன். இதில், ஒரு போரைத் தடுப்பதற்குக்கூட ஐ.நா. சபை எனக்கு உதவவில்லை. அதற்காக நான் அவர்களைக் குறை கூறவில்லை; உதவிக்காக நான் அவர்களை அணுகவும் இல்லை.

அந்தந்த நாட்டு அதிபர்களையும், பிரதமர்களையும் நேரில் சந்தித்துப் பேசி, சுமூகமான முறையில் பிரச்சினைகளைத் தீர்த்தேன். உண்மையில், நான் தீர்த்து வைத்த ஒவ்வொரு போரையும் ஐ.நா. சபையே முன்னின்று முடிவுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் அவ்வாறு செய்வதில்லை. இருப்பினும், ஐ.நா. சபை தொடர்ந்து செயல்பட வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். ஏனெனில் அந்த அமைப்பின் பின்னணியில் உள்ள நோக்கம் மிகவும் வலிமையானது. இவ்வாறு அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார்.

## போலி ‘பிஸ்ஸா ஹட்’ உணவகத்தை திறந்து வைத்த பாக். அமைச்சர் - நெட்டிசன்கள் கிண்டல்




**சியால்கோட், ஜன.23:**

பாகிஸ்தானின் சியால்கோட் ராணுவக் குடியிருப்பு பகுதியில் புதிதாகத் தொடங்கப்பட்ட ஒரு உணவகத்துக்கு, அமெரிக்காவின் புகழ்பெற்ற பிஸ்ஸா ஹட் நிறுவனத்தின் பெயர் மற்றும் சின்னங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. இந்த உணவகத்தின் திறப்பு விழா மிக விமரிசையாக நடைபெற்றது.

மலர் அலங்காரங்கள், சிவப்புக் கம்பள வரவேற்பு என அமர்க்களப்பட்ட அந்த விழாவில், பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ரிப்பனை வெட்டி உணவகத்தை தொடங்கி வைத்தார். இந்தத் திறப்பு விழா தொடர்பான புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகின. இதைப் பார்த்த பிஸ்ஸா ஹட் பாகிஸ்தான் நிறுவனம் உடனடியாக ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதில், “சியால்கோட்டில் திறக்கப்பட்டுள்ள அந்த உணவகம் எங்களது அதிகாரப்பூர்வ கிளை அல்ல. அது போலியானது மற்றும் எங்கள் நிறுவன பெயர் தவறாகப் பயன்படுத்துகிறது. இதற்கும் பிஸ்ஸா ஹட் நிறுவனத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எங்கள் பெயரை பயன்படுத்த தடை விதிக்கக் கோரி புகார் அளித்துள்ளோம்” என்று கூறப்பட்டுள்ளது. சமூக வலைதளங்களில் கேலி இதனிடையே, நாட்டின் பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் ஒருவர், ஒரு உணவகத்தை திறந்து வைப்பதற்கு முன்பாக அது உண்மையானதா என்பதைக் கூட சரி பார்க்காதது ஏன் என்று நெட்டிசன்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

சமூக வலைதளம் ஒன்றில், “ஒரு ரிப்பன் வெட்டு, ஒரு மறுப்பு அறிக்கை - இது ஒரு புதிய உலக சாதனை” என ஒருவர் பதிவிட்டுள்ளார். “பாதுகாப்பு அமைச்சருக்கே பாதுகாப்பு இல்லாத நாடு” என்று மற்றொருவர் பதிவிட்டுள்ளார்.

## ஜப்பான் முன்னாள் பிரதமர் கொலை வழக்கில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை

**டோக்கியோ, ஜன.23:**

ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே கொலை வழக்கில், குற்றவாளிக்கு அந்நாட்டு மாவட்ட நீதிமன்றம் நேற்று ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.



ஜப்பானின் சுதந்திர ஜனநாயக கட்சித் தலைவராகவும் அந்நாட்டின் பிரதமராகவும் (டிச.2012 முதல் செப் .2020 வரை) ஷின்சோ அபே பதவி வகித்துள்ளார். கடந்த 2022 ஜூலை 8ம் தேதி மேற்கு ஜப்பானிய நகரமான நாரா வில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த அபே துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். துப்பாக்கியால் சுட்ட டெட்சுயா யமகாமி (45) சம்பவ இடத்திலேயே கைது செய்யப்பட்டார். இந்தத் துப்பாக்கிச் சூடு தொடர்பான வழக்கு விசாரணையின் போது, தன் மீதான கொலைக் குற்றச்சாட்டை யமகாமி ஒப்புக்கொண்டார். இரு தரப்பு வாதம் முடிந்ததையடுத்து, நாரா மாவட்ட நீதிமன்றம், அரசுத் தரப்பு வழக்கறிஞர்களின் கோரிக்கையை ஏற்று, குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை வழங்கி நேற்று உத்தரவிட்டது. தென் கொரியாவின் சர்ச்சைக்குரிய ஒரு மத அமைப்பில் தீவிர உறுப்பினராக இருந்துள்ளார் யமகாமியின் தாய்.

இதன் அடிப்படையில், அந்த அமைப்புக்குப் பெரும் தொகையை நன்கொடையாக வழங்கியதால் அவரது குடும்பம் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலைக்குக் காரணமான அந்த அமைப்புக்கு ஆதரவாக இருந்ததால் ஷின்சோ அபேவை சுட்டுக் கொன்றதாக யமகாமி வாக்குமூலம் அளித்துள்ளார்.

## போரை முடிவுக்கு கொண்டு வர ரஷியா-உக்ரைன் விருப்பம்: டாவோஸ் மாநாட்டில் டிரம்ப் பேச்சு

**டாவோஸ், ஜன.23:**

சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் உலக பொருளாதார மன்றத்தின் 56-வது வருடாந்திர உச்சிமாநாடு 23-ந்தேதி வரை 5 நாட்கள் நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளை சேர்ந்த உலக தலைவர்கள் கலந்து கொண்டுள்ளனர். இந்தியாவில் இருந்து மத்திய மந்திரிகள், மராட்டியம், அசாம், ஆந்திர பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களை சேர்ந்த முதல்-மந்திரிகள் பங்கேற்று சிறப்புரையாற்றி வருகின்றனர். இந்நிலையில், டாவோஸ் மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் பேசும்போது, ரஷியா-உக்ரைன் மோதல், நேட்டோ மற்றும் போரில் அமெரிக்காவின் பங்கு ஆகியவற்றை பற்றி குறிப்பிட்டார். ஜெலன்ஸ்கிக்கும், புதினுக்கும் இடையே வெறுப்புணர்வு இருந்தபோதும், போரை முடிவுக்கு கொண்டு வர முடியும் என அப்போது கூறினார்.

அவர் பேசும்போது, நான் 8-க்கும் மேற்பட்ட போர்களை நிறுத்தி தீர்வு கண்டுள்ளேன். அதனால், இதுவும் அதுபோன்று எளிதில் நடந்து முடிந்து விடும் என நினைத்தேன். சில போர்களை எல்லாம் ஒரு சில மணிநேரத்தில் நிறுத்தி தீர்வு கண்டேன். ஏனென்றால், அந்தளவுக்கு இதுபோன்ற விவகாரத்தில் நான் நன்றாக செயல்படுபவன் என்பது உங்களுக்கே தெரியும் என்றார். இந்த விசயங்களை எல்லாம் ஐ.நா. அமைப்பு செய்ய வேண்டும். நான் செய்ய கூடாது. ஆனால் அது ஒரு விசயம் இல்லை. நாங்கள் கோடிக்கணக்கான மக்களை காப்பாற்றி இருக்கிறோம் என்றும் பேசியுள்ளார்.

3 ஆண்டுகளை கடந்தும் போர் முடிவுக்கு வராமல் உள்ளது. போர் எதிரொலியாக லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு உள்ளனர். போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது.

## போரால் சீரழிந்த உக்ரைனின் மறுகட்டமைப்புக்கு... ரஷிய சொத்துகளை தர தயார்: புதின்

**மாஸ்கோ, ஜன.23:**




உக்ரைன் நாடு, நேட்டோவில் சேரும் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, 2022-ம் ஆண்டு பிப்ரவரியில், அந்நாட்டின் மீது ராணுவ நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்ற பெயரில் ரஷியா போர் தொடுத்தது. இந்த போரானது 3 ஆண்டுகளை கடந்தும் முடிவுக்கு வராமல் தொடர்ந்து நீடித்து வருகிறது. போர் எதிரொலியாக லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு உள்ளதுடன் லட்சக்கணக்கானோர் புலம்பெயர்ந்து சென்று விட்டனர்.

போரை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தலைமையிலான அரசு ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில், அமெரிக்காவின் முயற்சியில் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பிறகு, போரால் கடுமையாக பாதிக்கப்பட்ட உக்ரைனின் மறுகட்டமைப்பு பணிகளுக்கு, அமெரிக்காவில் முடக்கி வைக்கப்பட்டு உள்ள ரஷிய சொத்துகளை தருவதற்கு தயார் என புதின் கூறியுள்ளார். புதினை, டிரம்ப் அரசில் சிறப்பு தூதர்களாக செயல்பட்டு வரும் ஸ்டீவ் விட்காப் மற்றும் ஜாரெட் குஷ்னர் ஆகியோர் இன்று சந்தித்து உக்ரைன் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சூழலில், ரஷிய பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் புதின் நேற்றிரவு பேசும்போது, காசா போர்நிறுத்த ஒப்பந்த திட்டம் தொடர்பான டிரம்ப்பின் அமைதி வாரியத்திற்கு 100 கோடி அமெரிக்க டாலர்களை (ரூ.9,161 கோடி) ரஷியா நன்கொடையாக வழங்கும் என கூறினார். அமெரிக்காவில் முடக்கி வைக்கப்பட்டு உள்ள ரஷிய சொத்துகளில் இருந்து அவை வழங்கப்படும். இந்த சொத்துகளில் கிடைக்கும் மீத தொகையை கொண்டு, போரால் பாதிக்கப்பட்ட உக்ரைனின் பகுதிகளில் மறுகட்டமைப்பு பணிகளை மேற்கொள்ள பயன்படுத்தப்படும். இதற்கான சாத்தியங்கள் தொடர்பாக அமெரிக்க நிர்வாகத்தின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறோம் என்றும் கூறினார்.

## அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தொடங்கிய அமைப்பில் இணைய சீனா மறுப்பு!

**வாஷிங்டன், ஜன.23:**

பெய்ஜிங்: ட்ரம்ப் தொடங்கிய ‘தி போர்டு ஆப் பீஸ்’ என்ற அமைப்பில் இணைவதற்கான அமெரிக்காவின் அழைப்பை சீனா நிராகரித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையை உறுதியாக ஆதரிப்பதாகவும் சீனா தெரிவித்துள்ளது.




இது தொடர்பாக சீன வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட தகவலை இந்தியாவுக்கான சீன தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் யூ ஜிங் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அதில், ‘அமைதி வாரியத்தில் இணைவதற்கான அமெரிக்காவின் அழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. சீனா எப்போதுமே உண்மையான பலதரப்பு வாதத்தைப் பின்பற்றுகிறது.

சர்வதேச சூழல் எவ்வாறு மாறினாலும், ஐ.நாவை மையமாகக் கொண்ட சர்வதேச அமைப்பு, சர்வதேச சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒழுங்கு, ஐ.நா சாசனத்தின் நோக்கங்கள் மற்றும் கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் சர்வதேச உறவுகளை நிர்வகிக்கும் அடிப்படை விதிமுறைகளைப் பாதுகாப்பதில் சீனா உறுதியாக இருக்கும்’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெறும் உலகப் பொருளாதார மன்றக் கூட்டத்தில் பங்கேற்ற அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், உலக நாடுகளின் ஆதரவை திரட்டுவதில் தீவிரம் காட்டி வருகிறார்.

இந்நிலையில், அந்த வாரியத்தில் இணையப் போவதில்லை என்ற முடிவை உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாகத் திகழும் சீனா அறிவித்திருக்கிறது.

சீனாவின் இந்த முடிவு, ட்ரம்ப்பின் முயற்சிகளுக்கு மிகப் பெரிய பின்னடைவாகக் கருதப்படுகிறது.

## பாகிஸ்தான்: வணிக வளாக தீ விபத்தில் பலி எண்ணிக்கை 61 ஆக உயர்வு

**கராச்சி, ஜன.23:**

பாகிஸ்தானின் கராச்சி நகரில் எம்.ஏ. ஜின்னா சாலையில் குல் பிளாசா என்ற பெயரில் வணிக வளாகம் ஒன்று அமைந்துள்ளது. இந்நிலையில் கடந்த சனிக்கிழமை இரவு திடீரென இதில் தீ விபத்து ஏற்பட்டது. குல் பிளாசாவில் மொத்தம் மற்றும் சில்லரை விற்பனை செய்யப்படும் கடைகள் உள்பட கட்டிடத்தின் 3 தளங்களிலும் தீ பரவியது. இந்த தீ விபத்தில் பலி எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதுபற்றி கராச்சி நகர தெற்கு பகுதிக்கான காவல் துறை டி.ஐ.ஜி. சையது ஆசாத் ரசா கூறும்போது, துபாய் கிராக்கரி என்ற பெயரிடப்பட்ட ஒரு கடையில் இருந்து மட்டுமே 30 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன என கூறினார். இதுதவிர 3 உடல்கள் மீட்கப்பட்டன. இதனால், பலி எண்ணிக்கை 31 ஆக உயர்ந்தது. ஒட்டுமொத்த பலி எண்ணிக்கை 61 ஆக உயர்ந்து உள்ளது. எனினும், மரபணு பரிசோதனை அறிக்கைகளின் முடிவிலேயே இறுதியான விவரங்கள் உறுதிப்படுத்தப்படும் என தெரிவித்து உள்ளார். ஒரு கடையில் ஏற்பட்ட மின் கசிவால் தீ பிடித்து, அது மளமளவென பல்வேறு கடைகளுக்கும் பரவியுள்ளது என சையது ஆசாத் தெரிவித்து உள்ளார். வெடிகுண்டு செயலிழப்பு குழுவினரின் முதல்கட்ட விசாரணை அடிப்படையில், வெடிகுண்டு தாக்குதலுக்கான தொடர்பு தெரியவரவில்லை. அதற்கான சான்றுகள் எதுவும் கிடைக்க பெறவில்லை என்றும் அவர் கூறினார்.

## “ஐரோப்பிய பொருளாதார நலன்களுக்கு இந்தியா அத்தியாவசியமானதாக மாறி வருகிறது” - EU பிரதிநிதி பேச்சு

**பிரஸ்ஸல்ஸ், ஜன.23:**

இந்தியாவில் நடைபெற உள்ள குடியரசு தின கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவும், வரும் 27-ம் தேதி நடைபெற உள்ள 16வது ஐரோப்பிய ஒன்றியம்-இந்தியா இடையேயான உச்சிமாநாட்டில் பங்கேற்கவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் மட்டத் தலைவர்கள் இந்தியாவுக்கு வர உள்ள நிலையில், அந்த அமைப்பின் உயர் பிரதிநிதி காஜா கல்லாஸ், ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.



அப்போது அவர் கூறியதாவது: ஐரோப்பாவின் பொருளாதார மீள்திறனுக்கு இந்தியா அத்தியாவசியமானதாக மாறி வருகிறது. வர்த்தகம், பாதுகாப்பு, தொழில்நுட்பம், மக்களுக்கு இடையேயான உறவு என பல துறைகளை உள்ளடக்கிய ஒரு வலிமையான புதிய செயல்திட்டத்தை இந்தியாவுடன் இணைந்து செயல்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் தயாராக உள்ளது. புதுடெல்லியில் நடைபெற உள்ள சந்திப்புகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

போர்கள், நிர்பந்தங்கள், பொருளாதார பிளவுகள் ஆகியவற்றால் சர்வதேச ஒழுங்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அழுத்தத்துக்கு உள்ளாகி உள்ளது. இந்த நேரத்தில், இரண்டு பெரிய ஜனநாயக சக்திகள் தயங்கிக் கொண்டிருக்க முடியாது. சர்வதேச சட்டம், ஐ.நா. சாசனம் ஆகியவற்றை பேணிக்காக்கும் பொறுப்பு இரு தரப்பினருக்கும் உள்ளது. உச்சிமாநாட்டின் மையாக, புதிய மற்றும் விரிவான ஐரோப்பிய ஒன்றியம் -இந்தியா இடையேயான கூட்டு மூலோபாய நிகழ்ச்சி நிரலை ஏற்றுக்கொள்வது இருக்கும். இது 2030-ம் ஆண்டுக்கான கூட்டாண்மையின் பாதையை வகுக்கும். தலைவர்கள் திட்டம் சார்ந்த வெறும் அறிக்கைகளை மட்டும் வெளியிடாமல், இரு தரப்பு உறவை வார்த்தைகளில் இருந்து செயல்களுக்குக் கொண்டு செல்லும் வகையில் உறுதியான முடிவுகளுக்கு ஒப்புதல் அளிப்பார்கள்.

மூன்று முக்கிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட உள்ளன. ஒன்று, ஐரோப்பிய ஒன்றியம் -இந்தியா இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளை முடிவுக்குக் கொண்டு வர இரு தரப்பினரும் இலக்கு நிர்ணயித்துள்ளனர். இரண்டாவதாக, ஐரோப்பிய ஒன்றியம் - இந்தியா இடையே பாதுகாப்பு, தற்காப்பு கூட்டாண்மைக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மூன்றாவதாக, மக்களுக்கு இடையேயான உறவைமேலும் வலுப்படுத்தும் நோக்கில் ஒரு விரிவான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாக திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம், மாணவர்கள், தொழிலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், நிபுணர்களின் இயக்கம் எளிதாகும் என எதிர்பார்க்கப்படுகிறது என பேசினார்.

## நைஜீரியா: ஆயுதக்குழுவால் கடத்தப்பட்டவர்களில் 62 பேர் மீட்பு

**அபுஜா, ஜன.23:**

மேற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு நைஜீரியா. இந்நாட்டில் பல்வேறு பயங்கரவாத அமைப்புகள், ஆயுதக்குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த பயங்கரவாத அமைப்புகளை சேர்ந்தவர்கள் அவ்வப்போது கிராமத்தினர், பள்ளிக்குழந்தைகளை கடத்தி செல்லும் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதனிடையே, மத வழிபாட்டு தலங்களுக்குள் துப்பாக்கியுடன் நுழைந்த ஆயுத கும்பல் அங்கிருந்த 150 பேரை துப்பாக்கி முனையில் கடத்தி சென்றனர். இந்த சம்பவம் குறித்து தகவலறிந்த போலீசார், கடத்தப்பட்டவர்களை தேடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், ஆயுதக்குழுவால் கடத்தப்பட்டவர்களில் 62 பேரை பாதுகாப்புப்படையினர் நேற்று அதிரடியாக மீட்டனர். அந்நாட்டின் ஷம்பரா மாகாணத்தில் ஆயுதக்க்குழுவால் பணய கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டிருந்த 62 பேரை பாதுகாப்புப்படையினர் மீட்டனர். மீட்கப்படவர்களில் எத்தனைபேர் கிறிஸ்தவ மத வழிபாட்டு தலத்தில் இருந்து கடத்தப்பட்டவர்கள் என்ற விவரத்தை பாதுகாப்புப்படையினர் வெளியிடவில்லை.